விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 27 வியாழக்கிழமை (10.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 082

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## அரசியலமைப்பு பேரவையாக
## நாடாளுமன்றம் மாற்றம்
### அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து இணக்கம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை வரைபதற்காக நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு சாசன பேரவையாக மாற்றும் பிரேரணைக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் அளித்துள்ளது. இது தொடர்பாக அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற அனைத்துக்கட்சிகளும் நேற்று ஒருமனதாக இணக்கம் தெரிவித்துள்ளன. பொது எதிரணியினரால் குறித்த பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படும் என கூறப்பட்ட போதிலும் எதிர்ப்பின்றிய இந்நடவடிக்கை நல்லாட்சி அரசின் வெற்றிகளில் ஒன்றாக கணிக்கப்படுகிறது.

04 ஆம் பக்கம் பார்க்க....

### ஐ.நா ஆணையாளர் இன்று விசேட உரை



(ஜெனிவா)

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா

24 ஆம் பக்கம் பார்க்க....

### ஆலய மரத்தில் 'கண்' தோன்றல்



(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினமான கடந்த 7-ம் திகதி அல்வாய் வடக்கில் உள்ள ஆலயம் ஒன்றில் உள்ள

23 ஆம் பக்கம் பார்க்க....

## நாமல் ராஜபக்ஷ மீது நிதி மோசடி வழக்கு
### வங்கிக் கணக்கை முடக்கவும் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ மீது பொலிஸாரின் நிதி மோசடி புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்



24 ஆம் பக்கம் பார்க்க....

### தம்மாலோக தேரர் விளக்கமறியலில்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட உடுவே தம்மா லோக தேரரை எதிர்வரும 17-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உரிய ஆவணங்கள் இன்றி யானைக் குட்டியை தன்னகத்தே வைத்திருந்த குற்றச்சாட்டில் உடுவே தம்மாலோக தேரர் நேற்று குற்றப்

24 ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்றில் ஆஜரான வேளை கைதிகள் இருவர் மயக்கம்
### மருத்துவ உதவி வழங்க நீதவான் உத்தரவு

(கொழும்பு)

மகசின் சிறைச்சாலையில் இன்று 17 ஆவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு சரியான முறையில் மருத்துவ சிகிச்சைகளை வழங்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொழும்பு நீதவான நீதிமன்ற நீதிபதி ஆரணி அடீகல நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அவர்களுடைய வழக்கு விசாரணை நாளை வெள்ளிக்கிழமை வரைஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உணவு தவிர்ப்பு போராட்டத்

23 ஆம் பக்கம் பார்க்க....

### அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் நேற்று காலமானார்



(கொழும்பு)

வணக்கத்துக்குரிய அஸ்கிரிய

24 ஆம் பக்கம் பார்க்க....

## மாணவியை கடத்தி பாலியல் வல்லுறவு; குடும்பஸ்தருக்கு 15 ஆண்டு சிறை
### மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவரைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு கொண்ட குடும்பஸ்தர் ஒருவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி ம.இளஞ்செழியன் 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நேற்றையதினம் தீர்ப்பளித்துள்ளார்.

அத்துடன் 30 ஆயிரம் ரூபாய் தண்டமும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 2 லட்சம் ரூபாய் நட்டஈடு செலுத்த வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி வல்

24 ஆம் பக்கம் பார்க்க....

### கைக்குண்டு கண்டெடுப்பு



(யாழ்ப்பாணம்)

அராலி காக்கைதீவு ஆனைகோட்டை பகுதியை இணைக்கும

23 ஆம் பக்கம் பார்க்க....

### வடக்கு ஆசிரிய வெற்றிடங்களுக்கான
## நியமனம் பெறும் பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் 23-ம் பக்கத்தில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் மூலம் ஆசிரியர் சேவை 3.1 (அ) இற்கு நியமனம் வழங்கப்பட தெரிவான பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் தமிழ், புவியியல், பொருளியல், கணக்கீடு ஆகிய பாடங்களுக்கும் சிங்கள மொழி மூல பாடசாலைகளில் நிலவும் சிங்கள, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவை 3-1(அ) இற்கு நியமனம்

24 ஆம் பக்கம் பார்க்க....

### தமிழீழ வைப்பகம் # 150 கிலோ தங்கம்
## இராணுவ வசமுள்ள நகைகளை மீளளிக்க கோரி நாடாளுமன்றில் நேற்று பெரும் விவாதம்

(கொழும்பு)

இறுதி போர் முடிவடைந்து 6 வருடங்கள் ஆகியும் தமிழீழ விடுதலை புலிகளிடம் இருந்து கைப்பற்றியதாக கூறப்படும் வடக்கு பொதுமகளின் தங்க ஆபரணங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று ஜே.வி.பி கேள்வி எழுப்பியது.

இதன்போது தமிழீழ வைப்பகங்களில் தமது ஆபரணங்களை அடகு வைத்தவர்கள் உட்பட ஆபரணங்களுக்குச் சொந்தக்காரர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ, பிரதமருடனான கேள்வி நேரத்தில் இந்த

23 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை குயின்மேரி அன்னம்மா

(கமலா அக்கா / அன்னம்மா)



42/6 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் - சப்பச்சி மாவடி கோவில் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை குயின்மேரி அன்னம்மா அவர்கள் 08.03.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரி அப்பாத்துரை, தொன் திரேசியா தம்பதிகளின் அன்பான மகளும், காலஞ்சென்ற மனுவல் ஆனாயி அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், வின்சன் றெமிஜியஸ், காலஞ்சென்ற எட்மன் றெஜினோல்ட் மற்றும் நிமால் ஜோன்சன் (பிரான்ஸ்), கனின்ரன் கனீசியஸ், றொபின்சன் அமலதாஸ் (பிரான்ஸ்), றோக்ஜெனீசியஸ் (குகன்), விக்டோரியா, சிசிலியா, டெனிசியா, யான்சியா (பிரான்ஸ்) கனிசியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தங்கத்துரை, குணரத்தினம், காலஞ்சென்ற கமலநாதன், செபஸ்ரியன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் லோரன்ஸ் (பாலா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவமணி, மேரி மற்றில்டா ஆகியோரின் அன்பு மைத்துனியும், புஸ்பம், மெற்றி, சாள்ஸ், பிரயற், பரிமளம், மகேஸ் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், கொக்கோ, செல்வம், ரதி, றோஸ், இராஜேஸ், மல்லிகா ஆகியோரின் அன்பு மச்சாளும், அனிஸ்ரா, அனித்தா, வினிஸ்ரா, வினித்தா, டுஷாந்தினி, றெஜிக்கா, றெஜிஸ்ரா, றெஜிஸ்ரன், நிமாலினி, ஷாலினி, நிபோன்ஸன், ஜமிர்த்தா, கனிஸ்ரா, வினிஸ்ரன், வினிஸ்ரா, கலிஸ்ரன், விதுர்ஷன், றொனிஷாந், டெனிசியன், தயானி, தர்ஷினி, தர்சதன், தயாளன், சிசில் றெமின்டஸ், கம்சன், கம்ஷாயினி, கனிசியா, மதுரா, ஜெனிஸ்ரன், கனிஸ்ரன், றொபின்ஸ்ரெலா, ரெக்ஸ்ரெலா, ரொனிக்ஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஒகஸ்ரின், ஜெனிற்ரன், எரோன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் திருவுடலமானது இன்று (10.03.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இறுதி சமயச் சடங்குகளிற்காக சென்.லிகோரியார் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பின்னர் சென்.லிகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சப்பச்சிமாவடி கோவில் வீதி, சாவகச்சேரி.
077 926 5447

(3934)

தகவல் :
குடும்பத்தினர்.

## திருமதி நடராசா தங்கபூவதி (பொற்கொடி)



நல்லூரரை பிறப்பிடமாகவும் செட்டித்தெரு, நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா தங்கபூவதி (பொற்கொடி) 09.03.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகம்மாவின் அன்பு மகளும், அளவெட்டியை சேர்ந்த காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும், காலஞ்சென்ற மகிழ்ச்சிதரன் (செல்வன்), சாந்தி (குடும்ப நல உதவியாளர் - யாழ்.மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராகவனின் (சிரேஷ்ட சுகாதார மேற்பார்வையாளர் - யாழ்.மாநகரசபை) அன்பு மாமியாரும், ஜெகஜீவன் (பரி.யோவான் கல்லூரி), கிருசானி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (ஐயாண்ணை), பவளம், லீலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10.03.2016 இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பகல் 11.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செட்டித் தெரு, நல்லூர்.
077 667 0044

(3835)

தகவல் :
இ.இராகவன் (மருமகன்)
இ.சாந்தி (மகள்)

# இலங்.மனித உரிமை ஆணைக்குழு கைதிகளுடன் நேரில் சந்திப்பு

(கொழும்பு)

புதிய மகசின் சிறைச்சாலையில் உணவுத்தவிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் உட்பட 5 பேர் கொண்ட குழுவினர் நேற்றைய தினம் சந்தித்துள்ளனர்.

உணவுத்தவிர்ப்புப் பேராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் உண்மை நிலையினை வெளிப்படுத்தக்கோரி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் அரசியல் கைதிகளின் உறவினர்களால் நேற்று முன்தினம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நேற்றையதினம் சிறைசாலைக்கு விஜயம் மேற்கொண்ட மனித உரிமை ஆணைக்குழுவினா் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகளை சந்தித்து அவர்களின் உடல் நிலை குறித்து விசாரித்ததுடன் குறித்த கைதிகள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட முழு விபரங்களையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

சுமாா் ஒன்றரை மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சந்திப்பின் பின்னர் கைதிகளின் உடல்நிலை குறித்து ஜனாதிபதியுடன் பேசுவதாகவும், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கைதிகளின் நிலையினை தெரியப்படுத்துவதாகவும், சர்வதேச மனித உரிமை குழுவின ஊடாக நல்ல முடிவை பெற்றுத்தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளிடம் தெரிவித்தனர். (செ-9)


## இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான அறிவித்தல்

இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை கற்கை நெறி மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 14/ 03/ 2016-ம் திகதி ஆரம்பமாகின்றது.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்

08.03.2016

(C-3936)

கிளி.பூநகரி கரியாலை நாகபடுவான் குளக்கட்டு தான்தோன்றி ஐயனாரின் அருளாசியுடன் மணிவிழா சிறக்க வாழ்த்துகிறோம்



‘கல்விக் கதிரவன்’
‘ஈகைக் காவலன்’
‘இறை பணி வேந்தன்’

E.S.P. நாகரத்தினம்

காலத்தின் தேவையை அறிந்து
கல்வியும் இறைபணியும் ஆற்றிடும்
கல்விக் காருண்யனின் எதிர்காலம்
சிறக்க இறைவனை வேண்டுகின்றோம்

(3834)

45/12, பூநாறி வீதி,
கொக்குவில் மேற்கு.

அன்புடன் வாழ்த்தும்
வெற்றிவேல் கனகநாயகம்

13.03.2016 ஞாயிறு யா/ இராமநாதன் வீதி ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ள மணிவிழாவை ஒட்டிய

மணிவிழா வாழ்த்து



“ கல்விக் காருண்யன் ” “ பொன்மனச் செம்மல் ”
“ மனிதநேய ஈகையாளன் ”
எனும் கௌரவப் பட்டங்களைப் பெற்ற
உயர்திரு.

E.S.P. நாகரத்தினம் அவர்கள்

அன்பின் உறைவிடமாய்
பார் போற்றும் பண்பின் சிகரமாய்
பரிவுடனே உதவிடும் காருண்யனே
நீண்டகாலம் உம்சேவை
இப் பாரினிலே நிலைக்கட்டும்
சகல சௌபாக்கியங்களும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ இம்
மணிவிழா தன்னில் மனதார வாழ்த்துகின்றோம்.

(C-3939)

வாழ்த்துவோர் :
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

இல 41 , பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி ஆசிவேண்டி வணங்குகின்றோம்



இணுவிலைச் சேர்ந்த சித்தாந்த ரத்தினம்
சிவஸ்ரீ குமாரராஜக் குருக்கள் அவர்கள்
2015-ம் ஆண்டு திருவாவடுதுறை ஆதினத்தால்
நடத்தப்பட்ட சைவசித்தாந்த பயிற்சி
வகுப்பை பூர்த்திசெய்து தேர்ச்சி பெற்று
“சித்தாந்த ரத்தினம்” என்னும்
விருது பெற்றமையை பாராட்டி
வாழ்த்தி ஆசி வேண்டுகின்றோம்.

(C-3938)

இணுவில் கந்தசாமி கோவிலடி
இணுவில்.

வாழ்த்துபவர் :
சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ நாகரட்ண கலாதரக் குருக்கள் M.A
கோவிற்கடவை, துன்னாலை.

# விசேட நீதிமன்றம் அமைத்து பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்




## முதலமைச்சர், ஆளுநர் அலுவலகம் முன் யாழில் நேற்று மக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**விசேட நீதிமன்றம் அமைத்து வடக்கு கிழக்கில் பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கக்கோரி வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம் முன்பாக பெண்கள் அமைப் புக்கள நேற்றைய தினம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டம் வடக்கு மாகாண ஆளுநர், சிறுவர் மகளிர் இராஜாங்க அமைச்சர் ஆகியோரது அலுவலகங்கள் முன்பாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**








...ங்கள்: உசாமின்

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தில் பெருமளவிலான பெண்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தனர். சர்வதேச மகளிர் தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையிலேயே தாம் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்ததாக ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் முதலமைச்சர் அலுவலகம் முன்பாக நேற்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகிய இப்போராட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை முன்னெடுக்கப்பட்டு, பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரது அலுவலகம் முன்பாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருந்தன.


பச்சிளம்குழந்தை வெளியே செல்ல விதியின்றி வீட்டில் என்றால்! நல்லாட்சி இங்கு ஏது?, நாங்கள் நடமாட நடமாடும் பொலிஸ் நிலையம் எங்களுக்கு வேண்டும், உலகமே ஏன் உறங்குகின்றாய்? பிள்ளைகளை காக்க துணிவு கொள், பிள்ளைகளை சீரழிக்கும் மிருகங்களுக்கு ஏன் தண்டனை தாமதம்? மரண தண்டனை வழங்கு, பாலியல் வன்கொடுமைகளை விசாரிக்க விசேட நீதிமன்றம் வேண்டும்.

சமூகமே ஏன் உறங்குகின்றாய்? எங்கள் பிள்ளைகளை காக்க துணிவு கொள், பாலியல் வழக்குகளுக்கு மரபணு பரிசோதனை அறிக்கை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பித்தல் சட்டமாக்கப்படல் வேண்டும். மகளிர் தினமும் எமக்கோ துக்கதினம். ஏன் இந்த நிலை?, நாங்கள் பெண்கள் மட்டுமல்ல சகோதரிகள், பிள்ளைகள், தாய்மார்கள், ஆண்களே இதை மறக்காதீர்கள், ஏடு தாண்டா பெண் சட்டங்க ளுக்கு கொஞ்சம் உயிர் தாருங்கள் என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பெண்களின் இந்த போராட்டத்தின் போது பொலிஸாரின் பிரசன்னமும் காணப்பட்டிருந்தது. சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் குறித்த கவனஈர்ப்பில்கலந்து கொண்டு பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியிருந்தனர். தாம் திருகோணமலை மாவட்டத்தில் குறித்த கவனயீர்ப்பினை முன்னெடுத்து கிழக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றினை கையளித்திருந்ததாகவும், அதன் பின்னரே, தற்போது வடக்கு மாகாண முதலமைச்சரினை சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வடக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர், இராஜாங்க அமைச்சர் ஆகியோரிடம் மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டது. மேலும் வடக்கு கிழக்கில் தற்போது சிறுவர் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதனையும் அவர்கள் ஊடகங்களிற்கு சுட்டிக்காட்டி, இதற்கு பொலிஸ் மற்றும் சட்டத் துறையின் போதிய நடவடிக்கையின்மையே காரணம் எனவும் சாடியிருந்தனர். (இ-4)

## இலங்கை-பாகிஸ்தான் ஜனாதிபதிகள் சந்திப்பு



பாகிஸ்தான் ஜனாதிபதி மமனும் ஹுசேன் நேற்று முன்தினம் இலங்கைக்கு திடீர் விஜயம் செய்தார்.

இந்தோனேசியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வழியில் இலங்கைக்கு வந்த அவர் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது...

## 300யானைகள் 1000 மான்கள்

### மத்தள விமான நிலையத்திற்கு அருகில்

மத்தள சர்வதேச விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் 300 காட்டு யானைகளும் 1000 மான்களும் நிர்க்கதியாகியுள்ளதாக நிரந்தர அபிவிருத்தி மற்றும் வனவிலங்கு அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினைக்கு தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கும் வகையில் அம்பாந்தோட்டை அரசியல்வாதிகள், விமான நிலைய அதிகாரிகள், துறைமுக அதிகாரிகள் மற்றும் நெடுஞ்சாலை அதிகாரிகளுடன் எதிர்வரும் புதன்கிழமை கலந்துரையாடல்களை நடத்த எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## குற்றமற்றவர்களை நாம் விடுவிப்போம்

### ருவான் தெரிவிப்பு

யுத்தகாலத்தின் போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டோரில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இருந்த போதிலும் குற்றமற்றவர்களை நாங்கள் எப்படியாவது விடுதலை செயதேதீருவோம் அவர்களை அரசாங்கம் பலவந்தமாக தடுத்து வைக்கவில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான விஜேவர்தன தெரிவித்தார். அரசியல் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி மைததிரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள். ஆகவே இது தொடர்பில் போராட்டங்களில் ஈடுபட வேண்டியதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் விடுதலை முன்வைத்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது தொடர்பில வினவிய போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## வாகன விபத்தில் சிக்கிய இராணுவச்சிப்பாய் பலி!

ஊவா மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவரின் கப் ரக வாகனத்தில் மோதுண்டு இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானதுடன் மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்டுள்ளார. இச்சம்பவம்மொணராகலை புத்தளை, குக்குரம் பொல என்ற இடத்தில் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் அசேல திலக்கரடண என்ற இராணுவ சிபாயே. பலியானதோடு அவருடைய நண்பர் பிரதிப் குமார ஆபத்தான நிலையில், மொனராகலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (இ-5)

## பரராஜசிங்கம் கொலை ; நால்வரின் மறியல் நீடிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் நேற்று புதன்கிழமை இவர்களை ஆஜர்படுத்திய போதே, நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவ புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (இ-5)



# 45 ஆயிரம் முறைப்பாடுகள் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

"ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள" சேவைக்கு பொது மக்களிட மிருந்து இதுவரை சுமார் 45 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு, கடந்த ஜனவரி 8 ஆம் திகதி பொதுமக்களின் முறைப்பாடுகன்ள தெரிவிப்பதற்காக இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டது.

பொதுமக்கள் மீதான அரசாங்கத்தின் அக்கறையை அதிகரிப்பதே இந்த சேவையின் முக்கிய நோக்கமாகும் என அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள் சேவையின் மூலம் பல கடிதங்களும், கோவைகளும் தொடர்பில் நீண்டகாலமாக நடவடிக்கை எடுக்கப்படாது கிடப்பில் போடப்பட்டிருந்த யுகத்திற்கு முடிவுகட்டப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள் சேவையூடாக பதிவு செய்யப்படடுள்ள 44 ஆயிரத்து 677 மனக்குறைகள் மற்றும் கருத்துகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவை 1919 என்ற அவசர அழைப்பு இலக்கத்தின் ஊடாக பதிவு செய்யப்பட்டவையாகும்.

இதுதவிர மின்னஞ்சல், முகநூல் மற்றும் தபால் மூலமும் இந்த சேவைக்கு மக்களின் குறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (செ-12)

# தாஸ் ஞாபகார்த்த அரையிறுதிப் போட்டி

தமிழ்த் தேசிய வீரர் தாஸ் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை இரவு 7.00 மணிக்கு நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் வாகையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து நடைபெறும் மற்றைய அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

# இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் நெதர்லாந்தை வென்றது வங்கப்புலிகள்



20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி நேற்று முன் தினம் ஆரம்பமாகியது.

இதன் தகுதி சுற்று ஆட்டத்தில் 8 அணிகள் பங்கேற்றுள்ளன. அவை இரண்டு பிரிவாக பிரிக்கப் பட்டுள்ளது.

'ஏ' பிரிவில் பங்களாதேஷ், அயர்லாந்து, நெதர்லாந்து, ஓமான் அணிகளும், 'பி' பிரிவில் ஆப்கானிஸ்தான், சிம்பாவே, ஸ்கொட்லாந்து, ஹொங் கொங் அணிகளும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்றைய அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேணடும். புள்ளிகள் அடிப்படையில் இரண்டு பிரிவிலும் முதல் இடதகை பிடிக்கும் அணிகள் முதன்மை சுற்றுக்கு (சுப்பர் 10) தகுதி பெறும்.

'பி' பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டங்களில் சிம்பாவே அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹொங் கொங்கையும், ஆப்கானிஸ்தான் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஸ்கொட்லாந்தையும் தோற்கடித்தன.

2-வது நாளான நேற்று 2 ஆட்டங்கள் நடந்தன. முதல் ஆட்டத்தில் தரவரிசையில் 10-வது இடத்தில் இருக்கும் பங்களா தேஷும் 12-வது இடத்தில் இருக்கும் நெதர்லாந்தும் மோதின.

பங்களாதேஷ் அணி சமீபத்தில் நடந்த ஆசிய கோப்பையில் இலங்கை, பாகிஸ்தான் போன்ற முன்னணி அணிகளை வீழ்த்தி இருந்தது. எனவே நெதர்லாந்தை எளிதில் வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கையில் களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற நெதர்லாந்து முதலில் பந்து வீச முடிவு செய்தது. பங்களாதேஷின் தொடக்க ஆட்டக்காரர் தமீம் இகபால் அதிரடியாக ஆடி 58 பந்துகளில் 83 ஓட்டங்கள் குவித்தார்.

சர்க்காரும், ரகுமானும் தலா 15 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். 20 ஓவர் முடிவில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்களை இழந்து 153 ஓட்டங்கள் எடுத்தது.

154 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நெதர்லாந்து அணி வீரர்களால் அதிரடியாக ஓட்டங்கள் குவிக்க முடியவில்லை.

தொடக்க ஆட்டக்காரர் ஸ்டீபன் மற்றும் அணித்தலைவர் பீட்டர் போரன் ஆகியோர் மட்டும் தலா 29 ஓட்டங்கள் எடுத்தனர். மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

இதனால், 20 ஓவர் முடிவில் நெதர்லாந்து 7 விக்கெட்களை இழந்து 145 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து, 8ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

பங்களாதேஷ் தரப்பில் அல் அமின் மற்றும் அல் ஹசன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக தமீம் இக்பால் தேர்வு செய்யப்பட்டார். (க)

# வேலணை மத்தியில் ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வேலணை மத்திய கல்லூரியின் ஓவியக் கண்காட்சி இன்று வியாழக்கிழமை மற்றும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரியின் சித்திரபாட ஆசிரியர் அ.குகானந்தம் தலைமையில் வேலணை மத்திய கல்லூரி சத்திர கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சண்முகலிங்கம் பாஸ்கரன் கலந்து கொள்வதுடன், வாழ்த்துரையினை கல்லூரி அதிபா சிவசாமி கிருபாகரன் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# அரசியலமைப்பு பேரவையாக...

அரசியலமைப்பு சாசனப்பேரவை குறித்த யோசனை நாடாளுமன்றில் வாக்கெடுப்பு எதுவுமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சாசனப் பேரவை குறித்த யோசனை கடந்த ஜனவரி மாதம் 9-ம் திகதி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.

அரசியலமைப்பு சாசனப் பேரவை தொடர்பில் கடந்த மாதம் 23 மற்றும் 24-ம் திகதிகளில் விவாதம் நடத்தப்பட்ட போதிலும் வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

இந்த யோசனைக்கு ஆதரவளிப்பது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருந்தது. இதன்படி, நேற்றையதினம் குறித்த யோசனை நாடாளுமன்றில் வாக்கெடுப்பிற்கு விடாமல் சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதிய அரசியல் சாசனம் மற்றும் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் பாராளுமன்றின் அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கிய வகையில் தீர்மானம் எடுக்க இந்த அரசியல் சாசனப் பேரவைக்கு அதிகாரம் உண்டு என்பது இதன்மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (செ-12)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# பரபரப்பான இறுதி ஓவரில் அயர்லாந்தை வென்றது ஓமான்




## மரண அறிவித்தல்



**மருதை மகாதேவன்**

சங்கானையைப் பிறப்பிடமாகவும் இராமப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மருதை மகாதேவன் 09.03.2016 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தனலட்சுமியின் அன்புக்கணவரும், வனிதா (தொழில் நுட்பவியல் கல்லூரி மாணவி - யாழ்ப்பாணம்) பாசமிகு தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.03.2016 இன்று வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 3.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-3941)

இராமப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 0772170901 தகவல்: குடும்பத்தினர்.


# பெண்களிடம் மன்னிப்பு கேட்ட ஹோலி

சர்வதேச மகளிர் தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்ட வேளையில் இந்திய கிரிக்கெட் அணியின் பிரபல வீரர் விராட் ஹோலிதனது டுவிட்டர்வலைத்தளம் மூலம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்து செய்தியில் பெண்களிடம் அவர் மன்னிப்பு கேட்டுள்ளது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தனது வாழ்த்துச் செய்தியில் பெண்களுக்கு இடம்பெறும் பல்வேறு இன்னல்களுக்கு கவலையும் தெரிவித்திருக்கிறார்.

மேலும், இதற்கு முன்னர் ஹோலி தனது தாயுடன் தான் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தையும் பதிவிட்டதுடன், தனக்கு கிடைத்த பலம், அதிர்ஷ்டம் மற்றும் புகழ் அனைத்திற்கும் தனது தாயே காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (க)



# அரச ஊழியர்களுக்கு மார்ச் மாத சம்பளம் ரூ.2500 ஆல் அதிகரிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான மார்ச் மாதச் சம்பளம் 2ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

அரசாங்கத்தின் புதிய சம்பளத்திட்டத்திற்கு அமைவாக 1.3 மில்லியன் அரசாங்க ஊழியர்கள் மற்றும் பகுதியளவு அரசசார் ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு ஐந்து கட்டங்களாக இந்த மாதத்திலிருந்து வழங்கப்படவுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

செலுத்தப்படாத நிலுவைகளுடன் சேர்த்து மாதாந்த அதிகரிப்பு ரூபா 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும். அரச ஊழியர்களின் ஒவ்வொரு பகுதியினருக்குமான சம்பளம் தொடர்பான புதிய சுற்றுநிருபம் பொது நிர்வாக அமைச்சினால் அரச மற்றும் அரசசார்பு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு 10ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைவாக ஏற்கனவே 5ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்ட நிலையில் இந்த மாதம் மேலும் 2ஆயிரத்து 500 ரூபா அதிகரிக்கப்படுகிறது.

10ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பானது 5கட்டங்களாக வழங்கப்படும். அரச ஊழியர்களுக்கானஅடிப்படைச் சம்பளமானது 11ஆயிரத்து 730 ரூபாவிலிருந்து 24 ஆயிரத்து 250 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

அரச ஊழியர்களுக்கான கடன்கள்அதிகரிக்கப்பட்டகொடுப்பனவுகளுடன் சேர்த்து கணிக்கப்பட்டு சம்பளத்தின் 40 வீதமாக வழங்கப்படும்.

2016ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் ஓய்வுபெறும் அரச ஊழியர்களுக்கு இந்த சம்பள அதிகரிப்பு பொருத்தமுடையதாகும்.

வாழ்க்கைச் செலவுப்படியாக அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 7ஆயிரத்து 500ரூபாவில் எந்த மாற்றங்களும் செய்யப்படாது.

மேலும் சம்பள மாற்றமானது சம்பள மாற்ற அளவுத் திட்டத்தின் படி ஒவ்வொரு சம்பள வகுதிக்கும் ஏற்ப வழங்கப்படும்என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

# இரண்டு மாதங்களுக்குள் 10,000 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவு

கடந்த இரண்டு மாதங்களுக்குள் சுமார் 10,500க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


இந்த வருடத்தில் கடந்த இரு மாதங்களுக்கு டெங்கு நோய்க்குள்ளான 12 பேர் உயிரிழந்துள்ளதாக தொற்றாநோய் பிரிவின் பணிப்பாளர் வைத்தியநிபுணர் டாக்டர் பபா பலிஹவடனே தெரிவித்தார்.

நாட்டில் டெங்கு நோய் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் டெங்கு நுளம்பினை ஒழிக்கும் வேலைத் திட்டத்தினை எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேல்மாகாணத்தின்கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவு டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதிவரை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்படவு ள்ளதாகவும் வைத்திய நிபுணர் டாக்டர் பபா பலிஹவடனே சுட்டிக் காட்டினார்.

இந்த காலப்பகுதியில் இராணு வத்தினர், பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகள் ஒன்றிணைந்து டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை ஒழிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. (இ-5)


அம்பிகை துணை



கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய

## வருடாந்த மஹோற்ஷவ விஞ்ஞாபனம்

மன்மத வருஷம் – 2016

**கொடியேற்றம்** 11.03.2016 வெள்ளிக்கிழமை
காலை 10.00 மணி

தினசரி உற்ஷவம்
காலை 7.30 மணிக்கு – அபிஷேக ஆரம்பம்
காலை 9.30 மணிக்கு – வசந்த மண்டப பூஜை
மாலை 5.00 மணிக்கு – வசந்த மண்டபப் பூஜை

**வேணுகோபாலர் உற்ஷவம்** 22.03.2016 செவ்வாய்க்கிழமை
காலை 6.00 மணி

**சப்பற உற்ஷவம்** 23.03.2016 புதன்கிழமை
கற்பூரசட்டி வழிபாடு – காலை 9.30 மணிக்கு
திருவிளக்கு பூஜை – மாலை 3.30 மணிக்கு
சப்பறத்திருவிழா – மாலை 6.00 மணிக்கு

**தேர் உற்ஷவம்** 24.03.2016 வியாழக்கிழமை
காலை 7.00 மணிக்கு .– வசந்த மண்டபப் பூஜை
காலை 8.00 மணிக்கு – தேரில் ஆரோகணித்தல்
காலை 10.30 மணிக்கு – தேரால் அவரோகணித்தல்
காலை 11.00 மணிக்கு நவசக்தி அர்ச்சனை

**தீர்த்த உற்சவம்** 05.03.2016 வெள்ளிக்கிழமை
காலை 9.30 மணிக்கு
கொடியிறக்கம் – மாலை 5.30 மணி

**பூங்காவனம்** 26.03.2016 சனிக்கிழமை
மாலை 5.00 மணிக்கு

**வைரவர் உற்ஷவம்** 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.00 மணி

மஹோற்சவ காலத்தில் தினமும் நண்பகல் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும்.

கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

ஆலய பரிபாலன சபை

முகப்புத்தகம் www.fb.com/NaachiyammanKovil

(சி-3935)


# மகிந்தவால் விவசாய அமைச்சின் செயலருக்கு நேர்ந்த அவலநிலை

(கொழும்பு)

விவசாய அமைச்சின் செயலாளர் பதவியை ராஜினாமா செய்த போதிலும் துறைசார் அமைச்சர் அதனை நிராகரித்துள்ளார்.

விவசாய அமைச்சின் செயலாளர் பி.விஜேரட்ன இவ்வாறு ராஜினாமா கடிதத்தை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்த போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என தனது உரையில் விஜேரட்ன கூறியிருந்தார்.

இந்த சம்பவத்திற்கு வருத்தம் வெளியிட்டு தனது ராஜினாமா கடிதத்தை அவர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவிடம் சமர்ப்பித்திருந்தார்.

கடந்த 7ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் பெயரை மாற்றிக் கூறியதற்காக அப்போதே மன்னிப்புக் கோரிய அமைச்சின் செயலாளர், பின்னர் பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்திருந்தார்.

எனினும, இந்த ராஜினாமாவை அமைச்சர் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# மாலக்க சில்வா மீதான தாக்குதல்; சி.சி.ரி.வி காட்சிகள் மீள் பரிசோதனை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்த விசாரணை நடத்தும் நோக்கில் சி.சி.ரி.வி கமரா காட்சிகளை மீளபரிசோதனையிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி கொழும்பு ஒடெல் வாகனத் தரிப்பிடத்தில் வைத்து மாலக்க சில்வா மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த தாக்குதல் சம்பவம் பதிவா கியுள்ள சி.சி.ரி.வி கமராக காட்சிகளே மீளவும் சோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளது. இந்த வீடியோ காட்சிகளை மீளவும் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பில பிட்டிய நேற்று முன்தினம் கறுவாத் தோட்ட பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளார்.

இராணுவச் சீருடையில் வந்த 12 பேர் மாலக்க மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதேவேளை, இந்த தாக்குதலை மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரே மேற்கொண்டதாக, மகிந்த தேர்தலில் தோல்வியடைந்த பின் னர் மேர்வின் சில்வா ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இராசி பலன்

10.03.2016
(மாசி 27, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
துதியை பின்னிரவு 3.54 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 9.06 மணிவரை
சுபநேரம் 7.53-9.23 மணிவரை
இராகுகாலம் 1.53-3.23 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| சூரி புத சுக் கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மகம்,பூசம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்** – புதியவர்களின் நட்பு கிடைக்கும், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றம் செய்யும் சூழ்நிலை உருவாகும், முன்கோபத்தைக் குறைப்பது நல்லது.

**மேடம்** – மன அமைதி கூடும் நாள், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**இடபம்** – அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும்,வாகன சுகமுண்டு.

**மிதுனம்** – தொழில் வளர்ச்சி கூடும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்** – நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும்,எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள்.

**கடகம்** – உதாசினப்படுத்தியவர்களே உதவி கேட்டு வரலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, முயற்சிகளில் முன்னேற்றங்கள் ஏற்படலாம்.

**மகரம்** – தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்,பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் பெறுவீர்கள், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** – வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உதவி செய்த சிலரே உதாசினப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம்,வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு** – ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** – பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம்,பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்** – நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தலைமைப்பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நன்மைகள் நடைபெறும் நாள்.

**கன்னி** – தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்

## யாழில் நேற்று முன்னெடுப்பு



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்கள் தமக்குரிய நிரந்தர நியமனம் வழங்குவதற்கு உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமெனகோரி நேற்றைய தினம் யாழில் வடமாகாண சுகாதார அமைச்சின் அலுவலகத்தின் முன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்கள் 33 பேருடைய நியமனம் வழங்கல் தொடர்பாக பலகாலமாக இழுபறிநிலையில் இருந்து வருகிறது.

இவர்கள் 15 வருடங்களுக்கு மேலாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் கடமையாற்றி பின்னர் 4 வருடங்களுக்கு மேலாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றியிருந்தனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் இருந்து அவர்களுக்கு அமைய அடிப்படையிலான கால எல்லை முடிவுற்றுள்ளது. இருப்பினும் இவர்கள் தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் தமக்குரிய நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் எனக்கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பாக சுகாதார தொண்டர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது நிரந்தர நியமனம் தொடர்பாக அனைத்து அதிகாரிகளையும் சந்தித்து கதைத்துள்ளோம். சுகாதார அமைச்சருடன் இது தொடர்பாக பேசிய போது நிரந்தர நியமனத்துக்கு ஏற்கனவே போதிய ஆளணியை நிரப்பியுள்ளதாகவும் உங்களுடைய விடயம் தொடர்பாக பேசியுள்ளேன் எனவும் தெரிவித்தார். ஆனால் எமக்கான சரியான முடிவைத் தரவில்லை.

நாம் அனைவரும் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் உள்ளோம். எமது குடும்ப நிலையை கருத்திற்கொண்டு எமக்கான நிரந்தர நியமனத்தை வழங்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம் சரியான தீர்வு கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் என தெரிவித்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில பணியாற்றிய சுகாதாரத் தொணடர்கள் 33 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதுடன் அமைய அடிப்படையிலான கால நீடிப்பையும் உடனடியாக வழங்க வேண்டும் என கடந்த மாதம் நடை பெற்ற தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-4-9)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்


யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள பாணன் குளம் நாச்சிமார் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற வுள்ளது.

இதற்கமைய நாளை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் இடம் பெறும். தொடர்ந்து எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறு நாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-5)

★ ✦ ★ ✦ ★ ✦

சுன்னாகம் தாளையடி அருள்மிகு ஐயனார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறவுள்ளது.

கொடியேற்றம் முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது. வேட்டைத் திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் சப்பறத் திருவிழா மறுநாள் 21 ஆம் திகதியும் இரதோற்சவம் 22 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 23 ஆம் திகதி புதன்கிழமையும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம் பெறும். (இ




# பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் தரப் பரிசோதனை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களின் தரப் பரிசோதனை மாநகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது இச்சேவையில் ஈடுபடும் ஆட்டோக்கள், வான்கள், பேருந்துகள், மோட்டார் திணைக்கள அதிகாரிகளினால் பரிசோதனை செய்யப்பட்டன.

யாழ்.மாவட்ட போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் கோபாலப்பிள்ளை மதிவண்ணன், வாகனங்களை பரிசீலனை செய்திருந்தார். இதன்போது யாழ். போக்குவரத்து பொலிஸாரும் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அத்துடன் பரிசோதனை செய்யப்பட்ட வாகனங்கள் உரிய தரம் இருப்பின் அதற்கான ஸ்ரிக்கர் ஒன்று ஒட்டப்படும் என வாகனங்களை பரிசோதனை செய்யும் அதிகாரி குறிப்பிட்டார்.

இவ்வாகன பரிசோதனை வடமராட்சி, தென்மராட்சி உள்ளிட்ட இடங்களிலும் எதிர்வரும் காலங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த செயற்பாடு சிறுவர், பெண்கள் பாதுகாப்பினை உறுதிப்படுததும் செயற்பாடாகவே அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-4)

# யாழ்.ஆரியகுளத்தில் அதிகளவு மீன்கள் இறப்பு

## துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம்



யாழ். ஆரியகுளத்தில் கடந்த சில நாட்களாக மீன்கள் இறந்த நிலையில் கரையோரங்களில் மிதப்பதனால் குறித்த பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இவ்வாறு மீன்கள் இறக்காத நிலையில் இம்முறையே இவ்வாறு அதிகளவு மீன்கள் இறந்துள்ளன. குளத்தில் கழிவுநீர் மற்றும் கழிவுப் பொருட்கள், குப்பைகள் என்பவற்றை கொட்டுவதால் ஆகாயத் தாமரைகள அதிகளவில் வளர்ந்துள்ளன.

இதனால் தண்ணீர் மாசடைவதுடன் அதில் உள்ள ஒட்சிசன் குறைந்து, மீன்கள் இறப்பதற்கு காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மீன்கள் இறந்ததனால் குறித்த பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகிசனை தொடர்பு கொண்டு கேட்டபோது,

தொழில்நுட்ப இய்ந்திரங்கள் பற்றாக்குறை காரணமாக துப்புரவு பணிகளை மேற்கொள்வதில் சில நேரங்களில் தாமதம் ஏற்படுவதாகவும் குறித்த பகுதியை உடனடியாக சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (செ-9)

# நூலகவியல்சார் ஆய்வு மாநாடு யாழ்.பல்கலையில் நேற்று ஆரம்பம்

இலங்கை பல்கலைக்கழக நூலக சங்கம் நடத்தும் நூலகவியல்சார் ஆய்வு மாநாடு நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகியது.

யாழ். பல்கலைக்கழக நூலகர் திருமதி எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், பல்கலைக்கழக றுவேஸ் ஹனிபா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பௌதீகவியற்துறை விஞ்ஞான பீட சிரேஷ்ட பேராசிரியர் கே.கந்தசாமி, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் நூலகர் திருமதி ஆர்.பரராஜசிங்கம், களனி பல்கலைக்கழக நூலக தகவல் விஞ்ஞானத்துறை பேராசிரியர் ஏ.வீரசூரிய, கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் ஜி.மிகுந்தன், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் நூலகர் என்.ரி.எஸ். ஏ.சேனாதீர, யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள், நூலகர்கள் உட்பட பலர் கலந்து கொணடனர். (இ-9)

## பிரகீத் எக்னெலிகொட கடத்தல் சம்பவம்

# எல்லா ஆவணங்களையும் ஒப்படைக்கவும்

# இராணுவத் தளபதிக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

**ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய எல்லா ஆவணங்களையும் ஒப்படைக்குமாறு இராணுவத் தளபதிக்கு, ஹோமகம நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. எக்னெலிகொட தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக சந்தேகிக்கப்படும் கிரித்தல இராணுவ முகாமின் ஆவணங்கள் எதையும் அழிக்கக்கூடாது என்றும் நீதிமன்றம் இராணுவத் தளபதியை எச்சரித்துள்ளது.**



நேற்று முன்தினம் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போகச் செய்யப்பட்டது குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றப்புலனாய்வப் பிரிவின் உதவி கண்காணிப்பாளர் அபேசேகர அறிக்கை ஒன்றை தாக்கல்செய்தார்.

“2015இல் இந்த விசாரணைகளை குற்றப்புலனாய்வுத்துறை பொறுப்பேற்கும் வரை பிரகீத் கடத்தல் குறித்து எந்த முறையான விசாரணைகளும் குற்றப் புலனாய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்படவில்லை.

குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட விசாரணைகளின் மூலம், பிரகீத் எக்னெலி கொட படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது. நீதிமன்ற உத்தரவின் பேரில் இராணுவத்தினரால் ஒலிப்பேழை ஒன்று விசாரணையாளர்களிடம் கையளிக்கப்பட்டது. அது முத்திரையிடப்பட்ட நிலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த ஒலிப்பேழையை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கேட்கவில்லை. எனினும் இந்த இரகசிய ஒலிப்பேழை. பல்வேறு இணையத் தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளது.

கிரித்தல இராணுவ முகாமில் இருந்து சந்தேகநபர்கள் அக்கரைப்பற்று சென்றதற்கான ஆதாரங்களை கைத்தொலைபேசி சமிக்ஞை பதிவுகள் காட்டுகின்றன.

சந்தேக நபர்களின் தனிப்பட்ட தகவல்களை வழங்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதையடுத்தே, இந்த விவகாரத்துடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் ஒப்படைக்க இராணுவத் தளபதிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மார்ச் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதுடன் சந்தேக நபர்களின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இலங்கையில் மூன்று குடிநீர் திட்டங்களுக்கு இந்தியா 400 மில்லியன் டொலர் கடனுதவி

(கொழும்பு)

இலங்கையில் மூன்று குடிநீர் விநியோகத் திட்டங்களை மேற்கொள்வதற்கு 400 மில்லியன் டொலர் கடனுதவியை இந்தியா வழங்கவுள்ளது. இது தொடர்பான உடன்பாடு நேற்று முன்தினம் இந்தியாவின் எக்சிம் வங்கிக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது.

இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு உதவியளிப்பதற்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை பயணத்தின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய இந்த கடனுதவியை இந்தியா வழங்கவுள்ளது.

400 மில்லியன் டொலர் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள மூன்று குடிநீர் விநியோகத் திட்டங்களின் மூலம் பத்து இலட்சம் மக்கள் பயனடைவர் என்று நீர் விநியோக வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

12 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய இந்தக் கடனுக்கு, 1.75 வீத வட்டி அறவிடப்படும்.

வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள், இந்த மூன்று குடிநீர் விநியோகத் திட்டங்களையும் இந்திய நிறுவனங்களே மேற்கொள்ளவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


## இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா:33சூரிசெவ் 2 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:Civil eng/ அரசதொழில்
தொ.இ: B/3972

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 30சூரிசெவ் 12 இல்
உயரம்: 5’8”
தகைமை/தொழில்:B.COM, LLB/ அவுஸ்திரேலியா குடியுரிமை
தொ.இ: B/3973

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 5
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:BSc/அரசதொழில்
தொ.இ: B/3977

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 48
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:A/L இத்தாலி PR
தொ.இ: B/3978

**இவர்களுக்கு மணமகன் தேவை**


பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 27சூரிசெவ் 10 இல்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்:BCS/ஆசிரியர்
தொ.இ: G/4674

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 64செவ் 1 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: G/4678

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 36
உயரம்: 5’3"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/4679

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 38சூரிசெவ் 9 இல்
உயரம்: 5’3"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/4682

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## குறைகேள் அரங்கு...

# முன்னறிவித்தலின்றி இடிக்கப்பட்ட மடம்

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஆண்டிச்சாமியார் மடமும் அன்னதான சபை மடமும் முன்னறிவித்தலின்றி இடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் ஆண்டிச் சாமியார் மடமும் அன்னதான சபையினரும் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1939.04.20 பெ.ஆண்டிச் சாமியார் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் தெற்குப் பகுதியில் ஆண்டிச் சாமியார் மடமும் அன்ன தான சபையும் என்ற மடமானது ஸ்தாபிக்கப்பட்டது.


இப் பழைமையான மடத்தினை ஆண்டிச் சாமியாரது சந்ததியினர் பாராமரித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த 27.01.2016 புதன்கிழமை காலை 7.30 மணியளவில் சுமார் 9 பேர் கொண்ட குழு பூட்டப்பட்ட நிலையில் இருந்த இப்பழைமை வாய்ந்த கட்டடத்தினை எவ்வித முன்னறிவித்தலும் இன்றி இடித்து தரை மட்டமாக்கியுள்ளது.

இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் மேற்படி அன்னதான சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கல் கல்விப்பெறுபேறுகளில் செல்வாக்கு செலுத்துகிறது

## பெற்றோரும் பங்களிக்க முன்வரவேண்டும் என்கிறார் வவு.மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளர் திருமதி.கிருபாசுதன்



கிராமப்புறத்திலிருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்கள் பாடசாலையில் உலக உணவுத்திட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் உணவை உண்பதன் ஊடாக தமது பசியை போக்கி கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள் என்ற உண்மையை நான் அறிந்துள்ளேன். இவ்வாறு வவுனியா மாவட்ட செயலகத்தின் திட்டபணிப்பாளரும உலக உணவுத்திட்ட கணகாணிப்பாளருமான திருமதி கருபாசுதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரக்கோட்டத்தினால் சர்வதேச பாடசாலை மாணவர்களுக்கான உணவூட்டல் தினம் வவு/ சிதம்பரபுரம் சிறிநாகராஜா வித்தியாலயத்தில அதிபர் வரதராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சில பாடசாலைகளில் உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்படும் உணவை சரியாக பயன்படுத்துவதில்லை. அதற்காக நாம் வருத்தப்படுகின்றோம். இன்று பிள்ளைகள் பாடசாலைக்கு வரும்போது வீட்டில் சாப்பிடும் உணவைவிட பாடசாலையில் வழங்கப்படும் உணவை விரும்பி உண்கிறார்கள்.

வீட்டில் எல்லோருக்கும் போசாக்கான உணவு கிடைக்கும் என்று சொல்ல முடியாது. இன்று வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம் அப்படியானது. வறுமையில் உள்ளது. போருக்கு பின்பும் அதன தாக்கம் உள்ளது. அரச உத்தியோகத்தர்கள் காலை வேளை பிள்ளைக்கு தேவையான சத்துணவை வழங்குவதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை. வேலைக்கு போகும் அவதியல் பாண் பணிஷ் ஆகியவற்றை வேண்டி கொடுக்கிறார்கள். இது எந்தளவு தூரம் ஆரோக்கியமான உணவாகும். பிள்ளையொன்றுக்கு பாடசாலையில் 75 கிராம் அரிசி, 20 கிராம் பருப்பு, 15 மில்லிலீற்றர் எண்ணெய், 15 கிராம் மீன்ரின் என்பன சமைக்கப்படுகிறது. இதனால் பிள்ளையின் உடல மட்டுமல்ல அறிவும் விருத்தியடைகிறது. கட்டடங்கள் கட்டுவதோ அல்லது வீதியை போட்ட பின்போ நாம் வெளிப்படையாக அதன் தரத்தை மதிப்பிடுவது வெளிப்படையானதும் இலகுவானதுமாகும். ஆனால் பாடசாலை மாணவனுக்கு ஊட்டச்சத்து உரியவாறு கிடைக்கிறதா என்பதை அறிவது கடினமானது.

ஒரு பாடசாலையின் கல்வி பெறுபேற்றில் உலக உணவு திட்டநிறுவனத்தினால் வழங்கப்படும் உணவு செல்வாக்கு செலுத்துகிறது. கிராமப்புற பாடசாலைகளின் கல்வியில் உணவூட்டலின் தாக்கம் செல்வாக்கு செலுத்துகிறது. பெற்றோர்கள் பாடசாலைக்கு வந்து இந்த உணவை சமைத்து கொடுக்க முன்வரவேண்டும்.

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் மட்டும் இந்த பாடசாலை மாணவர்களுக்கான உணவூட்டல் வழங்கப்படுகிறது. எமது பிரதேசத்தில் இந்த சேவையை செய்யும் உலக உணவுத் திட்டத்தினரை பாராட்டுகின்றேன் என்றார்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வாளர் திருமதி சிவகுமாரி, கோட்டக் கல்வி பணிப்பாளர் இளையதம்பி, வவுனியா நகரக்கோட்ட உலக உணவுத் திட்ட இணைப்பதிகாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர் வரதகுமார், வவுனியா தெற்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பத்மநாதன், வவுனியா தெற்கு கல்வி வலய உதவக்கல்விப்பணிப்பாளர் பாலச்சந்திரன் சந்திரன், சிறி நாகராஜா வித்தியாலயத்தின் உலகஉணவுத்திட்ட செயற்றிட்ட பொறுப்பாசிரியர் பிரகாஸ் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர். (2-3-250)

## வற்றாப்பளை-கேப்பாபிலவு-புதுக்குடியிருப்பு வீதி திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன

வற்றாப்பளை கேப்பாபிலவு புதுக்குடியிருப்பு வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இதன் முதற்கட்டமாக கேப்பாபிலவு இராணுவ முகாமிற்கும் புதுக்குடியிருப்பிற்கும் இடைப்பட்ட பகுதிகளில் சம நேரத்தில் பத்துப் பாலங்களை புதிதாக நிர்மாணிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை காலமும் இவ் வீதி முழுமையாக புனரமைக கப்படாமையினால் மாரி காலத்தில் இவ் வீதியூடான போக்குவரத்து பல நாட்களுக்கு தடைப்படுவதுண்டு. இதனால் இப்பிரதேசங்களில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும் இவ்வீதி வழியே பயணிக்கும் பொது மக்களும் அவல நிலையை எதிர் நோக்குவது வழமையாகும்.

எனவே இவ் வீதி முழுமையாக புனரமைப்பு செய்யப்படுவதன் மூலம் பெருமளவான மக்கள் நன்மை அடைவர். இந்த வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோது வேலை நடைபெற்றுவரும் வீதியில் எந்தவொரு முனையிலும் வழமையாக இடப்பட வேண்டிய ஒப்பந்த வேலை குறித்த விபரங்களை உள்ளடக்கிய பெயர்ப்பலகை நாட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான பெயர்ப் பலகையில் ஒப்பந்தகாரர்களின் நிறுவன பெயர். ஒப்பந்தத் தொகை நிதி. வழங்குநர். வேலையை வழி நடத்தும் திணைக்களம், ஒப்பந்த காலம் என்பன குறிப்பிடப்படுவது வழமையாகும். இந்த பெயர்ப்பலகை நாட்டப்படாமையினால் எந்தவொரு விபரத்தையும் அறிந்து கொள்ள முடியவில்லை என சமூக ஆர்வலர்கள் சுட்டிக் சாட்டுகின்றனர். (2-3-302)




## வவுனிக்குளம் சிறுபோக நெற்செய்கை குறித்து விவசாயிகளுக்கு முன்னாயத்த கூட்டங்கள்

(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் நடப்பாண்டில் இடம்பெறும் சிறுபோக நெற்செய்கை தொடர்பான முன்னாயத்தக் கூட்டங்கள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடத்தப்பட வுள்ளது.

இதற்கான கால அட்டவணையொன்று வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனிக்குளம், கொல்லவிளாங்குளம் ஆகிய நீர்ப்பாசனக் குளங்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கான சிறுபோக நெற்செய்கை தொடர்பான கூட்டம் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும். மல்லாவி, தேராங்கண்டல் ஆகிய நீர்ப்பாசனக் குளங்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மல்லாவி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

அம்பலப்பெருமாள் குளம் தென்னியன்குளம், கோட்டை கட்டியகுளம் ஆகிய நீர்ப்பாசனக் குளங்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கோட்டை கட்டிய குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

ஐயங்கன்குளம், மருதங்குளம், பழைய முறிகண்டி குளம் ஆகிய நீர்ப்பாசனக் குளங்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 .30 மணிக்கு ஐயங்கன்குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

பணங்காமம் நீர்ப்பாசனக் குளத்திற்குட்பட்ட விசாயிகளுக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பணங்காமம் பொது நோக்கு மண்டபத்தில் நடை பெறும்.

கல்விளான் நீர்ப்பாசனக்குளத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-3-15)

## காலாவதியான பொருட்கள் விற்பனை 4 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிப்பு

முள்ளியவளை தண்ணீரூற்று பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் உணவகங்கள், ஐஸ்கிறீம் கடைகள் வெதுப்பகங்கள் ஆகியற்றில் கடந்த மாதம் 25 ஆம் திகதி திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பொதுச் சுகாதார பரிசோதகர் தவராசா தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை உள்ளடக்கிய குழுவினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின் போது நான்கு கடைகளில் காலாவதியான பொருட்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு கடைகளின் உரிமையாளர்கள் கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி விசாரணை செய்தபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் நால்வருக்கும் தண்டப்பணமாக தலா 4 ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இது குறித்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து அவரின் விசேட பணிப்பிற்கும் ஆலோசனைக்கும் அமைவாகவே தாம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவித்தார். அத்துடன் இந் நடவடிக்கைகள் அடுத்த கட்டமாக முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரியின் எல்லைக்கு உட்பட்ட ஏனைய பிரதேசங்களிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-3-302)

## அம்பகாமம் பாடசாலை மாணவர்களுக்கு நூறு கழுத்துப்பட்டிகள் அன்பளிப்பு



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் மு/ மாங்குளம் அம்பகாமம் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு 100 கழுத்துப்பட்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மாங்குளத்திலுள்ள மு/ அம்பகாமம் அ.த.க பாடசாலை மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் உள்ளது. இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களாக காணப்படுகின்றனர். அந்த வகையில் பாடசாலை மாணவர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கழுத்துப்பட்டி அணிந்து வருவதில்லை. அவற்றை பெற்றுக் கொள்வதற்கான பண வசதி எல்லா மாணவர்களுக்கும் இல்லை. எனவே அவற்றை பெற்றுத் தருமாறு வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் பாடசாலை அதிபரினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய மேற்படி சங்கத்தினால் 100 பட்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (2-3-15)





அன்னை சிவகாமி அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் லண்டன் ஸ்தாபகர் மகாதேவன் சத்தியரூபனின் மகள் சிவரூபாவின் பிறந்த தினத்தையொட்டி வவுனியா சிவன் முதியோர் இல்லம், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக சிறுவர் இல்லம் என்பவற்றிற்கு கடந்த 6ஆம் திகதி சிறுவர்கள்,முதியோர்களுக்கு உடுபுடைவைகள், ஒருநாளுக்கான உணவு,தேநீர் விருந்து என்பன வழங்கி வைக்கப்பட்ட போது...

# வர்த்தக நிலையத்திற்குள் புகுந்த குழு அடிதடி #வாள்வெட்டு # 7 பேர் காயம்

## பொலிஸாரின் உறுதிமொழியை அடுத்து கடையடைப்பு கைவிடப்பட்டது




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் இனந் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட அடிதடி, வாள்வெட்டு சம்பவத்தில் 7 பேர் படுகாயம் அடைந்தனர். இதில் 3 பேர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளதோடு 4 பேர் அடிகாயங்களுக்கு உள்ளாகி காயம் அடைந்துள்ளனர்.

இதில் வாள்வெட்டுக்கு இலக்கான 3 பேரும் முல்லைத்தீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் கடந்த 7ஆம் திகதி இரவு இடம் பெற்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

சிவாராத்திரி தினத்தன்று ஒட்டுசுட்டான் வர்த்தக நிலையப்பகுதியில் அமைந்துள்ள சிவன்கோலிலுக்கு முன்பாக இருந்த கடையில் இனந்தெரியாத குழுவினர் மது போதையில் வந்து சிகரெட், டய லொக் மீள்நிரப்பு அட்டைகள் என்பனவற்றை தருமாறு கேட்டு கடை உரிமையாளருடனும் அங்கு நின்றவர்களுடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து கடை உரிமையாளரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள்களில் வாள்கள், பொல்லுகள் சகிதம் குறித்த கடைக்கு வந்திறங்கிய குழுவினர் கடையில் நின்றவர்களை சரமாரியாகத் தாக்கினர்.

இதனால் கடை உரிமையாளர் உள்ளிட்ட மூவர் வாள்வெட்டுக்கு இலக்காகியதோடு மேலும் நான்கு பேர் அடிகாயங்களுக்கு உள்ளாகினர்.

இதன்போது கடை உரிமையாளரின் மோட்டார் சைக்கிளும் வாள் வீச்சுக்கு இலக்கானது. இதனை தடுக்க முயன்றவர்களின் மீதும் குறித்த குழுவினர் தாக்கிவிட்டு அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றனர்.

இச் செயற்பாட்டை கண்டித்து நேற்றுக் காலை ஒட்டுசுட்டானிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்துவதற்கு ஏற்பாடாகி இருந்த நிலையில் அங்கு வருகை தந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனினால் கடையடைப்பு இடைநிறுத்தப்பட்டது.

அதன் பின்னர் கடை உரிமையாளர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆகியோர் பொலிஸ் நிலையம் சென்று பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடினர்.

இதன்போது பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிக்கையில், எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதவாறு அவதானம் செலுத்துவதாகவும் இச்சம்பவம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுப்படும் எனவும் உறுதிமொழி வழங்கினார்.

வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்து கடை உரிமையாளர்கள் கடைகளைத் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இருப்பினும் குற்றவாளிகள் பிடிக்கப்பட்டு உரிய தண்டனை வழங்காவிடின் தாம் வீதியில் இறங்கி போராடத் தயார் என வர்த்தக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-3-281-310)

## உயிர்கள் , உடைமைகளை இழந்தும் கூட கலைஞர்கள் மனவுறுதியை இழக்கவில்லை

### சிவமோகன் எம்.பி.விதந்துரைப்பு

(குருமன்காடு)

கொடிய யுத்தத்தில் உயிர், உடைமைகளை இழந்தாலும் கூட எமது கலைஞர்கள் மனவுறுதியை இழக்கவில்லை என பாராளுமனற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு வேணாவில் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் வேணாவில் கலைமகள் கலாமன்றத்தின் ஆண்டு விழாவும் சிவராத்திரி தினத்தன்று வேணாவில் அம்மன் கோவில் முன்றிலில் நடைபெற்றது.

இந் நிகழ்வில், பிரதம




விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த யுத்தத்தில் உயிர, உடைமைகளை எமது மக்கள் இழந்தாலும் கூட தங்களுடைய கலை, கலாசாரத்தின் மேல் மன உறு தியை இழக்கவில்லை. இதனை இப்பிரதேச சிறுவர்கள், கலைஞர்கள் நிகழ்த்துகின்ற கலை நிகழ்வுகள் எடுத்தியம்புகின்றன. வளங்கள் பற்றாக் குறையாக இருந்தும் கூட இருக்கின்ற வளங்களை வைத்து சிறந்த கலை நிகழ்வுகளை நடத்துகின்றனர்.

எமது பாரம்பரிய கலை, கலாசாரங்களை கட்டி காகக வேண்டும் என்பதற்காக எனது சிந்தனையில் வன்னி குறோஸ் கலாசாரப் பேரவை உதயமாகி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த கலைஞர்களின் வளர்ச்சியில் புத்திஜீவிகள், கல்விமான்கள், கலையார்வம் கொண்டவர்கள் போன்றவர்கள் ஊக்கமளித்து, எங்கள் கலை கலாசாரங்களை கட்டிக்காக்க வேண்டும். இதற்காக என்னுடைய பணி தொடர்ந்த வண்ணமே இருக்கும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து அறநெறி பாடசாலை மாணவர்களின் வில்லிசை, நடனம், காத்தவராயன் சிந்துநடைகூத்து என்பன இடம்பெற்று பரிசளிப்பும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன், பிரதேசசபையின் கலாசார உத்தியோகத்தர் பிரதீபன் மற்றும் புதுக்குடியிருப்பு மேறகு கிராம சேவையாளர் திருமதி. தேவகி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (2-3-250)

## சிறுமி மீது துஷ்பிரயோகம் சந்தேக நபர் கைதானார்

(மன்னார்)

சர்வதேச மகளிர் தினத்தன்று மன்னார் பெரிய கருசல் கிராமத்தைச் சேர்ந்த ஆறு வயதுச் சிறுமி ஒருவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் அதேபகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும், பெரிய கருசல் கிராமத்தில் திருமணம் செய்து வாழ்ந்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுமியிடம் மன்னார் பொலிஸ் நிலைய பெண்கள் மற்றும் சிறுவர் தடுப்பு பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கக்கோரி மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் கறுப்புப்பட்டி போராட்டம் இடம்பெற்றுள்ள நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-3-281)

## பெண்களுக்கு உரிய முறையில் மதிப்பளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்

### பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி தெரிவிப்பு

இன விடுதலை போராட்டத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் ஈடு செய்ய முடியாதவை. அதிலும் எமது தமிழ்ப் பெண்களையே இந் நிலை அதிகமாக பாதித்துள்ளது. எனவே இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து அவர்களை மீட்டெடுத்து அவர்களுக்கு உரிய முறையில் மதிப்பளித்து அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த அன்னவரும் ஒன்றிணைய வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த காலங்களில் எங்களது சமூகம் பெண் விடுதலை நோக்கிய பயணத்தில் சென்று அதை வெற்றி பெற்றதனை யாராலும் மறக்க முடியாது. பெண்விடுதலை என்பது இன விடுதலைப் பேராட்டத்தினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே கருத வேண்டும். ஆனால் இன்று எமது சமூகத்தை பொறுத்த வரையில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு அச்ச நிலைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. எனவே இவ்வாறான நிலைமைகளை நிவர்த்தி செய்ய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

யுத்தத்தின் விளைவுகளால் ஏற்பட்டுள்ள சமூகப் பிரச்சினைகள் எங்களது சமூகத்தின் எதிர்கால இருப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இவை குறிப்பாக எமது சமூகத்தின் பெண்களையே அதிகம் பாதித்துள்ளது. யுத்தம் காரணமாக விதவைகள் ஆக்கப்பட்ட பெண்கள், மாற்றுத்திறனாளிகள் ஆக்கப்பட்ட பெண்கள் காணாமல் ஆக்கப்பட்டமை, அரசியல் கைதிகள் ஆக்கப்பட் டமை மற்றும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் என பல்வேறுபட்ட வகையில் எமது பெண்கள் தமது இயல்பு வாழ்க்கைக்காகவும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் தினமும் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே இவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் நியாயமான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியதுடன் அவர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவும் வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கான எதிர்கால மேம்பாட்டுத்திட்டங்களைமேற்கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் அதிகரித்துச் செல்கின்ற பாலியல் வன் கொடுமைகளுக்கெதிராக போராடுவதும் வீட்டு வன்முறைகளைக் குறைப்பதும் மிகவும் முக்கியமானது ஆகும். எனவே இந்நிலையை மாற்றியமைக்க அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-3-281)

## யாழ்.பல்கலை.இறுதி வருட மாணவன் முல்லைத்தீவில் கடத்தப்பட்டு அவஸ்தை

யாழ். பல்கலைக்கழக இறுதி வருட மருத்துவத்துறை மாணவன் ஒருவன் முல்லைத்தீவு நகரை அண்மித்த பகுதியில் வைத்து மயக்க மருந்து தெளிக்கப்பட்டு இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு அவரது தலைமுடிகள் ஆங்காங்கே கத்திரிக்கப்பட்டு அவரது அடையாள ஆவணங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, முல்லைத்தீவுகள்ளப்பாட்டிலுள்ள தனது வீட்டில் இருந்து முல்லைத்தீவு நகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிவேளை முல்லைத்தீவு பிரதேசவைத்தியசாலையின் பின்புறமாகவுள்ள வீதியில் திடீரென இரு இளைஞர்களினால் வழிமறிக்கப்பட்டுள்ளார். பின்னர் முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிமனையின் பின்புறமாகவுள்ள வீதியில் மயக்கம் தெளிந்து எழுந்துள்ளார்.

அப்போது தான் கடத்தப்பட்டதையும் தனது ஆவணங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டதையும் தனது தலைமுடி ஆங்காங்கே வழிக்கப்பட்ட நிலையையும் உணர்ந்ததாக அவர் தெரிவித்தார். அதன் பின்னர் முல்லை த்தீவு பொலிஸ் நிலையத் திற்கு நேரில் சென்று முறைப் பாடொன்றை பதிவு செய்து ள்ளார்.

பிரஸ்தாப நபருடன் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு விரைந்த பொலிஸார் தடயங்கள் தொடர்பில் ஆய்வு செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-3-310)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி புதிய சட்டம் அறிமுகம்

## மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

பயரங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதற்குப் பதிலாக சர்வதேச தரத்திலான சட்டமூலமொன்றை எதிர்வரும் மாதங்களில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றவிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுவந்த சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக சர்வதேச தரத்திலான சட்டமொன்று கொண்டுவரப்படும். இது தொடர்பான சட்டவரைபொன்று சட்ட ஆணைக் குழுவினால் தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மாதங்களில் இச்சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை அமைச்சர்கள் சிலர் நேரில் சென்று சந்திக்கவிருப்பதுடன், நீதி அமைச்சர் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இவ் விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்குமாறு கோரவிருக்கின்றார்.

அதேநேரம், காணாமற் போனவர்கள் குறித்த அலுவலகமொன்றை அமைப்பது குறித்து ஐ.சி.ஆர்.சியுடன் இணைந்து நாம் செயற்பட்டு வருகின்றோம். கடந்த அரசாங்கங்கள் காணாமற்போனவர்கள் விடயத்தில் செய்த தவறுகள் மீளவும் ஏற்படக்கூடாது என்பதில் அரசாங்கம் கூடுதல் அக்கறையுடன் இருக்கின்றது. காணாமற்போனவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கு கடந்த கால அரசாங்கங்களால் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டபோதும், இவை அவசர அவசரமாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் ஆராயாமல் நியமிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையில் தமது அரசாங்கம் காணாமற்போனவர்கள் விவகாரத்தின் ஆழத்தை அறிந்து சரியான நடவடிக்கை எடுக்கவுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் பலவந்த காணாமற்போதல் குறித்த ஐ.நா. ஒப்பந்தத்தில் நாம் கைச்சாத்திட்டிருந்தோம்.

பல வருடங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற பலவந்த காணாமற்போதல்கள் தொடராமல் இருப்பதற்காக இதில் கைச்சாத்திட்டிருந்தோம். இது தொடர்பான சட்டமொன்றையும் நாம் எதிர்வரும் மாதங்களில் கொண்டுவரவுள்ளோம். தொடர்ச்சியாக இடம்பெற்ற இச்சம்பவங்களைக் கட்டுப்படுத்த கடந்த அரசாங்கம் எதுவும் நடவடிக்கை எடுக்கவில்லை.

காணாமற் போனவர்களுக்கு சான்றிதழ் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

எனினும், இதனை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டரீதியான அங்கீகாரம் அவசியம்.

இவ்வாறான நிலையில் காணாமற் போனவர்கள் விவகாரம் குறித்து புதிய சட்டமூலம் நிறை வேற்றப்பட்டதும் உரிய நடவடிக்கையை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## குடும்பஸ்தர் மீது தாக்குதல் பொலிஸ் அசமந்தப்போக்கு

(முல்லைத்தீவு)

முள்ளியவளை தண்ணீரூற்றுப் பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான பகிரதன் (வயது 43) என்பவரே முகத்தில் படுகாயத்திற்குள்ளான நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

கடந்த 7ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இளைஞர்கள் சிலர் பிரஸ்தாப நபரைத் தாக்கி காயம் ஏற்படுத்திய பின்னர் வீதியோர வாய்க்காலுக்குள் போடுவதற்காக இழுத்துச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

அந்நேரத்தில் வீதியால் வாகனம் ஒன்று வந்ததையடுத்து அந்த வாகன வெளிச்சத்தில் தம்மை இனங்காட்டிக் கொள்ள விரும்பாத அவர்கள் அவரை அப்படியே விட்டுச் சென்றுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான நபர் மாஞ்சோலை வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

அங்கு முகத்தில் ஏற்பட்ட பெரிய காயத்திற்கு இழைபோடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸாரிடம் நேற்றுக்காலை முறையிடச் சென்ற போது தாக்கிய நபர்களின் பெயர் விபரங்கள் தெரியாது முறைப்பாடு எடுக்கமுடியாது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு பகுதிகளில் இளைஞர்களின் அடாவடித்தனம் அதிகரித்து வருகின்ற நிலையில் பொலிஸார் அசமந்தப்போக்குடன் இருப்பதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-3)

## பிரித்தானிய தூதரக அரசியல் பிரிவுச் செயலர் முல்லை.மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு

வடக்கு மாகாண சபை உறுப்பினருடன் கலந்துரையாடல்



பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் பிரிவுக்கான முதற் செயலர் டேனியல் பைண்டருக்கும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று முல்லைத் தீவில் இடம் பெற்றது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது முல்லை. மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பெரும்பாலானவை உள்வாங்கப்பட்டன.

இச்சந்திப்பு தொடர்பில் ரவிகரனிடம் வினவியபோது,தாயக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு இடர்பாடுகள் பற்றியதாகவே இன்றைய (நேற்று முன்தினம்) சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் சிறையிலுள்ள கைதிகளின் விடுதலை மற்றும் அவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் இன்னல்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக, வாழ்வாதார சவால்களை எதிர்நோக்கும் பெண் தலைமைக்குடும்பங்கள், பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், வெளிமாவட்ட மீனவர்களால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலைமை, கேப்பாபிலவு உட்பட பல இடங்களில் தமிழ் மக்கள் குடியேற்றப்படாத நிலைமை எனப் பல்வேறுபட்ட விடயங்கள் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன எனத்தெரிவித்தார்.

சுமார் இருமணி நேரம் தொடர்ந்த இக்கலந்துரையாடல் நண்பகல் 12 மணியளவில் நிறைவுற்றமை குறிப்பிடத்தக்கது. (2-3-281-250)

## உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வியமைச்சிற்குட்பட்ட துணுக்காய், மடு, கிளிநொச்சி, வவுனியா தெற்கு ஆகிய கல்வி வலயங்களில் காணப்படும் பாட ரீதியான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை கல்விநிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கோரியுள்ளார்.

இதற்கமைய துணுக்காய் கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடங்களுக்கும் மடு, கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களில் ஆங்கில பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடங்களுக்கும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கும் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் வெற்றிடங்கள் காணப்படும் அந்தந்த வலயக் கல்வி அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்கள், விண்ணப்பப்படிவங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ள முடியும்.


பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களின் சிபார்சுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் செயலாளர், வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (2-3-15)

## சர்வதேச மகளிர் தினவிழா

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். விழிப்புலனற்றோர் சங்க தொழில் பூங்கா வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

செல்வி.மரியதுஷ்யந்தி தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேசசெயலர் திருமதி சாந்த சீலன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி கலைச் செல்வி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-5)

# பாடசாலை அதிபர்களின் கடமைக்கூறுகளும் தலைமைத்துவ திறன்களும்




பாடசாலையின் முகாமைத்துவ மற்றும் அபி விருத்தியில் முக்கியமானவர் பாடசாலை அதிபர் தான் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். தலைமைத்துவதிறன்களும் அறிவும், ஆற்றலும் அர்ப்பணிப்பும் போதிய அனுபவமும் பயிற்சியும் கொண்டநபர்களே இப்பதவிக்கு நியமிக்கப்படவேண்டும். ஆனால் இலங்கைப் பாடசாலைகளில் அதிபர்கள் நியமனத்தில் இவை கருத்தில் கொள்ளப்படுகின்றனவா? என்பது ஆய்வுக்குரியதாகும்.

தேசிய கல்வி ஆணைக் குழுவின் ஆவணங்கள் பாடசாலையின் முன்னணி முகாமையாளர் என்ற முறையில் அதிபர்கள் பங்கினை முக்கியப்படுத்தின. ஆனால் இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பில் அதிபர்கள் நியமனம்பல்வேறுவழிமுறைகளினூடாக மேற்கொள்ளப் படுகிறது. இது வினைத்திறன் மிக்க பாடசாலைகளை உருவாக்குவதில் பல தடைகளை ஏற்படுத்துகின்றன.

பாடசாலைகளின் செயற்பாடுகள் இன்று பன்முகப் பட்ட துறைகளில் விரிவடைந்து செல்கின்றன. புதிய கல்விக் கோட்பாடுகள், புதிய கல்விக்கொள்கைகள், நவீன கல்விச் சீர்திருத்தங்கள், உலகளாவிய கல்விச் செய்நெறிகள், உலகமயமாதல், தனியார் மயமாக்கல், தாராளமய மாக்கல் செயற்பாடுகள் விரிவடைந்து செல்வதால் பாடசாலைகளின் தூர நோக்கு, பாடசாலைகளின் இலக்குகள் விரிவடைந்து செல்கின்றன. இவற்றை மனங் கொண்டு புதிய நூற்றாண்டுக்கான செய்நெறியில் பாடசாலைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதிபர்களின் பங்கும் பணிகளும்கடமைக்கூறுகளும் விரிவடைந்து செல்கின்றன. எனவே அதிபர்கள் தங்களின் கடமைக்கூறுகளை சரியாக அறிந்து அதற்கேற்ப பாடசாலைகளை முகாமைத்துவம் செய்யவேண்டும்.

தற்போதைய பாடசாலைக் கட்டமைப்புக்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

- பாடசாலைக் கலாசாரம்
- பாடசாலை சூழலமைவு
- கலைத்திட்டம்
- போதனா வடிவமைப்பு
- தலைமைத்துவம்
- ஆசிரியத்துவம்

என்பவற்றில் புதிய மாற்றங்கள் தற்காலத்தில் தாக்க விளைவினை ஏற்படுத்தி வருகின்றன. இதற்கு ஏற்ற வகையில் வினைத்திறனும் விளைதிறனும் மிக்க செயற்பாடுகள் பாடசாலைகளில் முனைப்புப் பெற வேண்டியுள்ளன. பாரம்பரியமான மரபுரீதியான பல செயற்பாடுகளும் வலுவிழந்து செல்ல புதிய பரிமாணங்களில் கல்வியில் மாற்றங்கள் ஏற்பட் டுள்ளன.

இதற்கு ஏற்றவகையில் பாடசாலை அதிபர்கள் புதிய கோணங்களில் புதிய செய்நெறிகளில் பயணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கு ஏற்ற வகையில் அதிபர்களின் கடமைக்கூறுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

பாடசாலை ஒன்றின் நிர்வாக செயற்பாடுகளுக்கான அதிபரின் கடமைக் கூறுகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. முகாமைத்துவ முறைகள்

2. நேரசூசி தயாரித்தல்

3. பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல்

4.பாடசாலை அபிவிருத்திக்கான மக்கள் பங்கேற்பு (PSI)

5.பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம் (SBM)

6.பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் அபிவிருத்தி (SBTD)

7.ஆசிரியர், மாணவர்நலன் புரி வசதிகள்

8.மாணவர்கள் நட்பு பாடசாலை எண்ணக்கரு (CFS)

9.மாணவர்களைக் கேந்திரமாக கொண்ட கல்வி

10.துறைகள் தொடர்பான மதிப்பீடு

இந்தக் கடமைக் கூறுகளில் பாடசாலை அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டிய தேவைகள் ஏற்பட்டு வருகின்றன. அண்மையில் கல்வி அமைச்சின் 31/2014 இலக்கமும் 02.12.2014 இலக்கமும் கொண்ட சுற்று நிருபத்தின் மூலம் "எமது பாடசாலை எந்தளவுக்குத் தரமானது" என்ற வழிகாட்டல் கைநூல் பாடசாலைக் கல்வியின் பண்புத்தரங்களை உறுதி செய்வதற்கான மதிப்பீடுச் செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதில் ஒரு பாடசாலையில் நடைபெறவேண்டிய செயற்பாடுகள் 8 துறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு,

1.மாணவர் அடைவு

2.கற்றல் கற்பித்தல் மதிப்பீடு

3.முறையான கலைத்திட்ட முகாமைத்துவம்

4.இணைபாட விதானச் செயற்பாடுகள்

5.மாணவர் நலன்புரி

6.தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

7.பௌதீக வள முகாமைத்துவம்

8.பாடசாலையும் சமூகமும்

இந்தத் துறைகள் தொடர்பான நியதிகளும் சுட்டிகளும் வடிவமைக்கப்பட்டு பாடசாலைக் கல்விப் பண்புத்தரச் சுட்டி தயாரிக்கப்படுகிறது. இது வெளியக, உள்ளக மதிப்பீடுகளின் ஊடாக மேற்கொள்ளப் படுகிறது. இது தொடர்பாகவும் அதிபர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என எதிர் பார்க்கப்படுகிறது. இதில் தலைமைத்துவமும் முகாமைத்துவமும் முக்கியதுறையாக இனங் காணப்பட்டுள்ளன. இதில் அதிபரின் பிரதான கடமைக் கூறுகள் முக்கியம் பெறு கின்றன.

1.தூரநோக்கு, பணிக்கூற்று குறிக்கோள்கள் தயாரித்தல்

2.வினைத்திறனுள்ள வருடாந்த அமுலாக்கல் திட்டம் (AIP) இடைக்காலத்திட்டம் (5 Year Plan) தயாரித்தல்

3.பாடசாலையின் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புதல்

4. பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் செயற்படுத்தல் (சுற்று நிருப இல.07/2013- SDS, SDC, SMC, SPC, TEC- கட்டமைப்புக்களின் செயற்பாடுகள்)

5.நேர அட்டவணையை வினைத்திறன்மிக்கதாகசெயற்படுத்துதல்

6.வழிகாட்டல்களுக்கும் சுற்றுநிருபங்களுக்கும்அமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைப்படி பாடசாலையை செயற்படுத்தல்

7.பாடசாலை நிதிமுகாமைத்துவத்தை முறையாக மேற் கொள்ளல்

8.பாடசாலையின் உள்ளக வெளியக மதிப்பீடுகளின் மூலம் பாடசாலையின் பண்பு சார் நிலையை உயர்த்துதல்

9.மாணவர்கள் ஆசிரியர்களின் தகவல் பதிவேடுகளை முறையாகப் பேணுதல்

10.மனித வளங்களின் தேவையை நிறைவேற்றலும் முறையான கண்காணிப்பை மேற்கொள்ளலும்

11. ஆளணியினரின் தொழில்வாண்மை விருத்திக்கு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளல்

12.வினைதிறனான கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையினை பேணுதல் (EMIS)

13.பாடசாலையினுள் உயர் ஒழுக்கத்தை பேணுவதற்குரிய பொறிமுறைகளை உருவாக்கல்.

14.ஆளணியினரின் தரங்கணிப்பு செயற்பாட்டினை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்துதல், கண்காணித்தல்

15.பாடசாலையின் கோவைகள், ஆவணங்கள், பதிவேடுகள் முறையாக தயாரிக்கப் பட்டு பேணுதல், தற்காலப்படுத்துதல் 5S நடைமுறைகளைப் பின்பற்றுதல்

பாடசாலைகளின் அதிபர்கள் தமது கடமைக்கூறுகளை சரியான வழியில் முன்னெடுப்பதற்கு தமது தேர்ச்சித்திறன்களைமேம்படுத்திக் கொள்ள வேண்டும். பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துவது முக்கியமானது

1.விடய அறிவு

2.திட்டமிடல் திறன்

3.தொடர்பாடல் திறன்

4.தீர்மானம் எடுக்கும் ஆற்றல்


5.கட்டுப்படுத்தும் திறன்

6. ஒழுங்கமைக்கும் திறன்

7.பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்

8.பகிர்ந்தளிக்கும் திறன்

9.மதிப்பிடும் திறன்




10.முரண்பாட்டில் தீர்வு காணும் திறன்

11.தொழில்நுட்பத்திறன்

12.மனித விழுமியத் திறன்

13.எண்ணக்கரு தொடர்பான திறன்

14.அறிக்கையிடும் திறன்

இவற்றோடு அதிபர்கள் தமது தொழில்சார் அறிவையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். பின்வரும் விடயங்கள் தொடர்பான தொழில்சார் அறிவை மேம்படுத்த வேண்டும்.

1.நிர்வாகத் தேவைகள்

2.அதிபரின் பொறுப்புகள்

3.கணக்காய்வு விடயங்கள்

4. நிதிவிதிகளும் பிரமாணங்களும்

5.அரச சமூக நிதியிடல் தேவைகளும்வழிமுறைகளும்

6.கூட்ட நடைமுறைகள்

7.வரவு செலவுத்திட்ட கோட்பாடுகள்

8.அறிக்கைப்படுத்தும் தேவைகள்

9.மாணவர் மைய நம்பத் தகுந்த கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைகள்

10.குறித்த பாட வருட மட்ட வழிகாட்டல் ஊடான கலைத் திட்ட அமுலாக்கம்

11.மாணவர் மைய கற்றல் முறைகள்

12.வளமுகாமைத்துவம்

13.சூழ்நிலை பகுப்பாய்வு அணுகுமுறைகள்

14.தந்திரோபாய அணுகுமுறைகள்

15.அணி உருவாக்கல் நுட்பங்கள்

பாடசாலைகளின் எதிர் கால தலைமைத்துவம் பின் வரும் இயலுமைகளையும் முகாமைத்துவத் திறன்களையும் கொண்டிருக்க வேண்டும்

பாடசாலையின் தூர நோக்கினை நோக்கி கல்விச் சாதனங்களையும் அடைவுகளையும் நெறிப்படுத்தல்

சாதனை அடைவுகளை அடைவதற்கு கலைத்திட்டத்தை வினைதிறனுடன் அமுலாக்க பாடசாலையை முறையாக ஒழுங்கமைத்தல்

மாணவர்அடைவினைஉயர்த்த ஆசிரியர்களின் தேர்ச்சிகளை உயர்த்தும் வகையில் தொடர்ச்சியாக தரங்கணிப்பு செய்தல்

மாணவர் அடைவினை உயர்த்த பௌதிக, மனித, நிதி வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல்

உயர்பெறுபேறுகளைஅடைய பெற்றோர் சமூக நிறுவனங்களுடன் நெருக்கமான உறவுகளை உருவாக்குதல்

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஏனைய சமூக உறுப்பினர்கள் இலகுவில் அணுகக்கூடியவராக இருத்தல்

வெளிப்படைத்தன்மை, ஜனநாயக சூழல் நிலவுவதை உறுதிப்படுத்துதல்

பாடசாலை அதிபர்கள் தமது தொழில் தொடர்பான கடமைகளையும் பொறுப் புக்களையும் சரியாகத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். பாடசாலை ஒழுங்கமைப்பை உருவாக்குவதும் ஒழுங்கமைப்பில் உள்ள ஆளணியினர்க்கு கடமைகளையும் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் உரிய முறையில் வழங்க வேண்டும். அதேவேளை உரிய அவதானிப்பு, கண்காணிப்பு, மதிப்பிடல், அறிக்கைப்படுத்தல், தீர்மானம் எடுத்தல் என்பவற்றில் வினைத்திறனையும் விளைதிறனையும் தொடர்ச்சியாக மேம்படுத்த வேண்டும்.

இவ்வாறானவர்களையே இன்றைய பாடசாலைகள் வேண்டிநிற்கின்றன. பாடசாலைகளில் கலைத்திட்டத்தை விணைதிறனுடன் அமுல்படுத்துவதன் ஊடாக மாணவர்களின் கல்வி அடைவு மேம்பாட்டினையும் இணைத்திட்ட செயற்பாடுகளையும் உரிய முறையில் திட்டமிட்டு செயற்படுவதனூடாக மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்துவதுமே பாடசாலைகளின் மிகப் பிரதானமான தொழிற்பாடு என உணர்ந்து அதிபர்கள்பணியாற்றினால் அந்தப் பாடசாலை சமூகத்தில் நன்மதிப்பைப் பெறும் என்பதுடன் நீடித்து நிலைத்திருக்கக்கூடியமேம்பாட்டையும் பெற்றுக்கொள்ளும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

பொன்னம்பலம் அருணகிரிநாதன்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண கல்வி வலயம்

# 'ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள்' சேவைக்கு 45,000 முறைப்பாடுகள்

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒரு வருடம் நிறைவடைவதை முன்னிட்டு கடந்த 2016 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள் சேவைக்கு இதுவரை சுமார் 45 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.**

இத் தகவலை "ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள்" நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிப்பதற்காக நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போது ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் ஷிரால் லக்திலக தெரிவித்தார். "பொதுமக்கள் மீதான அரசாங்கத்தின் அக்கறையை அதிகரிப்பதே இச்சேவையின் நோக்கமாகும்" என்று மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் மக்களின் மனக்குறைகள் தீர்க்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு முறையான ஒழுங்கில் பொதுமக்களின் மனக்குறைகளை தீர்ப்பதற்கான ஒரு மத்திய முறைமை ஏற்படுத்தப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

இந்த புதிய முறைமையின் காரணமாக பல கடிதங்களும் கோவைகளும் நீண்டகாலமாக நடவடிக்கைகள் எடுக்கப்படாது கிடப்பில் போடப்பட்டிருந்த யுகத்திற்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.

"ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள்" சேவையூடாக பதிவு செய்யப்பட்டுள்ள 44,677 மனக்குறைகள், கருத்துக்களில் பெரும்பாலும் அரைவாசிக்கு மேற்பட்டவை 1919 என்ற இலக்கத்திற்கு அழைப்பு மேற்கொண்டு அரசாங்க தகவல் நிலையத்தின் ஊடாக பதிவு செய்யப்பட்டவையாகும் என்பதோடு, ஏனையவை மின்னஞ்சல் (tell@presi dents office.lk), முகநூல் (Maithri palaS) அல்லது தபால் மூலம் (Tell President, P.O.box 123, Colombo) பதிவு செய்யப்பட்டவையாகும்.

பொதுமக்களுக்கு துரிதமாகவும் பொறுப்புடன் பதிலளிப்பதையும் உறுதி செய்வதற்கு சகல அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் இச்சேவையுடன் இணைந்துள்ளதோடு, குறித்த மனக்குறைகளை கையாள்வதற்கான முறையான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளதென ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் எஸ்.ரி.கொடிக்கார தெரிவித்தார்.

"ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள்" நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் தனிப்பட்ட, சமூகம் சார்ந்த, கிராமியத்துறை சார்ந்த, சுகாதாரம், கல்வி, சுற்றாடல், பொருளாதாரம், ஊழல், கொள்கை மற்றும் கருத்துக்கள் சார்ந்தவை என பல்வேறுபட்டவையாகும். (இ-5)

## இரு ஏவுகணைகளை பரிசோதித்தது ஈரான்

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரத் தடை என்ற கடிவாளம் அண்மையில் விலக்கப்பட்ட நிலையில் தனது நாட்டின் ஆயுத வல்லமையை அயல் நாடுகளுக்கு பறைசாற்றும் விதமாக நேற்று முன்தினம் கண்டம்விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் ஏவுகணையை பரிசோதித்த ஈரான், நேற்று மேலும் இரு கண்டம்விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் ஏவுகணைகளை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது. (இ-5)

# இலங்கை இளைஞர் கிரிக்கெட் அணிக்கு முகாமையாளராக தர்மகுலசிங்கம்

கொழும்பு தவிர்ந்த பிற மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்களை ஊக்குவித்து தேசிய அணியில் இடம்பெறச் செய்வதற்காக பிற மாவட்ட இளைஞர்களையும் பாடசாலை வீரர்களையும் கொண்ட தேசிய இளம் அணி ஒன்று தயாராகியுள்ளது.

இந்த அணியை "ஸ்ரீலங்கா கிரிக்கெட்" அமைப்பு பத்து நாட்கள் கிரிக்கெட் சுற்றுலாவுக்காக மலேசியாவுக்கு அனுப்பி வைக்கின்றது.

இன்று வியாழக்கிழமை 10 ஆம் திகதி கொழும்பிலிருந்து கோலாலம்பூர் புறப்படும் இந்த அணியை யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் கே.தர்மகுலசிங்கம் அணி முகாமையாளராக வழி நடத்துகின்றார்.

"சிறு மாவட்ட அழைப்பு இளைஞர் அணி" (மைனர் டிஸ்ட்ரிக்ட் இன்விட்டேஷன் யூத் டீம்) என்ற பெயரில் மலேசியா செல்லும் அணியில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூன்று தமிழ் வீரர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் அநுராதபுரம், புத்தளம், மாத்தளை, மாத்தறை, மொனராகலை, கேகாலை, பொலநறுவை, நுவரெலியா, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வீரர்களும் இவ்வணியில் இடம்பெறுகின்றனர்.

மலேசிய தேசிய அணிக்கு எதிராக 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் 2 இருபது - 20 கிரிக்கெட் போட்டிகளிலும் சிறு மாவட்ட இளைஞர் அணி விளையாடவுள்ளது. இப்போட்டிகள்யாவும் கோலாலம்பூர் கின்ராரா ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளன. (இ-5)

# வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி

## 17 ஆம் திகதி ஆரம்பமாகின்றது




திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும் திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடனும் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களுடனும், மேடையேற்றப்படவுள்ள வேள்வித் திருமகன் ஆற்றுகைக்கான ஏற்பாடுகள் இப்பொழுது இடம்பெற்று வருகின்றன.

திருமறைக் கலாமன்ற இயக்குநா நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் முதன்முதலாக கடந்த 2012 ஆம் ஆண்டு மேடையேற்றம் கண்ட திருப்பாடுகளின் காட்சி மேலும் புதிய மாற்றங்களுடன்2014 ஆம்ஆண்டில் இரண்டாவது தடவையாக மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தது. இம்முறையுடன் மூன்றாவது தடவையாக மேடையேற்றப்படும் வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சிக்கான நெறியாள்கையை மன்றக் கலைஞரான தை.யஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார். (இ-5)

# இந்தோனேசியாவில் முழு சூரியகிரகணம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் சூரிய கிரகணம் முழுமையாக தெரிந்தது. இதனால் பகல் இருட்டாக மாறியது.

சூரியனுக்கும், பூமிக்கும் நடுவில் சந்திரன் வரும் போது சூரிய ஒளி மறைக்கப்படுகிறது.

அதுவே சூரிய கிரகணம் என்றழைக்கப்படுகிறது. இந்த சூரிய கிரகணம் நேற்றுக் காலை 6.20 மணி முதல் 6.50 மணி வரை ஏற்பட்டது.

இந்த சூரிய கிரகணம் ஆசியா, அவுஸ்திரேலியா கண்டத்தில் உள்ள நாடுகளில் தெளிவாக தெரிந்தது. குறிப்பாக இந்தோனேசியா மற்றும் பசுபிக் நாடுகளில் முழுமையாக ஏற்பட்டது.

இதனால் பகல் நேரம் இருட்டாக மாறியது. இந்தோனேசியாவில் பைலிடங் மாகாணத்தில் முழு சூரய கிரகணம் தெளிவாகத் தெரிந்தது.

அங்குள்ள ஆலிவியர் கடற்கரையில் திரளாகக் கூடி நின்று சூரிய கிரகணத்தை பொதுமக்கள் இரசித்தனர்.

அவர்களில் சுற்றுலா பயணிகளும் அதிக அளவில் இருந்தனர். அவர்களில் அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளை சேர்ந்தவர்கள் அடங்குவர். அவர்கள் சூரிய கிர கணத்தை புகைப்படம் எடுத்தனர்.

மேலும், சுமாத்ரா, போர்னியோ, கலாவேசி பகுதிகளிலும் சூரிய கிரகணம் தெரிந்தது.

அங்கு சுமார் 4 மணி நேரம் இது நீடித்தது. மாபா, மலுகு தீவுகளில் 2 முதல் 3 நிமிடங்கள் சூரிய கிரகணம் நிலவியது.

தென்சீனா, தென்கிழக்கு ஆசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்காவின் ஹவாஸ், அலாஸ்கா ஆகிய பகுதிகளில் பாதி அளவு சூரிய கிரகணம் தெரிந்தது.

சூரிய கிரகணத்தை வெறுங் கண்ணால் பார்க்கக் கூடாது என வானியல் வல்லுநர்கள் அறிவுறுத்தியிருந்தனர்.

எனவே டெலஸ்கோப், கமராக்கள் மற்றும் சிறப்பு கண்ணாடிகள் மூலம் சூரிய கிரகணத்தை பொதுமக்கள் பார்த்து இரசித்தனர்.(இ-5)

# இளவரசர் வில்லியம்,கேத் மிடில்டன் பிள்ளைகளுடன் விடுமுறை சுற்றுலா



(லண்டன்)

பிரித்தானிய இளவரசர் வில்லியமும் கேம்பிரிட்ஜ் சீமாட்டி கேத் மிடில்டனும் தமது மகனான இளவரசர் ஜோர்ஜ் (வயது-2), மகளான இளவரசி சார்லொட் (10 மாதம்) சகிதம் பிரான்ஸின் அல்ப்ஸ் மலைப் பிராந்தியத்திலுள்ள கோர்ச்சவெல் எனும் இடத்திற்கு விடுமுறையைக் கழிப்பதற்காக சென்றுள்ளதை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி சுற்றுப் பயணத்தை வில்லியமும் கேத் மிடில்டனுமாக இரகசியமாக மேற்கொண்டிருந்த நிலையில், அவர்களுடன் சென்ற தனிப்பட்ட புகைப்படக் கலைஞர் ஒருவர் தன்னால் எடுக்கப்பட்ட 6 புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

இளவரசர் வில்லியம் தனது குடும்பத்துடன் நாடு திரும்பி சில மணித்தியாலங்களிலேயே இந்தப் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (இ-5)

# லண்டன் மில்லியன் பெண்கள் பேரணியில் தமிழ்ப் பெண்களின் நீதிக்கான நடை





சர்வதேச மகளிர் தினத்தை மையப்படுத்தி லண்டனில் ஆண்டு தோறும் பிரமாண்டமாக முன்னெடுக்கப்பட்டு வரும் மில்லியன் பெண்கள் பேரணியில் தமிழ் பெண்களின் நீதிக்கான நடையும் இணைந்து கொண்டது.

அனைவரும் பெண்கள் என்ற ஒற்றைப்புள்ளியில் பல்லின பெண்கள் பல்வேறு கோரிக்கைகள், நிலைப்பாடுகளை முன்னிறுத்தி இடம்பெறும் இப்பேரணியில் இலங்கையில் தமிழ் பெண்கள் எதிர் கொள்ளும் சவால்களுக்கும் இதன் போது நீதி கோரப்பட்டது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பெண்கள், சிறுவர், முதியோர் நலன்பேணல் அமைச்சின் ஒருங்கிணைப்பில் அதிகளவான தமிழ் பெண்கள் பங்கெடுத்திருந்தனர்.

லண்டன் ஒக்ஸ்போர்ட் சேர்க்கஸ் ( oxford circus) இல் தொடங்கிய இந்த பேரணி Trafalgar Square இல் முடிவடைந்தது.

இலங்கை இராணுவத்தின் பாலியல் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிய தமிழ் பெண்களுக்கான நீதியினைக் கோரும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதோடு, இலங்கையின் மனித உரிமை மீறல்களை அம்பலப் படுத்தும் துண்டுப்பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டது. (இ-5)




சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி சித்தங்கேணி பெரியவளவு மகா கணபதிப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் தொடர்பான ஆலய திருத்த வேலைக்கு நிதி யைகையளிக்கும் போது....

# ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் மூத்த தளபதி அமெரிக்க விமானப்படைத் தாக்குதலில் பலி

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் அதனை இஸ்லாமிய அரசாக அறிவித்துள்ளனர். உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் மீது அமெரிக்கக் கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

சிரியாவில் மேலும் பல பகுதிகளை கைப்பற்றுவதற்கு ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கான போர் திட்டத்தை வகுத்து தருவதில் வல்லவனாக அறியப்பட்ட 'ஓமர் தி செச்சென்' என்ற பட்டப்பெயர் கொண்ட அபு உமர் அல் ஷிஷானி என்பவனை கொல்ல அமெரிக்கப் படைகள் தேடிவந்தன.

சோவியத்யூனியனோடு இணைந்திருந்த ஜார்ஜியா பகுதியில் கடந்த 1986ஆம் ஆண்டு பிறந்த ஷிஷானி, ஐ.எஸ். தலைவன் அபுபக்கர் பக்தாதியின் போர் ஆலோசகராக விளங்கிவந்ததாக நம்பப்படுகிறது. ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் மூத்த தளபதியாக இருந்துவந்த இவனது தலைக்கு அமெரிக்கா 50 இலட்சம் டொலர்களை பரிசாக அறிவித்திருந்தது.



சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் பிடிக்கப்படும் வெளிநாட்டினரும் உள்நாட்டு எதிர்ப்பாளர்களும் ஐ.எஸ். கட்டுப்பாட்டில் உள்ள ரக்கா நகரில் உள்ள ஒரு இரகசிய சிறையில் அடைத்து வைத்து சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இந்த சிறைசார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் ஷிஷானியின் மேற்பார்வையில் தான் நடந்து வந்தன.

இந்தநிலையில், கடந்த நான்காம் திகதி இவனது இருப்பிடத்தை குறிவைத்து அமெரிக்க விமானப்படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் அபு உமர் அல் ஷிஷானி உயிரிழந்ததாக நம்பப்படுவதாக அமெரிக்க இராணுவம் அறிவித்துள்ளது. (இ-5)

# மின்னஞ்சலை கண்டுபிடித்தது நான் அங்கீகாரம் வேறொருவருக்கா?

## அய்யாதுரை ஆதங்கம்



சிவா அய்யாதுரை

மன்னஞ்சலை நான் கண்டுபிடித்தேன், ஆனால் நிற துவேசம் காரணமாக அதற்கான அங்கீகாரம் வேறொருவருக்கு அளிக்கப்படுகிறது என்று தமிழர் சிவா அய்யாதுரை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த ரேமண்ட் டாம்லின்சன் (வயது-74) அண்மையில உயிரிழந்தார். அவர்தான் ஈ-மெயிலை கண்டுபிடித்தவர் என்றும், மன்னஞ்சலின் தந்தை என்றும் அனைத்து ஆங்கில செய்தி மற்றும் சில தமிழ் நிறுவனங்களும் புகழாரம் சூட்டியுள்ளன. ஆனால் அந்த அங்கீகாரம், கௌரவம் தனக்குச் சொந்தமானது என்று அமெரிக்காவில் வாழும் தமிழர் சிவா அய்யாதுரை உரிமை கோரியுள்ளார். மன்னஞ்சலுக்கான காப்புரிமையும் அவரிடமே உள்ளது. இந்த விவகாரம் குறித்து டுவிட்டரில் அவர் கூறியிருப்பதாவது,

என்னுடைய 14ஆவது வயதில் மினனஞ்சலுக்கான மென்பொருளை உருவாக்கினேன். அதற்கு ஈ-மெயில் என்று பெயர் சூட்டினேன். அதற்கு முன்பு ஒரு கணனிக்கும் இன்னொரு கணனிக்கும் நேரடி இணைப்பின் மூலம் தகவல் அனுப்பும் சேவை இருந்தது. அதில் வெறும் வார்த்தைகளை (டெக்ஸ்ட் மெசேஜ்) மட்டுமே அனுப்ப முடியும். அதை தான் ரேமண்ட் கண்டு பிடித்தார்.

நான்தான்முதன்முதலில்கணனி மூலம் தகவல்களை அனுப்பும் மென்பொருளை உருவாக்கினேன். நான் கண்டுபிடித்த மன்னஞ்சல், டெக்ஸ்ட் மெசேஜ் அல்ல. ஈ-மெயிலில் உள்ள இன்பாக்ஸ், அவுட்பாக்ஸ், சிசி, பிசிசி, டேட்டா, பார்வர்டு, ரீப்ளை உட்பட அனைத்தையும் நான்தான் உருவாக்கினேன்.



▲ ரேமண்ட் டாம்லின்சன்

அதற்கான காப்புரிமையை 1982 இல் பெற்றேன். ஆனால் எனக்கான அங்கீகாரம் இன்னும் முழுமையாக கிடைக்கவில்லை. அதற்கு காரணம் நான் இந்தியன், கறுப்பு நிறத்தவன், புலம்பெயர்ந்தவன்.

உண்மைக்கு நிச்சயம் அங்கீகாரம் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பனங் கைப்பணியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன

பனைஅபிவிருத்திச் சபையினால் பனங் கைப்பணியாளர்களுக்கான உபகரணம் வழங்கல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கூட்டுறவாளர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பனைஅபிவிருத்திச் சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

வடக்கு மாகாண வாழ்வா தார அபிவிருத்தித் திட்ட நிதியில் யாழ். மாவட்டத்தின் கரவெட்டி பிரதேச செயலர் பரிவிலுள்ள இமையாணன் கிராமம் பனங் கைப்பணிக் கிராமமாக பனை அபிவிருத்திச் சபையினால் தெரிவு செய்யப்பட்டு வாழ்வாதாரம் தேடும் 80 பெண்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு,பணங்கைப்பணி சுயதொழிலை மேற்கொள்வதற்காக உபகரணங்கள் மற்றும் மூலப்பொருள் கொடுப்பனவு என்பன வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இவர்களுடன் விழிப் புலனற்றோர் 19 பயனாளிகளும், யாழ். சிறைச்சாலையிலுள்ள 7 பயனாளிகளும், இந்தியாவிலிருந்து மீளக்குடியமர்ந்த 3 பயனாளிகளுமாக மொத்தம் 109 பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

2013ஆம் ஆண்டு தொடக்கம் பனங்கைப்பணிக் கிராம திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் சபையின் விரிவாக்கல் பகுதியினால் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் வாழ்வாதாரம் தேடும் பெண்கள், சுயதொழிலாளர்களை இணைத்து பனங் கைப்பணிப் பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்கி வருகின்றன. இதுவரை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பனை வளம் சார் 9 கிராமங்களில் 930 பெண் சுய தொளிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,புனர்நிர்மாணம்,மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தார். (இ-9)

# தாஜுதீன் கொலை; பொலிஸாருக்கு அழுத்தம் கொடுத்த நாமல் எம்.பி.



மர்மமான முறையில் உயிரிழந்த பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் சடலம் குறித்து விசாரணைகள் நடைபெற்றபோது, சடலத்தை விரைவாக விடுவிக்குமாறு முன்னாள் ஜனாதிபதியின் மகன் நாமல ராஜபக்ஷ பொலிஸ் அதிகாரியொருவருக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் இந்த விசாரணைகளை பொலிஸார் கையளித்தபோது, பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் இந்த விபரம் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அறிக்கைக்கமைய, ராஜபக்ஷ குடும்பத்திற்கு மிக நெருக்கமாக அக்காலத்தில் பணியாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அநுர சேனர்நாயக்க, தாஜுதீன் கொலை வழக்கு விசாரணைகளில் தலையீடு செய்ததாக தகவல்கள் இருப்பதாக தற்போது வெளியாகியுள்ள தகவல்களின் மூலம் தெரிய வருகிறது.

இதேவேளை, தாஜுதீன் கொலை வழக்கில், தாஜுதீனின் நெருக்கிய நண்பர்கள் இருவரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அண்மையில்விசாரணைகளை நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-09.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.83 | 146.76 |
| பவுண்ட் | பிரிட்டன் | 201.87 | 209.06 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 155.79 | 162.06 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.15 | 148.11 |
| டொலர் | கனடா | 105.65 | 109.94 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 104.92 | 109.83 |
| டொலர் | சிங்கப்பூர் | 102.50 | 106.42 |
| ரூபா | இந்தியா | 2.1349 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.7212 |
| குவைத் | டினார் | 478.6274 |
| ஓமான் | ரியால் | 373.8039 |
| கட்டார் | ரியால் | 39.5218 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3731 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1813 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 120 | 90 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 100 | 65 | 70 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 130 | 140 | 160 | 200 | 120 |
| தக்காளி | 40 | 30 | 20 | 30 | 40 | 60 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 35 | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 40 | 40 | 45 | 50 | 60 | 60 | 50 |
| கரட் | 80 | 100 | 100 | 100-150 | 120 | 160 | 100 |
| பூசணி | 40 | 40 | 30 | 60 | 50 | 80 | 60 |
| புடோல் | 50 | 40 | 30 | 60 | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 35 | 40 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 60 | 70 | 60 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 60 | 70 | 80 | 80 | 70 |
| பாகற்காய் | 150 | 100 | 120 | 120 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 60 | 50 | 80 | 120 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 100 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 50 | 80 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 60 | 60 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 100 | 120 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 300 | 200 | 420 | 400 | 400 |
| போஞ்சி | 100 | 200 | 70 | 80 | 120 | 160 | 100 |
| கத்தரிதம்பள்ள | 80 | 30 | 50 | 60 | — | 120 | 80 |
| கீரை – 1பிடி | 30 | 10 | 15 | 30 | 50 | 40 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 60 | 80 | 80 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35-50 | 25-35 | 50 | 40 | 35-40 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 100 | 120 | 150 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 60 | 80 | 70 | 60 | 120 | 60 |
| முள்ளங்கி | 20 | 40 | 20 | 40 | 40 | 60 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 15 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இந்தியப் படகுகளை இலங்கைக் கடற்படை தடுத்து நிறுத்தியது 127

அத்துமீறி நுழைந்த படகுகள் மீது இலங்கையின் சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மந்திரி சபை கூட்டத்தின் முடிவில் அறிவிக்கப்பட்டது.

இந்தியப் படகுகளை இலங்கையின் கடல் பிராந்தியத்துக்குக்குள் நுழைய விட வேண்டாம் என்று முப்படைகளுக்கும் அதிபர் ஜெயவர்த்தனா கட்டளையிட்டார்.

### படகுகள் புறப்பாடு

ஆயினும் இலங்கைத் தமிழர்களுக்கு உதவ படகுகளை அனுப்பியே தீருவது என்ற முடிவுக்கு இந்தியா வந்தது.

அதன்படி ராமேஸ்வரத்தில் இருந்து 19 படகுகள் 3-6-1987 அன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டன. ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் ராமேஸ்வரம் கரையில் கூடியிருந்து கைதட்டி ஆராவாரம் செய்து வழியனுப்பினர்.

### உணவுப் பொருள்

இந்தப் படகுகளில் 850 தொன் அரிசி, 50 தொன் பருப்பு, 5 தொன் உப்பு, 8 தொன் காய்கறிகள், 10 தொன் பால், 18 தொன் சமையல் எண்ணெய், 150 கிலோ மஞ்சள், 50 ஆயிரம் தீப்பெட்டிகள், 6 ஆயிரம் ரொட்டிகள் மற்றும் மருந்துகள், மண் எண்ணெய், (மொத்தம் 950 தொன்) இந்தப் படகுகளில் அனுப்பத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் படகுகளில் இவ்வளவு பொருட்களை ஏற்ற முடியவில்லை. 162 மூட்டை அரிசி, 23 மூட்டை பருப்பு, 53 பெட்டி நிறைய பால் பவுடர், 30 பெட்டிகளில் தீப்பெட்டிகள், (மொத்தம் 38 தொன்) ஆகியவற்றையே ஏற்ற முடிந்தது.

### டாக்டர்கள்

ஒரு படகில் டாக்டர் குப்தா தலைமையில் டாக்டர்களும், செஞ்சிலவைச் சங்கத்தைச் சேர்ந்த 16 பேரும் இருந்தனர். மற்றும் 108 நிருபர்கள், புகைப்படக்காரர்கள், டெலிவிஷன் நிருபர்கள் ஆகியோரும் உடன் சென்றனர்.

இவர்களுக்குப் பாதுகாப்பாக 2 ஹெலிகப்டர்களும், கப்பல் படையைச் சேர்ந்த 2 விமானங்களும் சென்றன. படகுகள் புறப்படுவதற்கு முன் மத்திய அரசு இலங்கை அகதிகள் மறுவாழ்வு தலைவர் மாதோர் சர்மா படகுகளைப் பார்வையிட்டார்.

### கலெக்டர்

உணவுப் பொருட்களைப் படகில் ஏற்றியதை ராமநாதபுர மாவட்ட கலெக்டர் அஜாய் பட்டாச்சார்யா, அகதிகள் மறுவாழ்வுத்துறை இயக்குனர் பழனிச்சாமி, உணவுப் பொருட்கள் இயக்குனர் சுந்தரம், கூட்டுறவுச்சங்கப் பதிவாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னின்று கவனித்தனர்.

### 5 மணி நேரம்

ராமேசுவரத்தில் இருந்து யாழ்ப்பாணம் 20 மைல் துரம் தான் என்றாலும் படகில் இந்தத் துரத்தைக் கடக்க 5 மணி நேரம் பிடிக்கும். கடலில் அலைகள் இல்லாமல் அமைதியாக இருந்தது. எனவே படகுகள் விரைவாகச் சென்று மாலை 5.30 மணி அளவில் இலங்கை கடல் எல்லையை நெருங்கின.

### தடுத்து நிறுத்தின

இந்தப் படகுகளை கடற்படையினர் தடுத்து நிறுத்தினார்கள். 7 கடற்படைப் படகுகள் இந்தியப் படகுகளை மறித்தன.

இலங்கை கடல் பகுதிக்குள் வரக்கூடாது. வந்தால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்று ஒலி பெருக்கி மூலம் இலங்கை கடற்படை அதிகாரிகள் அறிவித்தனர்.

### இலங்கையின் திமிர்

பிறகு இந்திய அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடந்தது. இந்தியப் படகுகளை இலங்கைப் பகுதிக்குள் அனுமதிக்க முடியாது. தமிழ் நாட்டில்தான் இப்போது பஞ்சம் தாண்டவமாடுகின்றது. இந்த உணவுப் பொருட்களை அங்கே கொண்டு போய்க் கொடுங்கள் என்று இலங்கை அதிகாரிகள் திமிராகக் கூறினார்கள்.

உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற இந்தியப் படகுகள் இலங்கை அனுமதி மறுத்ததால் நள்ளிவில் இராமேசுவரத்துக்கு திரும்பி வந்து சேர்ந்தன.

இலங்கை கடற்படை கப்பல்களில் ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள் இருந்தனர். ஆனால் இந்தியப் படகுகளில் ஆயுதம் எதுவும் கொண்டு செல்லப்படவில்லை. அதன் காரணமாகவே இலங்கை கடற்படையை எதிர்க்காமல் இந்திய படகுகள் திரும்பி விட்டதாக ஒரு அதிகாரி கூறினார்.


### இந்தியா எச்சரிக்கை

உணவுப் பொருட்களை எடுத்துச் சென்ற படகுகளைத் தடுத்து நிறுத்தியதால் இலங்கைக்கு இந்தியா கடும் எச்சரிக்கை விடுத்தது.

யாழ்ப்பாணத் தமிழர்கள் படும் அவதியையும் இனியும் சும்மா பார்த்துக் கொண்டு இருக்க மாட்டோம் என்று டில்லியில் மத்திய அரசு அதிகாரி தெரிவித்தார்.

இந்தியப் படகுகளில் வெறும் உணவுப் பொருட்கள் தான் இருந்தன. இலங்கை படகுகளில் இருந்த ராணுவத்தினர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார்கள். எனவே படகுகள் திரும்பி வந்தன என்றும் அவர் கூறினார்.

இந்தியப் படகுகளை திருப்பி அனுப்பிய இலங்கைக்கு இந்தியா பதிலடி கொடுத்தது. இந்தியப் போர் விமானங்கள் யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொட்டலங்களுடன் பறந்து சென்று பசியால் வாடும் இலங்கைத் தமிழர்களுக்குப் பாரசூட் மூலம் உணவுப் பொட்டலங்களைப் போட்டனர்.



(தொடரும்)

# காணாமற் போனவர்களில் பலர் கனடாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்

## தினேஷ் குணவர்த்தன சர்ச்சை



(கொழும்பு)

காணாமற் போனவர்களில் பலர் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக் கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இறுதிக் கட்ட யுத்தத்தில் காணாமற் போனதாக கூறப்படும் 7ஆயிரம் பேரில் பலர் கனடா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையுடன் இணைந்து உயிரிழந்தவர்கள் எண்ணிக்கையை போலியாக வெளிக்காட்ட முயற்சிப்பதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுப்பதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-12)

# இருபது பேருக்கு எதிராக இன்டர்போல் பிடியாணை

(கொழும்பு)

**பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் 20 பேருக்கு எதிராக இன்டர்போல் பொலிஸ் சிவப்பு பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த இருபது பாதாள உலகக்குழு உறுப்பினர்களையும் கைது செய்யும் நோக்கில் இவ்வாறு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

போதைப் பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இவர்கள் பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை ஐஸ் மஞ்சு என்பவரும் இதில் அடங்குகின்றார். நாட்டிலிருந்து தப்பிச் சென்ற பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இத்தாலி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் குறித்த நாடுகளின் பொலிஸார் பாதாள உலகக்குழு செயற்பாட்டாளர்கள் தொடர்பில் அதிக கரிசனை காட்டுவதில்லை எனவும் புகலிடக் கோரிக்கையாளர் பிரச்சினையே அந்த நாடுகளில் முதன்மையானது எனவும் சிங்கள ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் அதிகளவான பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இத்தாலியில் மறைந்து வாழ்வதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# இலங்கையிலிருந்து தென்னாபிரிக்காவிற்கு தொழில்நுட்பக் குழுவினர் அனுப்பி வைப்பு

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடைமுறைகளை தெரிந்துகொள்வதற்காக இலங்கையில் இருந்து தொழில்நுட்பக் குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நிலவிய நிறவெறியை ஒழிக்க உண்மை மற்றும் நல்லிணக்கக்குழு அமைக்கப்பட்டது.

எனவே இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க தென்னாபிரிக்காவின் உதாரணங்களைப் பெற்றுக் கொளளமுடியும் என்றும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும் சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்காக பொறிமுறை ஒன்றை அமைக்கும் எண்ணம் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-12)

# பொதுச் செயலாளராக மகிந்த



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தலைமையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் இந்த தெரிவு இடம் பெற்றுள்ளது.

முன்னாள் அமைச்சர் விஸ்வ வர்ணபால காலமானதை அடுத்து இந்த பதவியில் வெற்றிடம் நிலவியது.

இதனையடுத்து அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உட்பட்ட பலரின் பெயர்கள் குறித்த செயலாளர் பதவிககாக பரிந்துரைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(இ-12)

# வெளிநாட்டு வாழ் 1500 இலங்கையர்களுக்கு 15-ம் திகதி இரட்டைக் குடியுரிமை வழங்கப்படும்

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் ஆயிரத்து 500 இலங்கையர்களுக்கு 15ம் திகதி இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட உள்ளதாக உள்விவகார அமைச்சர் எஸ்.பி. நாவின்ன கொழும்பு பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, இத்தாலி உள்ளிட்ட பல நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்கு இவ்வாறு இரட்டைக் குடியுரிமை வழங்கப்படவுள்ளது.

இந்த ஆண்டு பூர்த்தியாவதற்கு முன்னதாக 18 ஆயிரம் வெளிநாட்டவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதே அரசாங்கத்தின நோக்கமாக அமைந் துள்ளது.

இரட்டைக் குடியுரிமை வழங்கும் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தியாகி யுள்ளன.

மூன்றாம் கட்டத்தின் அடிப்படையில் இந்த மாதம் 15ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆயிரத்து 500 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட உள்ளது. இவர்களில் பலர் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களாவர்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு மட்டும் இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டது. இதனால் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டிருந்தது.

எமது அரசாங்கம் இந்த அநீதியை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றது என அமைச்சர் எஸ்.பி. நாவின்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

# தரம் பிரிப்போம்

நாம் எந்த ஒரு வேலையைச் செய்ய முன்னரும் அது தொடர்பான விடயங்களைச் சற்றேனும் சிந்தனை செய்ய வேண்டும்.

ஆனால் ஒரே நேரத்தில் நான்கு வேலைகள் வந்து சேர்ந்து விட்டால், குழப்பமடை யாமல், எந்த வேலையை முதலில் மேற்கொள்வது என்பதிலேயே நம் கவனம் திசை திருப்பப்பட வேண்டும்.

முக்கியமல்லாதவற்றை முதலில் மேற்கொண்டு அரிய வாய்ப்புக்களை இழந்து குழப்பத்திற்கும் மனக்கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாகும் மூளையற்ற மனிதர்களின் பட்டியலில் நாமும் இடம்பெறக்கூடாது.

இருக்கும் வேலைகளுள் எது சுலபமானதோ அதை முதலில் செய்வோம். கடினமானவற்றைப் பின்னர் பார்த்துக் கொள்வோம் என்னும் தவறான மனப்பான்மையானது வழுக்கும் வாழ்க்கைப் பாறையில் சறுக்குச் சக்கரங்களைக் கட்டிக் கொண்டு நடக்க முயல்வது போலாகும்.

ஒவ்வொன்றையும் எப்படியாவது முடித்தாக வேண்டுமே என்ற பதற்றத்தை முதலில் ஏற்படுத்திக் கொள்ளாதிருக்க வேண்டும்.

பதற்றப்படும் மனத்தால் சரியான முடிவை எடுக்க முடியாது.

அப்படியே எடுத்தாலும் அந்த முடிவு சரியானது தானா? என்ற ஐயம் தலைதூக்கும். அதுவே நமக்கிருக்கும் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கெடுத்துக் காரியத்தையும் குட்டிச்சுவராக்கிவிடும்.

எனவே தெளிவான சிந்தனையுடன் பிரச்சினையை அணுக வேண்டும்.

முதலாவதாக,

எத்தனை வேலைகள் உள்ளனவோ, அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக எழுதிக்கொள்ள வேண்டும்.

இனி, கீழ்க்கண்ட கேள்விகளை ஒவ்வொரு வேலையின் மீது எழுப்புங்கள்.

இது மீண்டும் கிடைக்காத அரிய சந்தர்ப்பம் தானா?

தகுதியால் எல்லாவற்றையும் விட இது உயர்ந்ததுதானா? செய்யாமல் தவிர்த்து சம்பந்தப்பட்டவர்களைச் சமாதானப்படுத்த முடியாத வேலையா?

தள்ளிப் போடுவதால் மற்றையவற்றை விட அதிக நஷ்டத்தை ஏற்படுத்துமா?

நேரமே இதன் பிரதானமான கருவா?

தவிர்த்தால் குறிப்பிட்ட நண்பருடைய அல்லது பலருடைய கண்டனத்திற்கு உள்ளாவோமா?

இந்த ஆறு கேள்விகளும் உங்கள் முன்னுள்ள பிரச்சினை என்னும் பெரிய உருவத்தின் கழுத்தைச் சுற்றி நெரித்துக் கொல்லும் கணைகள் போன்றவை.

சற்றுப் பொறுமையுடன் சிந்தித்து, ஆம் இல்லை என்று அந்தந்த வேலையின் நேரே எழுதுங்கள்.

ஆம் என்பதை அதிகம் பெறும் வேலையை முதலாவதாகவும் இல்லை என்பதை அதிகம் பெறும் வேலையை முடிவாகவும் வரிசைப்படுத்துங்கள்.

இந்தவரிசையின் படி வேலையை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் முடிவு நூற்றுக்கு நூறு சரியானதாக இருக்கும்.

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்


1380

## பணிவு!

ஒரு ஊரில் துமிலன் என்ற பெரியவர் இருந்தார். அவர் பெரிய செல்வந்தர். தன்னால் எதுவும் முடியும். யார் உதவியுமின்றித் தன்னால் எந்தச் செயலையும் சாதிக்க முடியும் என்ற பெருமையில் யாரையும் மதிக்க மாட்டார்.

அவர் மகன் துஷாருக்கு இவரது பெருமை குணம் பிடிக்காது. அவரை எப்படி திருத்துவது என்று யோசித்தபடியே தோட்டத்திற்குள் நுழைந்தான.

அவன் தந்தை தோட்டத்தில் தொரட்டியைக் கொண்டு மிக உயர்ந்த முருங்கை மரத்திலிருந்து முருங்கைக்காயைப் பறிக்க முயன்றார். எவ்வளவோ முயன்றும் அவரால் பறிக்க முடியவில்லை. இதைப் பார்த்துக் கொண்டிருந்த மகன், "அப்பா உங்களுக்கு உதவுகிறேன்," என்றான்.



"இவ்வளவு வயதும், உயரமும் உள்ள என்னாலேயே பறிக்க முடியவில்லை. நீ நாலடி இருந்து கொண்டு சாதித்து விடுவாயா?" என்று கேட்டார்.

"நான் முயற்சிக்கிறேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது," என்றான் மகன்.

கேலிச் சிரிப்போடும், அலட்சியத்தோடும் தொரட்டியை மகனிடம் கொடுத்தார் தந்தை.

"அப்பா கொஞ்சம் குனியுங்கள். உங்கள் தோளில் நான் ஏறிக்கொள்ள வேண்டும்" என்றான்.

அவன் யோசனை அவருக்கு வியப்பைத் தந்தது. உடனே குனிந்து அவனைத் தோளில் ஏற்றிக் கொண்டார். தந்தையின் தோளில் இறுக்கமாக விழாதவாறு நின்று தொரட்டியைக் கையில் வாங்கி முருங்கை மரத்தின் காயை வெகு லாவகமாகத் தட்டிவிட்டான். நிமிடத்தில் மளமளவெனக் காய்கள் அவன் தந்தையின் காலடியில் வந்து விழுந்தன.

"எப்படிடா இதையெல்லாம் கற்றுக் கொண்டாய்?" என்றார் தந்தையார்.

"அப்பா, இதுவரை யாரையும் மதிக்காமல் நீங்கள் நிமிர்ந்திருந்தபோது உங்களை யாருமே மதிக்கவில்லை.

உங்கள் நிலையிலிருந்து இறங்கி ஒரு நிமிடம் எனக்காக நீங்கள் குனிந்தீர்கள் அல்லவா? அந்தப் பணிவைப் பார்த்து முருங்கைக் காய்கள் இப்போது உங்கள் காலடியில் வந்து விழுந்துள்ளன," என்று கூறினான்.

அன்று முதல் அவரது கர்வம் குறைந்தது. அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பனாகத் தன் மகன விளங்கினான், என அனைவரிடமும் தன் மகனைப் பாராட்டி பெருமையடைந்தார் பெரியவர்.

## 03.2016 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1535 - பனாமாவின் ஆயரான ஃபிறே டொமாஸ் டெபேர்லாங்கா என்பவரின் தலைமையில் வந்த கப்பல் பெருவுக்குச் செல்லும் வழியில் கலாபகசுத் தீவுகளில் தரையிறங்கியது.
- 1629 - இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் நாடாளுமனறத்தைக் கலைத்தான். அடுத்த பதினொரு ஆண்டுகளுக்கு நாடாளுமன்றம் இயங்கவில்லை.
- 1735 - ரஷ்யாவின் முதலாம் பவுல் மன்னனுக்கும் ஈரானின் நாதிர்ஷாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி ரஷ்யப் படைகள் அசர்பைஜானின் பக்கூ நகரிலருந்து வெளியேறின.
- 1801 - பிரித்தானியாவில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.
- 1804 - லூசியானா அதிகாரபூர்வமாக பிரான்சிடம் இருந்து ஐக்கிய அமெரிக்காவுக்குக் கையளிக்கும் நிகழச்சி நடைபெற்றது.
- 1814 - பிரான்சில் லாவோன் என்ற இடத்தில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.
- 1876 - அலெக்சாண்டர் கிரகம் பெல் உலகின் முதல தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.
- 1893 - ஐவரி கோஸ்ட் பிரெஞ்சுக் குடியேற்ற நாடாகியது.
- 1902 - அசையும் படம்பிடி கருவியை தோமஸ் எடிசன் கண்டுபிடிக்கவில்லை என அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.
- 1902 - துருக்கியின் டோச்சாங்கிரி என்ற நகர் நில நடுக்கத்தினால் முற்றாக அழிந்தது.
- 1911 - இலங்கையில் ஐந்தாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டதில் மொத்தத் தொகையான 4,092,973 இல் யாழ்ப்பாணத்தில் 40,441 பேர் பதிவாகினர்.
- 1922 - கிளர்ச்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மகாத்மா காந்தி ஆறாண்டு கால சிறைத்தண்டனை பெற்றார். ஆனாலும் இரண்டாண்டுகளில் சுகவீனம் காரணமாக விடுதலையானார்.
- 1948 - இந்திய ஜூனியன் முஸ்லீம் லீக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1952 - கியூபாவில் ஃபுல்ஜென்சியோ பட்டீஸ்டா தலைமையில் புரட்சி வெற்றி பெற்றது.
- 1959 - திபெத்தில் பத்தாண்டு கால சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து லாசா நகரில் நடத்தப்பட்ட போராட்டம் தோல்வியில் முடிந்தது. ஆயிரக்கணக்கானோர் சீன இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1970 - வியட்நாம் போர்: அமெரிக்கத் தளபதி ஏர்னெஸ்ட் மெடினா வியட்நாமில் 1968 இல் நிகழ்த்திய மைலாய் படுகொலைகளுக்காக குற்றம் சாட்டப்பட்டான்.
- 1977 - யுரேனஸ் கோளைச் சுற்றி வளையங்களை வானியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
- 1982 - கோள்கள் அனைத்தும் சூரியனின் ஒரு பக்கததில் வரிசையில் காணப்பட்டன.
- 1990 - ஹெயிட்டியில் இடம்பெறற இராணுவப் புரட்சியில் புரொஸ்பர் அவரில் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1933 - பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழறிஞர், தமிழ்த் தேசிய உணர்வாளர் (இ. 1995)
- 1933 - பழ. நெடுமாறன், தமிழ்நாட்டு அரசியல்வாதி, தமிழ்த் தேசிய உணர்வாளர்
- 1957 - ஒசாமா பின்லாடன், இசுலாமியப் போராளி

### இறப்புக்கள்

- 1966 - ஃபிரிட்ஸ் சேர்னிக்கே, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1888)
- 2001 - **சி. ஜே. எலியேசர், பேராசிரியர், பிரபல கணித வியலாளர், தமிழ் அபிமானி (பி. 1918)**
- 2006 - சி. புஷ்பராஜா, ஈழத்தில் மாணவர் இளைஞர் பேரவைகளில் முக்கிய பங்காற்றிய போராளி

## பேராசிரியர் சி.ஜே.எலியேசர்



பேராசிரியர் கிரிஸ்டி ஜெயரத்தினம் எலியேசர், பிரபல கணிதவியலாளரும் தமிழ் ஆர்வலரும் ஆவார். தமிழீழத்தின் உயர் விருதான மாமனிதர விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

1948 வெளியிடப்பட்ட இவரது எலியேசர் தேற்றம் இயற்பியலில் இன்றும் பயன்படுத்தப்படும் தேற்றமாகும்.

எலியேசர் அவர்கள் தனது தொடக்கக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் உயர் கல்வியை கொழும்பு பல்கலைக்கழ கக் கல்லூரியிலும் பெற்று, பின்னர் லண்டன் கேம்ப்றிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கணிதத்தில் கலாநிதி (PhD) பட்டம் பெற்றார்.

1949 இல் புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் போல் டிராக் (Paul Dirac, 1902-1984) அவர்களின் வழிகாட்டலில் டாக்டர் (DSc) பட்டமும் பெற்றார்.

இவர் பின்னர் கொழும்பு திரும்பி பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் பேராசிரியராகவும் அறிவியல் பீடத்தின் (துறையின்) தலைவராகவும் கடமையாற்றினார். இவர் ஜெனீவா, வியன்னா, மும்பாய் நகரங்களில் ஜக்கிய நாடுகளின் சார்பாக அமைதிக்காக அணு சக்தி என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றவும் அழைக்கப்பட்டார்.

1959 இல் மலேயா பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியரானார். கோலாலம்பூரில் 1966 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சுழியம் என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை படைத்தார். 1968இல் அவுஸ்திரேலியா மெல்பேர்ணிற்குக் குடியேறி லா ட்ரோப் (La Trobe) பல்கலைக்கழகத்தில் பயன்முகக் கணிதத்தில் பேராசிரியரானார். அங்கே அவர் இயற்பியல் பீடத்தின் தலைவராகவும் பல்கலைக்கழகத்தின் கூடுதல் துணை-வேந்தராகவும் இருந்தார். 1983இல் அங்கிருந்து இளைப்பாறினார்.

அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் சமூகத்திற்கு இவர் ஆற்றிய பங்கு அளப்பரியது. 1978 ஆம் ஆண்டில் விக்ரோறியா மாநில "இலங்கைத் தமிழ்ச சங்கத்தின்" தொடக்கத் தலைவராக பதவியேற்று இங்கு குடியேறும் தமிழர்களுக்கு ஆணிவேராக உழைத்தது மட்டுமல்லாமல் 1983 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உட்படுத்தப்பட்டபோது முழுமூச்சாக அம்மக்களின் விடிவுக்காக உழைத்தவரும் ஆவார். 1984 ஆம் ஆண்டின் அவுஸ்திரேலிய தமிழ் சங்கங்களின் சம்மேளனம் அமைக்கப்பட்டபோது அதன் தலைவராகவும் பதவியேற்றார்.

இவர் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மக்களுக்காகவும் கணிதத்துறைக்கும் ஆற்றிய சேவையைப் பாராட்டி அவுஸ்திரேலிய அரசின் அதி உயர் Order of Australia விருது 1996 இல் வழங்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு தமிழீழத்தின் உயர் விருதான மாமனிதர விருது இப்பேராசிரியருக்கு வழங்கப்பட்டது. முதன்முறையாக இவ்விருது தமிழீழத்துக்கு அப்பால் வாழும் ஒரு தமிழருக்கு வழங்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# ஐ.நா. இலங்கைக்கு மற்றுமொரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது

## மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கைக்கு மற்றுமொரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கை குறித்த அறிக்கை மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவிருந்த போதிலும் தற்போது எதிர்வரும் செப்டெம்பர் மாதமே சமர்ப்பிக்கப்பட உள்ளது.



2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம 8ஆம் திகதி ஏற்பட்ட அரசியல் மாற்றம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமை, வெளியுறவுக் கொள்கை போன்றன தொடர்பிலான நம்பிக்கை காரணமாக இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கைக்கு மற்றுமொரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

இந்த நாட்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமர்வுகள் நடைபெற்று வரும் நிலையில் இலங்கை பற்றி பேசப்படவில்லை.

இதன்மூலம் இலங்கைக்கு ஜெனிவாவிலிருந்து பாரியளவு அச்சுறுத்தல் கிடையாது என்பது புலனாகின்றது.

இரண்டு கட்சிகள் இணைந்து ஆட்சி நடத்தப்படுகின்றமை, ஜனாதிபதி ஆட்சி முறைமை, வெளியுறவுக்கொள்கை தொடர்பில் உலக சமூகத்தின் சாதக அவதானத்தை பெற்றுக் கொள்ள முடிந்தமை நாம் ஈட்டிய வெற்றியாகவே கருதப்பட வேண்டும்.

19ஆம் திருத்தச் சட்டத்தினை கொண்டு வந்து ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தின் ஊடாக சர்வதேச சமூகத்தில் நல்ல வரவேற்பு காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பாரத லக்ஸ்மன் கொலைச் சந்தேக நபர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நீதிமன்றம் உத்தரவு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தெமட்டகொட சமிந்த எனப்படும் சமிந்த ரவி ஜயனாத் உள்ளிட்ட சந்தேக நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு மூவர் அடங்கிய கொழும்பு விசேட நீதிமனறம் நேற்று முன்தினம் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளது.

குறித்த கொலை வழக்கின் 7ஆம் சந்தேக நபரான சரத் பண்டார என்பவரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் முன்வைத்த வாதத்தினைத் தொடர்ந்து, இவ்வாறு பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றிலிருந்து வழக்கின் மூன்று சந்தேக நபர்கள் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது இனந்தெரியாதவர்கள், சந்தேக நபர்கள் அழைத்துச் செல்லப்பட்ட பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில், தமது கட்சிக்காரர் உள்ளிட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றிற்கு அழைத்து வரப்படும் போதும் திரும்பி அழைத்துச் செல்லப்படும் போதும் கூடுதல் பாதுகாப்பு வழங்குமாறு சட்டத்தரணி நீதிமன்றில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 657

ஜீவி




கருணா



சந்திரன் சிந்துஜா

வெளிநாட்டு
வாழ்க்கை
"உழைக்க வேண்டிய
வயசு இதுதானடா"
என்று விமானம்
ஏறி வந்தோம்,
வாழ வேண்டிய வயதும்
இதுதான் என்பதை
மறந்து.....

பிரபாகரன்



சயந்தன்



அருள்ராஜ்

### தந்தை பெரியார் அறிவுரை



**பதவி ஆசை**

"பதவி ஆசையில் மிதக்கிறவர்கள் எப்படிப்பட்ட அற்ப இழிவான அயோக்கியத்தனமான காரியத்தையும் செய்து வெற்றி பெறவே பார்ப்பார்கள். அவர்களிடம் சுயநலம் தவிர மனிதப் பற்றோ, நாட்டுப் பற்றோ சிறிதளவும் காண முடியாது."

("விடுதலை", 3.5.1965)

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையுடனான சுவிஸ்சர்லாந்தின் நீண்டகால உறவுகளும் மனித உரிமை மேம்பாடு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளினூடாக பலப்பட்டு வரும் பரஸ்பர நலன்களும்

## சுவிஸ் தூதரக அறிக்கை


இலங்கையில் இடம் பெற்றுவரும் சீர்திருத் தங்கள் மற்றும் மீள்- இணக்கப்பாட்டு நடை முறைச் செயற்பாடு களின் முன்னேற்றம், இலங்கை மற்றும் இந்துசமுத்திர தீவுகளு டனும் சுவிஸ்சர்லாந்திற் கான இருதரப்பு உறவு களை விஸ்தரிப்பதற்கு மென இலங்கை அமை ச்சர் மங்கள சமரவீரவுக் கும் சுவிஸ் பெடரல் அமைச்சு ஆலோசகரு க்குமிடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தை கள். இருநாட்டுப் பிரதிநிதிகளுக்குமிடை யில் வழக்கமாக இடம் பெறும் அரசியல் ஆலோசனைகள் மட்டி லான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றி லும் இரு அமைச்சர் களும் கைச்சாத்திட்ட னர். இரு நாடுகளுக்கு மிடையில் இரு தரப்பு நலன்களுக்கும் ஒத் திசைவான "குடிவரவு- குடியகல்வு" வாய்ப்புகள் பற்றி ஆராய்வதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தின தும் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத் தமிழ் சமூகப் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்துவதற் கென மேற்படி சுவிஸ் அமைச்சர் மேற்கொண்ட இலங்கை விஜயத்தினை அடுத்து ஒரு வருடத்திற்கும் சற்று கூடுதலான காலத் தின் பின்னர் மீண்டும் இன்றுதான் அவர் இல ங்கை அமைச்சர் மங்கள சமரவீரவை மேற்படி விடய சம்பந்தமாக பேர்ன் நகரில் முதல் தடவை அதிகாரபூர்வ மாக வரவேற்றிருக்கிறார். இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஒருவர் 30 வருடங்களுக்கும் கூடுத லான காலத்தின் பின்னர் சுவிசுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமும் இதுவேயாகும்.


அநேகமாக, மூன்று தசாப்தங்களாகவே நாட்டினை அழிவிற்குள் ளாக்கிக் கொண்டிருந்த உள்நாட்டுப் போரின் தாக்கங்களை தணிப்பதற் கான நடவடிக்கைகளில் புதிய அரசாங்கத்தின் சீர்திருந்த மற்றும் மீள்- இணக்கப்பாட்டுத் திட்டங் கள் எந்தளவிற்கு முன்னே ற்றம் கண்டுள்ளன என்பது டன் இவை நாட்டின் நிலை யான உறுதிப்பாட்டிற்கும் நாட்டுக்கான புதிய அபிவி ருத்தி வாய்ப்புக்கள் எந்தளவு பங்காற்றியுமுள்ளன என்பதை கண்டறிவதே கலந்துரையாடலின் பிரதான நோக்கமாக இருந்தது. இதுவரையில் அடையப்பெற்ற முன்னேற் றத்திற்காக மங்கள சமரவீர வைப் பாராட்டிய சுவிஸ் அமைச்சு ஆலோசகர் இலங்கைக்கான தமது ஆதரவினை தொடர்வதுடன் முன்னேற்ற வழிமுறை களை மேம்படுத்துவதற் குரிய உதவிகளையும் வழங்குவதாக உறுதியளி த்திருந்தார்.

இந்த வருடம் இருநாடு களுக்குமிடையில் நீடித்து நிலைத்திருக்கும் இராஜ தந்திர தொடர்புகளுக்கான சிறப்பின் 60 வருட நிறை வினைக் கொண்டாடும் அதேநேரம் இந்த இரு தரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றியுங்கூட சுவிசின் பேர்க்.கோல்டரும் இலங்கையின் மங்கள சமரவீரவும் கலந்துரையாடி னர். சமாதானத்தையும் மனித உரிமைகளையும் கட்டியெழுப்புவதில் ஒத் துழைப்பதற்கும் மேலாக, இரு நாடுகளுக்குமிடையில் குறிப்பாக உயிர்த்துடிப்பு மிக்க பொருளாதார உறவு கள் (எடுத்துக்காட்டாக, வர்த் தக ரீதியில்- 2015 ஆம் ஆண்டின் தொகையாகிய ஏறக்குறைய 'CHF'-300 மில்லியன்களைக் குறிப்பிட லாம்) குடிவரவு- குடியகல்வு, கல்வி மற்றும் கலாசார பரிமாறல்கள் போன்ற வற்றுக்கான வாய்ப்புக் களை மேம்படுத்திக் கொள்வதற்கான ஒத்துழை ப்பை பலப்படுத்துவதற்கும் இருவரிடையே இணக்கம் காணப்பட்டது. இருநாடு களுக்குமிடையில் இரு தரப்பு நலன்களுக்கும் ஒத்திசைவான 'குடிவரவு- குடியகல்வு' நடைமுறைகள் உறுதியான முறையில் நிலைப்படுத்துவது அவசிய மென இருவருமே இணங்கி னர். இவைகளனைத்தை யும் நடைமுறைப்படுத்து வதற்குரிய நுட்பமான செயற்பொறிமுறைகள் பற்றி வெகு விரைவிலேயே பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவிருக்கிறது. இரு நாடுகளுக்குமிடையில் அரசியல் ஆலோசனை களை ஒழுங்கான முறை யில் பரிமாறிக்கொள்வதற் குரிய ஏற்பாடுகள் பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்த மொன்றும் இரு அமைச் சர்களுக்குமிடையில் 'பேர்ன்' நகரில் அன்றே கைச்சாத்தாகியது.









### இலங்கை மட்டில் நீண்டகாலமாக நீடித்து நிலைத்திருக்கும் சுவிஸ் சர்லாந்தின் கடப்பாடுகள்

இலங்கையின் உள்நாட் டுப் போரின் விளைவாக மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாரதூரமான இழப்புக்களை ஓரளவாவது ஈடு செய்யும் மனிதாபிமான நோக்குடன் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பிற்கான சுவிஸ் நிவாரண- முகவர் அலு வலகமொன்று 'SDD' பாதிக்கப்பட்ட மக்கள் நலன் கருதி சுவிஸ் அரசாங்கத் தினால் தமிழர் செறிவாய் வாழும் வடபகுதி மாநகரான யாழ்ப்பாணத்தில் 2003 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. குறிப்பாக நேரடியாகவே பாதிப்பிற் குள்ளாகி இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு ஆதரவாகவே உதாரண மாக, அழிவுற்ற- சேதமடை ந்த பாடசாலைகளின் புனர்நிர்மானமூடாக அம்மக்களின் புனர்வாழ்வு க்கு உதவுதல்) இது நிறுவப் பட்டது. 2004 டிசம்பரில் நிகழ்ந்த சுனாமி அனர்த்தம் மற்றும் 2009 மேயில் முடிவிற்கு வந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர் 5000 வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்வதுடன் கிராமங்களுக் கான உட்கட்டமைப்பு வேலைகள் மற்றும் இது சம்பந்தமான பிரதேசங் களில் கண்ணிவெடிய கற்றல் போன்ற அவசர நிவாரணப்பணிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை களுக்கும் கூட சுவிஸ்சர்லா ந்து ஆதரவளித்து வரு கிறது. இந்த மனிதாபி மானத்திட்டத்தின் மொத்தம் 80 மில்லியன் 'CHF' தொகைக்கான பகுதிக் கடப்பாட்டுக்குரிய நிகழ்ச்சித் திட்டம் 2016 ஏப்ரல் மாதம் பூர்த்தியாகிறது. எமது நாட்டின் பெடரல் கவுன்சில் சர்வதேச ரீதியில் உடன் பட்டிருக்கும் 2017- 20 வரையான சர்வதேச ஒத் துழைப்புக்கொள்ளக்கு அமைவாக சுவிஸ் 'FDFA'- மனித பாதுகாப்புப் பிரிவுக் கான சர்வதேச கடப்பாடு கள் மட்டில் உள்வாங்கப்பட் டுள்ள நாடுகளின் முன்னுரி மைப் பட்டியலில் இலங்கை யும் உள்ளடங்குகிறது.

இலங்கை உள்நாட்டுப் போரின் விளைவாக எழுந்துள்ள நிலைமைகள் காரணமாக சமாதானத்தை கட்டியெழுப்புதல், மனித உரிமைச் செயற்பாடுகள் போன்ற அவசிய நடவடிக் கைகளை சுவிஸ்சர்லாந்து 2001 ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்திருந்தது. 'FDFA' யின் மனிதப் பாதுகாப்புப் பிரிவின் அனுசரணையின் கீழ் மனித உரிமைகள் பற்றிய கொள்கை, கடந்தகால அனுபவங்களூடாக அரசின் பிரதிநிதிகள், எதிர்க் கட்சி, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சியின் பிரதிநிதிகள், சுவிஸ் சமூக மற்றும் புலம்பெயர் சமூகங்கள் மற்றும் அரசியலமைப்பு நிபுணர்கள் போன்றோருக் குமிடையில் சந்திப்புக்கள் ஒழுங்கமைப்பது போன்ற நம்பிக்கையை கட்டியெழு ப்புவதற்கான பல்வேறு நடவடிக்கைகளுக்கு சுவிஸ்லாந்து தொடர்ந்தும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்.

புலம்பெயர்ந்து வேலை செய்யும் தொழிலாளர் களுக்கான உரிமை களைப் பாதுகாப்புடன் இத்தகையவர்கள் மீது நாட்டின் 'குடிவரவு- குடியகல்வு' சட்டங்களால் ஏற்படக்கூடிய தாக்கங் களின் சாதகத் தன்மையை மேம்படுத்துவது போன்ற செயற்பாடுகள் உள்ளட ங்கலான பல்வேறு நடவடிக்கைகளையும் 'SDC' யின் குடிவரவு- குடியகல்வு மற்றும் அபிவிருத்திகளுக்கான பூகோள திட்டம் இலங்கை யில் 2010 ஆம் ஆண்டி லேயே ஆரம்பித்திருந்தது. இறுதியாக எமது குடிவரவு- குடியகல்வு செயலகம் 'SEM' இலங்கை திரும்பிச் செல்வோருக்கு பல வருடங்களாகவே உதவியளித்து வருவதுடன் நடத்தப்பட்டு வரும் ஏனைய திட்டங்கள் மத்தியில் தொழில் பயிற்சித் திட்டமொன்றினையும் 2014 ஆம் ஆண்டிலிரு ந்து நடைமுறைப்படுத்தி ஆதரவுமளித்து வருகிறது!

### வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து

# 230 படை முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தகவல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்த காலத்தில் பேணி வரப்பட்ட முப்படைகளின் படை முகாம்களில் 230 முகாம்கள் அகற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

2009.05.19 ஆம் திகதியளவில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 785 முகாம்கள் பேணிவரப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பேணிவரப்பட்ட முகாம்கள் தொடர்பில் ஜயந்த சமரவீர எம்.பியினால், பாதுகாப்பு அமைச்சிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கான பதிலை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான்விஜேவர்தன, சபைக்கு தெரியப்படுத்தினார். அவரது பதிலின் பிரகாரம், 2014.12.31 ஆம் திகதியளவில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 529 இராணுவ முகாம்கள், 25 கடற்படை முகாம்கள், 07 விமானப்படை முகாம்கள் என 561 முப்படை முகாம்கள் இருந்தன.



உயர் பாதுகாப்பு வலயங்களுடன் கூடியதாக முகாம்கள் பேணி வரப்படவில்லை. 2015.10.30ஆம் திகதியளவில் 555 முப்படை முகாம்கள் பேணிவரப்பட்டன என்றும் அப்பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## எச்.ஐ.வி. வதந்தியால் பாதிக்கப்பட்ட மாணவன் கல்வியைத் தொடர ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

குளியாப்பிட்டிய மாணவனை கண்டி டிரினிடி கல்லூரியில் அனுமதிப்பது தொடர்பிலான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

குளியாபிட்டிய பகுதியிலுள்ள மாணவன் ஒருவனின் தந்தை சுகயீனம் காரணமாக உயிரிழந்தார்.

அவருக்கு எயிட்ஸ் நோய் இருந்ததாகவும் அதனால், குறித்த மாணவனும் எச். ஐ.வி. பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் வதந்தி பரவியது.

இதனையடுத்து, அவர் கல்வி கற்று வந்த பாடசாலையில், தொடர்ந்து கற்றல் செயற்பாடுகளை தொடர்வதில் சிக்கல் ஏற்பட்டது.

சம்பந்தப்பட்ட மாணவனுக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பதாகக் கருதி குறித்த பாடசாலையிலுள்ள ஏனைய மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப மறுத்ததே இதற்குக் காரணம்.

இதனையடுத்து, இது குறித்து அவதானம் செலுத்திய கல்வி அமைச்சு, தற்போது அவரை கண்டி டிரினிடி கல்லூரியில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் கண்டி டிரினிடி கல்லூரி அதிபர் மற்றும் கல்வி அமைச்சு அதிகாரிகள் கையெழுத்திட்டுள்ளனர். (இ-5)

## ஆஸியிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் கட்டுநாயக்கவில் வைத்து கைதானார்

(கொழும்பு)

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சென்ற இலங்கை பிரஜை ஒருவர் நாடுகடத்தப்பட்ட நிலையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இவரைக் கைதுசெய்துள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், சந்தேகநபர் வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த 31 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இவரை நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



### மச்ச நிறங்களும் பலன்களும்

### பழுப்பு நிற மச்சம் (மங்கலான மஞ்சள்)

உடம்பில் பழுப்பு நிறத்தில் மச்சங்கள் இருந்தால், அவர்கள் சிறந்த அறிவாளிகளாகத் திகழ்வார்கள். நற்குணங்கள் நிரம்பியவர்களாக இருப்பார்கள். எதையும் தீர ஆலோசித்த பின்னரே செய்ய முற்படுவார்கள். செய்யும் காரியத்தை சீர்மையுறச்செய்து முடிப்பார்கள்.

இவர்கள் பொதுவாக எதையும் திட்டமிட்டு செயற்படுபவர்களாக பிறரால் மிகவும் பாராட்டப்பெறுவார்கள். இவர்கள் போடும் திட்டம் பெரியனவாக இருக்கும்.

இவர்களில் சிலர் அதிகாரங்கள் செலுத்தும் உயர் அதிகாரிகளாக விளங்குவார்கள். தங்கள் நண்பர்களுக்காக தமது உயிரையும் விடத் துணிபவர்களாக இருப்பார்கள்.

இவர்களுக்கு உடல் சூடு சம்பந்தமான நோய்கள் வரக் கூடும்.

### வெளுப்பு நிற மச்சம்

உடம்பில் வெளுப்பு - வெள்ளை நிறத்தில் மச்சங்கள் இருந்தால் அவர்கள் பயந்த சுபாவம் உள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் அமைதியும் பிறரிடத்தில் பணிவும் கொண்டிருப்பார்கள்.

இவர்கள் எந்த ஒரு விடயத்திற்கும் வீணாக மனதைக் குழப்பிக் கொண்டே இருப்பார்கள்.

எந்த ஒரு காரியத்தில் ஈடுபட்டாலும் அது நடக்குமா நடக்காதா என்று எண்ணி எண்ணி மனதைக் குழப்பிக் கொண்டே இருப்பார்கள்.

இவர்கள் தனிமையில் இருப்பதை விட பலரோடு சேர்ந்திருத்தலையே மிகவும் விரும்புவார்கள்.

பிரயாணம் செய்வதிலும் அதிக விருப்பம் உடையவர்களாக இருப்பார்கள். அடிக்கடி பிரயாணம் செய்து கொண்டும் இருப்பார்கள்.

இவர்கள் பெரும்பாலும் நடுத்தரக் குடும்பங்களில் பிறந்தவர்களாகவே இருப்பார்கள். இவர்களில் செல்வந்தரைக் காண்பது அரிதுதான்.

ஆனாலும் வாழ்க்கைக்குத் தேவையான சாதாரண வசதிகளைப் பெற்றிருப்பார்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் வியாபாரத் தொழில் செய்து வாழ்பவர்களாகத் தான் இருப்பார்கள். பலர் திரவப் பொருள் வியாபாரம் செய்பவர்களாக இருப்பார்கள்.

சிலர் ஓவியம், இசை, ஜோதிடம் ஆகிய கலைகளில் வல்லவர்களாக விளங்குவார்கள்.

இவர்களுக்கு வயிற்று வலி, மார்பு வலி, தலைவலி போன்ற நோய்கள் வரும்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## வேலையில்லாத் திண்டாட்டம்; கல்லூரி மாணவன் மீது வழக்கு

அமெரிக்காவில் முழுநேர வேலை கிடைக்காத காரணத்தை சுட்டிக்காட்டி கல்வி பயின்ற கல்லூரி மீது மாணவர் ஒருவர் வழக்குத் தொடுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் கல்லூரியில் படிப்பு முடித்து பல ஆண்டுகள் கடந்தும் தமக்கு முழுநேர வேலை கிடைக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டி படித்த கல்லூரி மீது மாணவர் ஒருவர் வழக்குத் தொடுத்துள்ளார். (இ-5)

## சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன்பூங்காவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

## கழிவகற்றல் குறித்து மக்கள் விசனம்

பருத்தித்துறை நகரசபையினரின் கழிவகற்றல் செயற்பாடு குறித்து பொதுமக்களினால் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரில் சேரும் கழிவுகள் உழவு இயந்திரம் மூலம் மந்திகை ஊடாக கொண்டு சென்று முள்ளிப்பகுதியில் கொட்டப்படுகின்றன. இவ்வாறு கொண்டு செல்லப்படும் கழிவுகள் வீதிகளில் வீழ்வதாக பொதுமக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உழவு இயந்திரங்களில் ஏற்றப்படும் கழிவுகள் பாதுகாப்பான முறையில் மூடப்படாது திறந்த நிலையிலேயே கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறு கொண்டு செல்லப்படும் கழிவுகள் வீதிகளில் வீழ்வதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (இ-60)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழப்பாணம்)

யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்த இல்லமெய் வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அபிவிருத்தி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸ் கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)

## பிரஜைகள் குழு அங்குரார்ப்பணம்

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு அங்குரார்ப்பண வைபவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உடுத்துறை செந்தமிழ் முன்பள்ளியில் நடைபெறும். (இ-5-60)

## கருத்துரை நிகழ்வு நாளை

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு ஏ நடத்தும் கருத்துரை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இயற்கை விஞ்ஞான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவில் -இருந்து வருகை தந்துள்ள டாக்டர் கே.பி. சிவகுமாரன் (Joint fisheries management plan and Future climate adaptations for palk bay Fisheries) என்ற தலைப்பில் கருத்துரையினை வழங்கவுள்ளார். (இ-5)

## மூன்று வருடங்களாக சம்பளம் வழங்கவில்லை

வடமராட்சி-திக்கம் வடிசாலையில் உள்ள பாதுகாவலர் தொழிலாளர்களுக்கு மூன்று வருடங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதில் 6 தொழிலாளர்களுக்கு இவ்வாறு சம்பளம் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வருடம் தைமாதம் வட மாகாண சபையுடன் இது தொடர்பில் பாதுகாவலர்கள் கலந்துரையாடியதன் பிரகாரம் அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

3 வருடமாக சம்பளம் இல்லாமல் தமது வாழ்க்கையினை கொண்டு செல்ல முடியாமல் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

# தமிழ் சினிமா வரலாறு

118

## கருணாநிதியின் அனல் பறக்கும் வசனத்துடன் 'மந்திரிகுமாரி'

...தளபதி ராஜமோகனை ராஜகுமாரி காதலிக்கிறாள்.

மன்னரை ஆட்டிப் படைக்கும் ராஜ குருவின் (எம்.என்.நம்பியார்) மகன் பார்த்திபன் (எஸ்.ஏ.நடராஜன்) கொடூரமானவன். பகலில் ராஜகுருவின் மகன், இரவில் பயங்கரக் கொள்ளைக்காரன். கொள்ளையடிப்பது ஒரு கலை என்பது அவன் கொள்கை.

மந்திரிகுமாரி அமுதாவைக் கண்டதும் அவளை அடையத் துடிக்கிறான். அவனுடைய சுய ரூபத்தை அறியாத அவள், அவனை மணக்கிறாள்.

கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தளபதி ராஜமோகன் ஈடுபட்டு, பார்த்தீபனைப் பிடித்து அரசவையின் முன் நிறுத்துகிறான். ஆனால் ராஜகுருவின் சூழ்ச்சியால் பழி ராஜமோகன் மீது விழுகிறது.

தன் கணவன் கொடியவன்- கொள்ளைக்காரன் என்பதை, அமுதா அறிந்து கொள்கிறார். அவனைத் திருத்த முயல்கிறாள். உண்மையை அறிந்து கொண்டு விட்டாளே என்ற ஆத்திரத்தில், அவளைத் தீர்த்துக்கட்ட பார்த்திபன் முடிவு செய்கிறான். வராய் நீ வாராய் என்று பாட்டுப்பாடி, அவளை மலை உச்சிக்கு அழைத்துச் செல்கிறான். அங்கிருந்து அவளைத் தள்ளிவிட முயற்சி செய்யும்போது, சாவதற்கு முன் உங்களை மூன்று முறை சுற்றி வந்து வணங்க வேண்டும் அனுமதியுங்கள் என்று வேண்டுகிறாள் அமுதா.

அதற்கு அவன் சம்மதிக்கிறான். மூன்றாவது முறை அவனைச் சுற்றி வரும்போது அவனை மலை உச்சியிலிருந்து கீழே தள்ளி விடுகிறாள்.

அவள்மூலம் உண்மையை அறிகிறார் அரசர். ராஜகுரு சிறைப்படுத்தப் படுகிறார். அரசகுமாரியும், தளபதியும் ஒன்று



சேருகின்றனர்.

**டைரக்ஷன்**

ஆரம்பத்தில் மந்திரி குமாரியை எல்லிஸ் ஆர்.டங்கன் டைரக்ட் செய்தார். அவர் அவசரமாக அமெரிக்கா போக வேண்டி இருந்ததால், டைரக்ஷனை டி.ஆர்.சுந்தரம் தொடர்ந்தார். சென்சார் கெடுபிடியை சமாளித்து, 1950 இல் படத்தை வெளியிட்டார், டி.ஆர். சுந்தரம்.

படம் மகத்தான வெற்றி பெற்றது.

**அனல் பறக்கும் வசனம்**

கதை, வசனம், நடிப்பு, இசை எல்லாமே இதில் சிறப்பாக அமைந்திருந்தன.

குறிப்பாக, கருணாநிதியின் வசனங்கள் கூர்மையாக அமைந்திருந்தன. அனல் பறக்கும் வசனம்- கனல் தெறிக்கும் நடிப்பு என்று விளம்பரம் செய்தார்கள்.

நம்பியாருக்கும், எஸ்.ஏ. நடராஜனுக்கும் இடையே நடைபெறும் ஒரு உரையாடல்,

பார்த்திபா நீ கொள்ளை அடிப்பதை விட்டுவிடக் கூடாதா? கொள்ளையடிப்பதை விட்டுவிடுவதா? அது கலையப்பா, கலை!

என்ன! அது கொள்ளையடிப்பது கலையா?

ஆம் தந்தையே! அது கலைதான். வில்லிலிருந்து புறப்படும் அம்பு எத்தனையோ உயிர்களைக் குடிக்கிறது. ஆனால், வில் வித்தை என்ற பெயரால், கொலை அங்கே கலையாகிறது. ஓவியக் கலைஞன் பெண்ணின் அங்கங்களை வரைந்து காட்டுகிறான். ஓவியக் கலையின் பெயரால், காமம் அங்கே கலையாகிறது. அதுபோல இதுவும் ஒரு கலைதான்!

இந்தக் கலையை விட்டு விடக் கூடாதா? கொக்கு மீனைப் பிடிக்காமல் இருந்தால், பாம்பு தவளையை விழுங்காமல் இருந்தால், நானும் என் கலையை விட்டு விடுவேன்.

(தொடரும்)

# எழுவர் விடுதலை மலருமா?

**கை**க்கெட்டியது வாய்க் கெட்டவில்லை என்ற சொலவம் பேரறிவாளன் உள்ளிட்ட தமிழர் எழுவர் விடுதலை தொடர்பில் மீண்டும் மீண்டும் உண்மையாகி வருகிறது. இதோ விடுதலை என்று நம்பிக்கைத் துளிர் விடுவதும் அதே விரைவில் அது பொய்த்துப் போவதும் தான் கடந்தகால அனுபவம்.

கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறையில் வாடி வரும் அறிவு (எ) பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி, ராபர்ட் பயஸ், இரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய எழுவரையும் விடுதலை செய்யத் தமிழக அரசு எடுத்துள்ள முடிவு இம்முறையாவது செயல்வடிவம் பெற வேண்டும் என்பதே நம் கவலை. அவர்களுக்கு விடுதலைத் தரிசனம் கிடைப்பதற்கு நந்தியாக மறித்து நிற்கும் இந்திய அரசு வழி விட்டால் போதும், அந்த ஏழு சிறைப் பறவைகளும் விட்டு விடுதலையாகி தமிழ் வானில் சிறகடிக்கும்.

கால் நூற்றாண்டு காலச் சிறையடைப்புக்குப் பிறகும் அறிவு உள்ளிட்ட எழுவரையும் விடுதலை செய்வதற்கு ஒருசிலர் எதிர்ப்புத் தெரிவிப்பது அதிர்ச்சி கலந்த வேதனை. ராஜீவ் காந்தி கொலையிலும் அதற்காகத் தொடரப்பட்ட வழக்கிலும் அரசியல் தான் உண்டு.



முருகன் | பேரறிவாளன் | சாந்தன்

நளினி | ரவிச்சந்திரன் | ராபர்ட் பயாஸ் | ஜெயக்குமார்

ஆனால் அந்த வழக்கு தடா சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, 26 தமிழர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டதும், மேல்முறையீட்டில் இந்திய உச்ச நீதிமன்றம் அவர்களில் 19 பேரை விடுதலை செய்து, நால்வருக்குத் தூக்கை உறுதி செய்ததும், நளினிக்கு மட்டும் மாநில ஆளுநர் தண்டனைக் குறைப்பு வழங்கியதும், மூவரின் கருணை மனுக்களை இந்திய அரசு தள்ளுபடி செய்து, அவர்களின் உயிர்காக்கத் தமிழகம் கொதித்தெழுந்து போராடியதும், இறுதியில் உச்ச நீதிமன்றம் அவர்களுக்குத் தண்டனைக் குறைப்பு வழங்கியதும் அனைவரும் அறிந்த செய்திகள் எனலாம்.

இத்தனைக்குப் பிறகுதான் எழுவர் விடுதலைக்கான நடவடிக்கைகளே தொடக்கம் பெற்றன. கால் நூற்றாண்டு காலச் சிறையடைப்புக்குப் பின் விடுதலை கேட்பது மனித உரிமையின் பாற்பட்டதே தவிர அரசியல் கோரிக்கை அன்று.

மூவர் தண்டனைக் குறைப்புக்கு எதிராக இந்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் எடுக்காத முயற்சி இல்லை. தொடுக்காத வாதமுமில்லை. இவ்வகையில் சோனியா காந்தி சொல்லுக்கடங்கிய மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசுக்கும், நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க அரசுக்கும் வேறுபாடே இல்லை. இந்திய அரசு வழக்குரைஞர்களின் வாதங்கள் உச்ச நீதிமன்றத்தில் எடுபடாமற் போயின.

காந்தி கொலை வழக்கில் நாதுராம் கோட்சே, நாராயண் ஆப்தே இருவரையும் தூக்கிலிட்டது போல், இந்திரா காந்தி கொலை வழக்கில் சத்வந்த் சிங், கேகர் சிங் இருவரையும் தூக்கிலிட்டது போல், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அறிவு, சாந்தன், முருகன் மூவரையும் தூக்கிலிட்டுப் பழிதீர்ப்பதுதான் இந்திய ஆட்சிபீடத்தின் வெறித்தனமான ஆசை.

இதைத்தான் காங்கிரஸ், பா.ஜ.க தலைமைகள் தேசப் பாதுகாப்பு, தேச நலன், தேசப் பற்று என்று பெயரிட்டு நியாயப்படுத்த முயன்றன. காஷ்மீரின் அப்சல் குருவைத் திருட்டுத்தனமாகத் தூக்கிலிட்டது போல் பஞ்சாபியரான பேராசிரியர் புல்லரைத் தூக்கிலிட முடியவில்லை. அதே போலத்தான் தமிழர் மூவரையும் தூக்கு மேடையில் நிறுத்த முடியவில்லை. இந்தத் தோல்வியை கண்ணியத்துடன் ஏற்க இந்திய அரசுக்கு மனமில்லை. எழுவர் விடுதலையைத் தடுத்து வஞ்சம் தீர்க்க அது துடியாய்த் துடிக்கிறது.

யாக்கூப் மேமனைத் தூக்கிலிடுவதில் இந்திய அரசு காட்டிய பிடிவாதம் அதன் தூக்கு அரசியலுக்குச் சான்று என்றால், தமிழர் எழுவர் விடுதலையைத் தடுக்கும் அதன் முயற்சி அதன் ஆயுள் தண்டனை அரசியலுக்குச் சான்றாகும். இவர்களைத் தூக்கிலிடத்தான் முடியவில்லை, சாகும் வரை சிறையில் அடைத்தாவது பார்க்கலாமே என்ற வன்மம் காங்கிரஸ், பா.ஜ.க தலைமைகளிடம் தலைதூக்கி நிற்கிறது.

(தொடரும்)

-தோழர் தியாகு-

எல்லா மனிதர்களும் தாங்கள் விதைத்த பண்பு விதைகளுக்கு ஏற்ப கோதுமைப் பயிராகவோ அல்லது களைச் செடியாகவோ வளர்கிறார்.

-பார்பர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாமன்னர் மகிந்தவின் மூத்த புதல்வரும்...

ஊழில் பெருவலி யாவுள மற்றொன்று சூழி னும் தான் முந்துறும் என்றார் திருவள்ளுவர். ஊழ்வினை வந்துறுத்தும் என்பதன் தத்துவத்தை அனைவரும் அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமானது.

அதிலும் குறிப்பாக மன்னர்கள், ஆட்சியாளர் கள் அறிந்திருப்பது கட்டாயம். மன்னர் இராஜ ராஜசோழன் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலை அமைத்தான். நிலத்தில் நிழல் விழாத பெரும் கோயி லின் கோபுரம் உலக அதிசயமாக கருதப்படக்கூடி யது.

தஞ்சைப் பெரும் கோயிலின் இராஜகோபுரத்தை அமைத்த மன்னன் இராஜராஜசோழனின் இறு திக்காலம் மிகவும் பரிதாபத்துக்குரியது. அவன் மகன் இராஜேந்திர சோழன் ஆட்சியில் ஆசை கொண்டான்.

முதுமை நிலையில் இருந்த இராஜராஜசோழ னுக்கு மகனின் உபாதையைத் தாங்க முடியவில்லை.

தான் கட்டிய இராஜகோபுரத்தில் ஏறிக் கீழே குதி த்து இறந்து போனான். எனினும் வரலாறுகளில் இந்தப் பதிவுகளை காணமுடியாது என்பதும் உண்மை.

மிகப்பெரும் கோயிலை அமைத்த மன்னனின் இறுதி முடிவு ஏன்? இப்படியாயிற்று என்று ஆராய் வது அவசியம். இங்குதான் கோபுரம் அமைத்த மன்னன் அதற்காக மனிதர்களை கடுமையாக வதைத்தான் என்பதை அறிய முடிகின்றது. கட வுள் தனக்கானவர் அன்று. அவர் மக்களுக்கான வர்.

அன்பே சிவம் என்று போதிக்கும் சைவசமய த்தில் அன்பை விற்று ஆலயம் கட்டுவதில் என்ன பயன்? மனிதர்களை வதை செய்வதை இறை வன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளான். இங்கு தான் ஊழ்வினைப் பயன் தொடங்குகிறது.

ஆலயத்தை அமைத்து வழிபாட்டுக்கு உதவு வது புண்ணியச் செயலாயினும் அதற்காக மனி தர்களை வதைப்பது; கடுமையாக வேலை வாங்கு வது என்பன மனித நேயம் அற்ற செயல்.

கடவுள் மனிதருக்குள் இருக்கிறார் என்ற உணர்வு எல்லோரிடமும் ஏற்பட வேண்டும். இல்லை யேல் மனிதர்களை வதை செய்து கோயில் கட்டி வழிபாடு செய்கின்ற அர்த்தமற்ற சம்பிரதாயங் கள் அரங்கேறி விடும். ஆக, எவ் உயிர்களையும் வதை செய்யாமல் இருத்தல் என்பது இங்கு முக்கியமாகிறது.

மனிதர்களைத் துன்பப்படுத்தி கோயில் கட்டி னாலே பாவம் என்றால்,

ஐயா! எங்களைக் காப்பாற்றுங்கள். உயிர்வாழ விடுங்கள் என்று கெஞ்சுகின்றவர்களை கொன் றொழிப்பது எவ்வளவு பாவம்? அந்தப் பாவம் துர த்தத் தொடங்கினால் என்ன நடக்கும் என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வன் சிறை யில். இப்போது மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ஷ வையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகி றது.

பிள்ளைகள் சிறையில் இருக்க பெற்றோர் வீட் டில் இருப்பது எங்ஙனம்? ஆகையால் பெற்றோர்க ளுக்கும் வீடு சிறைதான். இதுதான் ஊழ்வினை யின் முதற்படி.

# கஞ்சாவுடன் கைதான இளைஞனுக்கு மறியல்

(கரணவாய்)

பருத்தித்துறையில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை இ.போ.ச. பேருந்துச்சாலைக்கு முன்னால் கஞ்சாப் பொதியுடன் நின்ற இன்பருட்டியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனை பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரும் கடற்படையினரும்இணைந்து நேற்று முன்தினம் மாலை கைது செய்தனர்.

இவ் இளைஞனை நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோதே எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-5-60)

# நேர்முகப் பரீட்சைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பிரிவு அதிபர் சேவை தரம் III இற்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றும் ஆசிரியர்களுக்கான இலவச கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

முன்பதிவுகளுக்கு 021 2223382, 0766883394 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வட மாகாணத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# வட மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்க விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம்

வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரிய ஆலோசகர்களுக்கென தனியான ஒரு சேவையை உருவாக்கக் கோரி இலங்கை முழுவதும் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் பணியாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கையாக சட்டப்படி வேலை செய்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் வடக்கு மாகாணத்திலுள்ள ஆசிரிய ஆலோசகர்களும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட நிர்வாகக் குழுவினர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர்களின் நிலை குறித்து கலந்துரையாடுவதுடன் வடமாகாணத்தில் தற்போது கடமையில் உள்ள ஆசிரிய ஆலோசகர்களது விபரங்களையும் திரட்டிச் செல்லவுள்ளனர்.

எனவே வடக்கு மாகாணத்திலுள்ள பன்னிரெண்டு கல்விவலயங்களிலும் கடமையாற்றும் அனைத்து ஆசிரிய ஆலோசகர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத் தலைவர் தி.சிவரூபன் அறிவித்துள்ளார். (2-3)

# சர்வதேச மகளிர்தின வெளிப்படுத்துகையும் விளையாட்டுவிழாவும்

கிராம அபிவிருத்தி நிறுவனம், WUSC நிறுவனம் பிரதேச செயலகம் ஆகியவை ஒன்றிணைந்து பொது மக்களின் பங்குபற்றலுடன் இவ்வாண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்துடன் ஒன்றிணைந்த வகையில் விளையாட்டு விழா ஒன்றினை மாவட்ட செயலாளர் தலைமையில் நடத்த திட்டமிட்டுள்ளதாக வவுனியா கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் முகாமையாளர் ஏ.டி.ஜே.ரஜினி தெரிவித்தார்

இவ்விழாவானது இன்று கனகராஜன்குளம்/ புதுக்குளம் பாடசாலை மைதானத்திலும் நாளை மறுதினம்செட்டிகுளம மெனிக்பாம் பாடசாலை மைதானத்திலும் காலை 9 மணி முதல் நடைபெறும் என தெரிவித்தார். (2-3-250)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை நடமாடும் சேவை இடம்பெறவுள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்நடமாடும் சேவையில் விவாகப் பத்திரம், பிறப்பு இறப்பு பத்திரங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் வருகை தந்து இலவசமாக இவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

ஆள் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களையும் வழங்கமுடியும் .

புகைப்படம் எடுப்பது உளளிட்ட அனைத்து சேவைகளையும் இலவசமாக பெற்றுக் கொள்ளமுடியும். பொது மக்கள் இந்த சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன்படுத்துமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (2-3-281)

# சத்திய தரிசனம்



## உற்சாகமுடன் செயற்படு


❖ கடவுளிடம் நேரில் பேசுவதையே பிரார்த்தனை என்கிறோம். இதில் மனம் ஒன்றி ஈடுபட்டால் துன்பம் விலகும்.

❖ எதிர்மறை எண்ணங்களை கடவுளிடம் அளித்து விட்டால், அவர் அதை நல்லதாக்க மாற்றிக் கொடுப்பார்.

❖ உனக்கு எது வேண்டுமோ, அதை கடவுளிடம் கேட்டுப் பெறுவதில் தவறேதும் இல்லை.

❖ "எனக்கு எல்லாம் நீயே உன்னையே எனக்கு கொடு" என்று கடவுளிடம் பக்தி செலுத்துவதே உயர்ந்தது.

❖ எப்போதும் உற்சாகத்துடன் இரு. அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடு. இயன்ற அளவில் பிறருக்கு உதவி செய்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## சந்தனம் பூசுவது எதற்காக?

நம் கலாசாரத்தில் விபூதி பூசும் பழக்கம் சாதாரணமாக இருக்கிறது. ஆனால் பரவலாக சந்தனம் பூசிக் கொள்ளும் பழக்கமும் இருந்து வருகிறது. இதனால் என்ன நன்மை? சக்தியை கிரகித்துக்கொள்ளும் பொருட்டு விபூதி பூசப்படுகிறது. ஆனால் சந்தனம் குளிர்ச்சிக்காக உடலில் பூசிக்கொள்ளப்படுகிறது.

அதிக உஷ்ணம் கொண்ட உடலில் சில இடங்களில் சந்தனம் வைத்துக் கொண்டால், குளிர்ச்சி உண்டாகும். மேல் தோலுக்கும் சுகமாக இருக்கும். நமது கலாசாரத்தில் ஒருவருக்கு மொட்டை அடித்தால் கூட, முடி இறக்கிய பின்பு, தலையில் சந்தனத்தை குழைத்துப் பூசிக் கொள்வதை வழக்கமாக வைத்திருக்கின்றனர். இதனால் தோலுக்குக் குளிர்ச்சியும், சுகமும் கிடைக்கிறது. நேரடியாக சந்தனக்கட்டையை இழைத்துப் பூசும்போது உடலுக்கு அதிக குளிர்ச்சி கிடைக்கிறது.

பொதுவாக சந்தனத்தை நெற்றியிலும், தொண்டைக் குழியிலும் வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்து வருகிறது. ஏனென்றால் உடலின் உஷ்ணம் தொண்டைக் குழியில் சேர்ந்துவிட்டால், நமக்கு உணவு ஏற்றுக்கொள்ளாமல் போய்விடும்இந்த இடத்தில் வெப்பம் சேர்ந்துவிட்டால் நமக்கு யாரைப் பார்த்தாலும் வெறுப்பு உண்டாகும். உடலில் உஷ்ணம் என்பது பல இடங்களில் உண்டாகலாம்.

வெளி உலகத்தில் மற்றவர்களோடு இணைந்து செயல் செய்ய வேண்டியிருக்கும்போது, நாம் குளிர்ந்த தன்மையோடு இருந்தால், எந்த செயலும் நல்லவிதமாக நிகழும் என்ற புரிதல் ,ருந்ததால், தொழிலில் இருப்பவர்கள் சந்தனம் வைத்துக்கொள்வார்கள்.

ஆன்மீகத்தில் இருப்பவர்கள் திருநீறு வைத்துக் கொள்வதைப்போல், வியாபாரம் மற்றும் தொழில்துறையில் இருக்கும் பிரிவினர் குறிப்பாக சந்தனம் வைத்துக்கொள்வார்கள். உங்களது உடலின் உஷ்ண மிகுதியால் வயிற்று வலி போன்ற உபாதைகள் ஏற்பட்டால், சந்தனம் குழைத்து தொப்புளில் சிறிது வைத்துவிட்டால், 5 - 10 நிமிடங்களில். வயிற்று வலி பறந்து விடுவதை கவனித்திருப்பீர்கள். 5 நிமிடங்களில் உடல் குளிர்ந்து விடும்.


கோவிலில் உள்ள சக்தி ரூபங்களுக்கு அபிஷேகம் செய்த சந்தனத்தை உபயோகிக்கும் வழக்கம் நமது கலாசாரத்தில் உள்ளது. அந்த சக்தி ரூபங்களுக்கு சந்தனம் சாற்றும்போது, அந்த சந்தனத்திற்கும் சக்தி மாற்றம் நிகழ்ந்திருக்கும் என்பதால் அதை எடுத்துவைத்துக் கொண்டு தினமும் உபயோகிப்பார்கள்.

சந்தனம் தவிர அதே விதமான பொருட்கள் அநேகம் உண்டு. ஆனால் அவை அனைத்திலும் முதன்மை இடம் வகிப்பது சந்தனம்தான். ஆனாலும் ஆன்மீக நோக்கத்தில் தீவிரமாக இருப்பவர்களுக்கு திருநீறு போதும்!


# சென்.ஜோன்ஸ்- மத்திய கல்லூரி மோதும் வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போட்டி

## இன்று கோலாகலமாக ஆரம்பம்

## BATTLE OF THE NORTH




இருப்பவர்கள் (இடமிருந்து வலம்):பி.லவேந்திரா (பயிற்சியாளர்),ஏ.கானாமிர்தன் (அணித்தலைவர்), அருட்சகோதரர் என்.ஜே.ஞானப்பொன்ராஜா (அதிபர்),எஸ்.ஜெனிபிளமின் (துணை அணித்தலைவர்), வி.குமணன் (விளையாட்டு நிர்வாக அலுவலர்)
நிற்பவர் முதலாம் வரிசை (இடமிருந்து வலம்): ஏ.ஹெரோல்ட் லக்சி, எஸ்.டினோஜன், வி.யதுசன், ஜே.கிசாந்துஜன், கே. கபில்ராஜ், எம்.நிலோஜன்,சி.தேவபிரசாந்
நிற்பவர்கள் இரண்டாம் வரிசை (இடமிருந்து வலம்): ஜே.சுபீட்சன் ரியஸ், எம். அபினாஸ், எஸ்.அஜய், சி.கே.பெஞ்சமின் நிரோசன், பி.சோபாஸ்கரன், டி.ஜோசப் ஸ்ரலோன், எம்.சௌமியன், எஸ்.காருண்யன்




இருப்பவர்கள் (இடமிருந்து வலம்): எஸ்.சுரேஸ்மோகன் (பயிற்சியாளர்), எஸ்.சுகீதன் (விளையாட்டு நிர்வாக அலுவலர்), எஸ்.அலன்ராஜ் (தலைவர்), எஸ்.கே.எழில்வேந்தன் (அதிபர்), எஸ்.கோமேதகன் (துணை அணித்தலைவர்),வி.நிதர்சன் ( பொறுப்பாளர்)
நிற்பவர்கள் முதலாம் வரிசை (இடமிருந்து வலம்): ரி.செல்வராஜ்,எஸ்.கார்த்தீபன்,எஸ்.கௌதமன், கே.தீபன்ராஜ், எஸ்.மதுசன்,வை.கிருபாகரன்,வி.டினோஜன், எஸ்.தசோபன், யு.பிரியலக்சன்
நிற்பவர்கள் இரண்டாம் வரிசை (இடமிருந்து வலம்):வி.திசோத், ஏ.அனஸ்ராஜ், எஸ்.மதியழகன், வி.குகசதுஸ்,கே.நிக்சன், எஸ்.ஜரோசன்

வடக்கின் மாபெரும் கிரிக்கெட் போர் என வர்ணிக் கப்படும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பா ணம் மத்திய கல்லூரி க்கும் இடையிலான 110 ஆவது கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.15 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மிகவும் கோலாகலமாக ஆரம்ப மாகவுள்ளது.

வியாழன், வெள்ளி, சனி என தொடர்ந்து மூன்று நாட்கள் மேற் படி போட்டி நடைபெறவுள்ளது.

சிறந்த முறையில் போட்டியினை நடத்துவதற்கு இம் முறை கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

இதன்படி சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் சுப்பி ரமணியம் பூங்கா பக்க மாக உள்ள நுழைவாயில் ஊடாகவும் பழைய மாணவர்களும் அலுவலர்களும் மேற் குப் பக்கமாக உள்ள நுழைவாயில் ஊடாகவும் மைதானத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுவர்.

மத்திய கல்லூரியின் பழைய மாணவர் தம் பர் மண்டபத்தின் பக்கமாகவுள்ள வாயில் ஊடாகவும் ஆசிரியர்களும் மாண வர்களும் கிழக்கு பக்க வாயில் ஊடாகவும் மைதானத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

இரு கல்லூரி மாணவர்களும் கல்லூரி சீருடையுடன் உலா வருதலோ அலது பணம் சேகரிப்பிலோ ஈடுபடுதலோ முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

வீரர்கள் ஆட்டமிழப்பு ஏற்பட்டாலோ அல்லது 50, 100 ஓட்டங்கள் வீரர்களால் குவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆதர வாளர்கள் மைதானத் திற்குள் செல்ல முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

மைதானத்துக்கு உள்ளேயும், வெளி யேயும் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸாருக்கு முழு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற போட் டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

அளவெட்டி விநாயகர் விளை யாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டி எதிர் வரும் ஞாயிறு அன்று ஆரம்பமாக உள்ளது. இச் சுற்றுப் போட்டியா னது 9வீரர்கள் 8 ஓவர்களைக் கொண் டதாக நடத்தப்பட வுள்ளமை குறிப் பிடத்தக்கதாகும். மேலதிக தகவல் க்ளுக்கு 07796 65507, 07778 51166 என்னும் தொலைபேசி இலக் கத்துடன் தொட ர்பு கொள்ளவும்.

சாவகச்சேரி டிறிபேக்ஸ்ரார் விளை யாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி மிக விரைவில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது.அணிக்கு8 வீரர் களையும் 6பந்து பரிமாற்றங்க ளையும் கொண்டதாக அமையும் போட்டிகளின் நேர அட்டவணை VKJ கலந்துரையாடலின் பின்னர் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப் படும்.போட்டியில் பங்கு பற்ற விரும் பும் கழகங்கள் 077 933 3323, 077 226 9817, 077 444 2557 077 138 7005 ஆகிய தொ.பேசி இலக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும். (கு-29)

## அச்சுதன், அமீர்தன், வினோத்ராஜ் சிறப்பாட்டம் மைக்கல் அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதி

அச்சுதனின் சகல துறை ஆட் டம் அமீர்தன், வினோத்ராஜ் ஆகி யோரின் துடுப்பாட்டத்தின் மூலம் மைக்கல் அணி கால் இறுதிப் போட் டிக்கு தகுதி பெற்றது. வடமராட்சி இமையாணன் மத்திய விளையாட் டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திவரும் அணிக்கு 8ஓவர் 11 நபர் கொண்ட கிரிக்கெட் சுற்று போட்டிகள் இமையாணன் மத்திய விளையாட் டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடை பெற்ற இரு போட்டிகளிலும் யாழ் மாவட்டத்தில் பலம் வாய்ந்த அணி களை வெற்றி பெற்று மாலுசந்தி மைக்கல் அணி கால் இறுதிப் போட் டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலாவது ஆட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து மோதிய மைக் கல் அணி 8 ஓவர்களில் 71 ஓட்ட ங்களை பெற்றது .இதில் அமீர்தன் 25,ரகுவரன் 17ஓட்டங்களைப் பெற் றனர்.

பதிலுக்கு ஆடிய வல்வை அணி 51 ஓட்டங்களைப் பெற்றது.

இறுதியில் 21 ஓட்டங்களினால் மைக்கல் அணி வெற்றி பெற்றது. பரபரப்பான இரண்டாவது போட்டி யில் யாழ்ப்பாணம் முத்துத்தம்பி அணியை எதிர்த்து மோதிய மைக் கல் அணி இறுதிப்பந்தில் வெற்றி பெற்றது.

மைக்கல் அணியின் பந்து வீச்சு க்களை இலகுவாக எதிர்கொண்ட முத்துத்தம்பி அணி 8 ஓவர்களில் அதிரடியாக 85 ஓட்டங்களை குவித் தது.

மைக்கல் அணியின் பந்து வீச் சின் சார்பில் பிபீலிகன் 3, அச்சுதன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய மைக்கல் அணி தமது துடுப்பட்ட பலத்தின் மூலம் இறுதிப்பந்தில் 4 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் சபேஷ் கடை சிப் பந்தில் 4 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து வெற்றியை உறுதி செய் தார். இதில் அச்சுதன் 25, வினோத் ராஜ் 17 ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் 2 விக்கெட்டுகளால் மைக் கல் அணி வெற்றி பெற்று காலிறு திப்போட்டிக்கு தகுதி பெற்றது.



இந்த தொடரின் அரையிறுதிப் போட்டிகள், இறுதிப்போட்டிகள் மின் னொளியில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## உதைபந்து நடுவருக்கான அங்குரார்ப்பண கூட்டம்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் நடுவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை அல்வாய் தெற்கு கிராம அலுவலர் பணிமனையில் பி.ப 3 மணியளவில் நடைபெற வுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம் மேளனத்தின் மத்தியஸ்தர் தர பரீட் சையிலோ அல்லது இலங்கை உதை பந்தாட்ட சம்மேளனத்தினால் அங் கீகரிக்கப்பட்ட லீக்கின் மத்தியஸ்தர் தர பரீட்சையில் சித்தியடைந்த அதே நேரத்தில் வடமராட்சி லீக்கில் உள்ள கழகங்களில் அங்கத்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

கழகச் செயலாளர்களிட ம் லீக்கி னால் வழங்கப்பட்டிருக்கும் விண் ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் தமிழ், புவியியல், பொருளியல், கணக்கீடு ஆகிய பாடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர் விபரம்

முத்துக்குமார் கோபாலகிருஷ்ணன்- பளை, 811292931V, செல்வி லிகிர்தா மார்க் கண்டு-கிளிநொச்சி 868203366V, திருமதி தேவகி மயூரன்- பளை 817471 854V,

திருமதி ரதிதேவி ஜெகநாத்-கிளிநொச்சி 838362672V, திருமதி ரஞ்சினி டயனிதாஸ்-கிளிநொச்சி 875221094V, திருமதி லோஜினி போல்ராஜ்-கிளிநொச்சி 857762940V, திருமதி ஜினோதினி கோபாலகிருஷ்ணன்-பளை 828604759V, செல்வி அங்கயற் கண்ணி குகதாசன்-பூநகரி 847523727V, செல்வி வதனா நடராசா-பளை 8657739 78V, சண்முகவடிவேல் ஜெசிந்தன் -காரை நகர் 873292857V, திருமதி மைதிலி சுதா கரன்-கிளிநொச்சி 865013361V, சிவக்கிளி பிரதீபன்-கிளிநொச்சி 853514519V, செல்வி மீனா பெருமாள்-கிளிநொச்சி 827982695V, செல்வி தர்சிகா விநாயகமூர்த்தி கிளிநொச்சி 878541570V, தேவநாதன் லியோ ஒக்ஸ் வேட்-கிளிநொச்சி 852762071V, திருமதி பாத்திமா பெனாயீர் முகம்மது சாதிக்-முழ ங்காவில் 895100404V, செல்வி விக்றோ கமிலஸ் பங்கராஜா-கிளிநொச்சி 906762 706V, விக்கினேஸ்வரன் நரேஸ்குமார்-கிளிநொச்சி 853183555V, திருமதி லாவ ண்யாதேவி சாயிகாந்தன்-கிளிநொச்சி 90 7352072V, திருமதி சுரேகா கஜேந்திரமூர் த்தி-கிளிநொச்சி 878601602V,

செல்வி அருணபிரியா பாலசுப்பிரமணி யம்-கிளிநொச்சி 908140575V, தவராசா கேதீஸ்வரன்- கிளிநொச்சி 872363483V, வயித்திலிங்கம் றஜனிகாந்தன்-கிளிநொச்சி 820093917V, கிருஷ்ணபிள்ளை நிமல்-கிளிநொச்சி 893541454V, செல்வி நிறோஜா விக்கினேஸ்வரன்-கிளிநொச்சி 905160800V,

செல்வி சுதர்சினி மோகன்-கிளிநொச்சி 88 8071717V, திருமதி விஜயதர்சினி சசிறதன் -கிளிநொச்சி 868231920V, திருமதி தயா நிதி உதயகுமார் பூநகரி 865493819V, செல்வி நிரோஜனா யோகேந்திரம்-வல்வெட் டித்துறை 886533136V, செல்வி நிருஜா குமாரசாமி-வரணி 896520300V, செல்வி விஜயந்தி முருகதாஸ்-மானிப்பாய் 856943 925V, சோமசுந்தரம் சஞ்ஜீவன்-உரும் பிராய் 851660054V, செல்வி தர்ஜிகா நல்ல தம்பி-கரவெட்டி 876163969V, திருமதி ஜெனி ற்றா சபேசன்-வரணி 876001454V, வல்லி புரம் ஜீவானந்தன்-வரணி 842541972V, திருமதி சிவாஜினி மயூரன்-ஊர்காவற்றுறை 858 140870V, சர்வேந்திரன் தர்சனன்-சுன் னாகம் 841734254V, செல்வி கிரிஜா யோக ராசா-அச்சுவேலி 898442578V, அன்ன லிங்கம் கீர்த்தனன்-யாழ்ப்பாணம் 89038 3556V, செல்வி திவ்வியாவந்தி சிவலோக நாதன்-வல்வெட்டித்துறை 898422712V, செல்வி தர்ஷிகா பன்னீர்ச்செல்வம் -அல்வாய் 895580554V, செல்வி ஸுமித்திரா சண் முகராசா-வட்டுக்கோட்டை 897312735V, குலசேகரம் சுபராஜ்-தாளையடி 851811818V, செல்வி நிஜாந்தினி சாந்தலிங்கம்-முல்லைத் தீவு 876573482V, செய்யது காசீம் முகம் மது ஜவ்ஸி-முள்ளியவளை 832583782V, வேகாவனம் பிரதீபன் முல்லைத்தீவு 860 771780V, செல்வி தங்கரசி கணபதிப்பிள்ளை -ஒட்டுசுட்டான் 877190609V, ஆரோக்கிய நாதர் அருட்கார்மன் ஜெயராசா- யாழ்ப்பா ணம் 882562409V, திருமதி டட்ஷாயினி தபேசன்-ஆவரங்கால் 898641287V, திரு ஞானச்செல்வம் ஜெயராம்-கரவெட்டி 89071 2851V, செல்வி கீர்த்திகா புஷ்பநாதன் தெல் லிப்பழை 887042047V, திருமதி தேவகி சுதாகரன்-யாழ்ப்பாணம் 838290949V, செல்வி அனுசாகரி சபாரத்தினம்-நீர்வேலி 845452695V, செல்வி நிரூபனா தேவதாஸ் -வல்வெட்டித்துறை 907202216V, திருமதி சுரேந்தினி சுரேஷ்-அக்கராயன்குளம் 908 203100V, வேலாயுதம்பிள்ளை பவானந் தன்-முல்லைத்தீவு 870102208V, திருமதி கஜிவனா மயூரன்-முல்லைத்தீவு 8568811 05V, செல்லன் கீரன்-முல்லைத்தீவு 85061 3443V, பழனியாண்டி உதயகுமார் -முல்லைத்தீவு 893372083V, செல்வி ஹம்ஷா ரஞ்சிதகுமார்-யோகபுரம் 905943 170V, பேரின்பநாயகம் அஜந்தன்- முல்லைத் தீவு 870712901V, செல்வி ஸாகித்யா தெய் வேந்திரன் முல்லைத்தீவு 876693453V, முக ம்மது முகுசீர்முகம்மது றிஷான் -மன்னார் 841933842V,

ரஞ்சன் ரவிக்குமார்-மன்னார் 8831348 69V, திருமதி றொபினா கிறிசாந்தி ஜேம்ஸ் கொலிங்டன்- மன்னார் 835192407V, செல்வி அருள்யோகி செலஸ்தீன்-மன்னார் 825 39 3617V, திருமதி சியானா முகம்மது அஸ்மி-மன்னார் 896973088V, திருமதி லுத்து பியா அப்துல் காதர் பர்சான்-மன்னார் 8678 71403V, செல்வி அஸ்மியா உம்மா அமீனுதீன முசலி 915592333V, செல்வி அமலதர்சினி பிறேம்குமார்-மன்னார் 865712782V, திருமதி டிலோஜினி குரூஸ் நிமல்வாஸ்-மன்னார் 856113507V, செல்வி சிவரஞ்சினி செல்வரத்தினம்-சாவகச்சேரி 878531124V, யோன் ஸ்ரான்லி யோசப் லெனின் பெர்னா ண்டோ-மன்னார் 880772449V, செல்வி பஸ் மியா அப்துல் சுபுகான்-மன்னார் 886880111V,

செல்வி தருஷினி செபதாசன் மன்னார் 886273622V, செல்வி தன்ஸிஹா முகம் மது ரெட்ணம்-மன்னார் 896440144V, திரு மதி பாத்திமா இல்மா வஜீஹம்-புத்தளம் 90 6341964V, திருமதி றமீஸா முஹம்மது, ஹ்ஸான்-மன்னார் 887233020V, செல்வி மேரி எமல்டா சுரேகா அன்ரனி குலாஸ்-மன்னார் 906482851V, திருமதி றினோஸா ஆஸீம்-மன்னார் 886713258V, செல்வி ஜெயமலர் கேதீஸ்வரன்-மன்னார் 888 450319V, செல்வி சிந்துயா சதாசிவம-மடு 906620073V, செல்வி மரியதாஸ் றொகானி கிறிஸ்ரலின்- மன்னார் 895854721V, திரு மதி நௌபியா முஹம்மது நாசிக்- புத்தளம் 875361520V, அந்திரேஸ் செபஸ்ரீன் அந் தோனிதாஸ்-மன்னார் 840402525V, செல்வி இர்மா வில்பிறட் டயஸ்-மன்னார் 888060073V, செல்வி யூட் மேரி ஜெயலற் லூக்கேஸ் சோசை-மன்னார் 886181558V, செல்வி நிரோஜினி கிறகோரிப்பிள்ளை - மன்னார் 906581914V, செல்வி ஜெயமலர் மரியதாஸ் கொடுதோர்-மன்னார் 887832 340V, திருமதி றஹீமா அனீஸ்-மன்னார் 898162788V,

செல்வி ரசிதா புவனேந்திரன்-வவுனியா 895873420V, திருமதி சிவகௌரி சிவகரன்-வவுனியா 878401220V, செல்வி சசிகலா சண்முகம்-வவுனியா 885532330V, செல்வி ஸஜீலா அபுத்தாகிர்-வவுனியா 88 6633246V, திருமதி நிம்ஸியா முஹம்மது ஹாரிஸ்-வவுனியா 888591125V, செல்வி சந்திரிகாபேனட் யோசேப்-வவுனியா 897 191385V, தம்பிராசா பிரசாந்-வவுனியா 900431449V,

வரராசசிங்கம்தயாபரன்-வவுனியா 80 3344132V, திருமதி அனுஷா மதியழகன் வவுனியா 837611385V, அரசரத்தினம் ஷாந் திக்குமார் -வவுனியா 882842053V, வேலம் புராசன் ராஜீவ்-வவுனியா 850790370V,

சுந்தரானந்தன் கௌரிசங்கர்-வவுனியா 872632778V, திருமதி யூலியற் றொசானி கஜன்-வவுனியா 887472408V, செல்வி. ஜெசீந்தினி நவரத்தினராசா-வவுனியா 905091131V, சிவசங்கரசர்மா ஶ்ரீசங்கர சர்மா வவுனியா 883310543V, திருமதி ஸஜீதா சம்சுல் ஆரிப்-வவுனியா 8778920 00V, திருமதி வானதி கமல்ராஜ்-வவுனியா 895882550V,

பாலசுப்பிரமணியம் ரஜீவன் வவுனியா 840951561V, செல்வி அனோஜா இலச்சும ணன்-வவுனியா 895171131V, செல்வி சாளினி பரமசிவம்-வவுனியா 888461965V, திரு மதி இந்துஜா கோபிநாத்-வவுனியா 89849 2265V.

# சிங்கள மொழி மூல பாடசாலைகளில் நிலவும் சிங்களம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர் விபரம்

Mr. Keebiyage Madhawa Chathuranga Padmakumara Rajanganaya 882472736V, Mr.Kariyakarawahage Niroshan Sampath Karunathilaka Anuradhapura 862840585V, Miss. Wijewardanage Dinesha Nisansala Menike Wijewardana Medawachchiya 907640930V, Miss. Sithara Dilhani Rupasinghe Shantha Rupasinghe kodikamam 916110162V, Miss. Bodhinayake Dhilini Nimesha Bodhinayake Vavuniya 905452398V, Mr.Konara Mudiyanselage Ajith Pushpaku mara Ampara 812384309V Mr. Missaka Wimarshana Premasiri Vavuniya. 911 062470V, Miss Kankanamlage Sanjeewani Rupasinghe Ethawetunu wewa 906572591V

## இராணுவ வசமுள்ள..

தங்க ஆபரணங்கள் குறித்த தெளிவுப்படு த்தலை கோரினார்.

மீட்கப்பட்ட ஆபரணங்கள் எவ்வளவு, அதன் பெறுமதி என்ன? அது அரசாங்கத்திற்கு எவ் வாறு வழங்கப்பட்டது என்ற கேள்விகளை அவர் எழுப்பினார். இந்த கேள்விகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

இறுதிபோரின் போது தமிழீழ வைப்பக ங்களில் இருந்து படையினரால் பெருந் தொகை தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்டன.

இதில் பொதுமக்களால் அடகு வைக்கப்ப ட்ட தங்க ஆபரணங்களும் தமிழீழ விடுதலை புலிகளுடைய தங்க ஆபரணங்களும் இரு க்கலாம் என கருதப்பட்டது.

மீட்கப்பட்டதாக கூறப்படும் சுமார் 150 கிலோ கிராம் தங்க ஆபரணங்கள் குறித்து இரா ணுவத்தினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

இதில் காதணிகள், மோதிரங்கள், மாலை கள், வளையல்கள், மற்றும் பதக்கங்கள் உள்ளிட்டவை அடங்குகின்றன.

இவ்வாறு மீட்கப்பட்ட தங்க ஆபரண ங்களில் 32 கிலோ கிராம் தங்க ஆபரணங் கள், மாணிக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் உறுதிப்படுத்தப்பட்டு மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டது.

இதன்படி, 2010ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் திகதி முதல் 2012ஆம் ஆண்டு ஜன வரி 26ஆம் திகதி வரையில் 28 தடவைக ளில் இந்த 32 கிலோ தங்க ஆபரணங்கள் மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டன.

இவை 131 மில்லியன் 84 ஆயிரத்து 751 ரூபாய் அதாவது, 13 லட்சத்து 18 ஆயிரத்து 475 கோடியே 10 லட்சம் ரூபாய் என மதிப்பிடப்ப ட்டது. இராணுவத்தின் தகவலின்படி, 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி 25 பேருக்கு அவர்களின் தங்க நகைகள் திருப்பி அளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 2377 தங்க நகை பொதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இரா ணுவம் தெரிவித்திருந்தது.

அத்துடன், 2014ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் திகதி கொழும்பில் வைத்து 2294 பேரு க்கு அவர்களின் ஆபரணங்கள் திருப்பி அளி க்கப்பட்டதாக இராணுவத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

எனினும் ஊடகங்களில் 1960 பேருக்கே இந்த ஆபரணங்கள் மீள கையளிக்கப்பட் டிருந்தாக தெரிவிக்கப்பட்டது.

இதனை அன்றைய பாதுகாப்பு அமைச் சும் உறுதிப்படுத்தியிருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரும், 1960 பேர் முன்னிலையில் 2182 நகை பொதி கள் பகிர்ந்தளிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருக்கி றார். எனவே இங்கு முரண்பாடான தகவல் கள் வெளியாகியுள்ளன.

இதனை உரிய வகையில் தீர்த்துக் கொள் வதற்காக நாடாளுமன்ற கண்காணிப்பு குழு வொன்றை அமைத்து அதனூடாக செயற்பட உள்ளதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் முன் னாள் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த ராஜ பக்ஷ, முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்டவர்கள் இருப்பதால் இந்த விடயத்தை நாடாளுமன்றத்தினுள்ளே தர்த்துக் கொள்ளலாம் என தெரிவித்தார். இதன் போது அனுங்கே ரத்தரங் அப்பி அரங், மக் கரண்டத? என்ற மற்றவரின் நகைகளை எடுத்து நாங்கள் என்ன செய்ய என்ற முது மொழியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். இதனை ரணில் விக்கிரம சிங்க குறிப்பிட்ட போது மகிந்த ராஜபக்ஷ தரப் பினரான பொது எதிரணி தரப்பில் இருந்து கோசம் எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க தாம் இந்த விடயத்தை கூறும் போது ஏன் இந்த பயம் வந்தது என கேள்வி எழுப்பி னார். அத்துடன், இன்னும் 80 கிலோ கிராம் தங்க நகைகள் இராணுவத்தின் பொறுப்பில் உள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். இவ ற்றை உறுதிப்படுத்தி மத்திய வங்கியிடம் கைய ளிக்கவுள்ளதாக இராணுவத்தினர் குறிப்பிட்டு ள்ளனர் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரின் இந்த பதிலில் திருப்தி அடை யாத ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, முரண்பாடான பிரச்சினைகள் வரும் போது நாடாளுமன்றத்தில் உள்ள கண் காணிப்பு குழுவை சுட்டிக்காட்டுவது பிரதம ரின் வழமையான விடயம் என குற்றம் சும த்தினார். இராணுவத்திடம் 80 கிலோ தங் கம் இருக்குமாயின் அவையும் வடக்கில் உள்ள மக்களின் நகைகளாகவே இருக்க முடியும். எனவே அதனையும் மீண்டும் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்திடம் இருக்கின் றதா? என அவர் கேள்வி எழுப்பினார்.(செ-12)

## நீதிமன்றில் ஆஜரான...

தில் ஈடுபட்டுள்ள ஒருபெண் கைதி உட் பட14 தமிழ் அரசியல் கைதிகள் விசாரணை க்காக நேற்றையதினம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்கள் கடந்த 16 நாட்களாக உணவு தவி ர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ள தன் காரணமாக இந்த கைதிகளின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் குற்றவாளி கூண்டில் ஏற்றப்பட்ட அவர்களில் இருவர் மயங்கி விழுந்துள்ளனர்.

இரண்டு கைதிகள் குற்றவாளி கூண்டி லில் மயங்கி விழுந்ததை அடுத்து நீதிமன்ற நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைக கப்பட்டது. பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நீதிமன்ற நடவழக்கையில் கைதிகள் தொடர்பில் எடுக் கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கை குறித்து சட் டமா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்கவில்லை என குற்றப்புலனாய்வுத்துறை பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனையடுத்து மீண்டும் மன்றுக்கு வந்து சந்தேக நபர்களை நாளை 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீத வான் உத்தரவிட்டுள்ளார். அன்றையதினம் நீதவான் அவர்கள் தொடர்பாக சட்டமா அதி பரின் நிலைப்பாட்டை அறிவிக்குமாறும் குற் றப்புலனாய்வுத்துறை பொலிஸாருக்கு நீத வான் உத்தரவிட்டதுடன் கைதிகளின் உடல் நிலையை சரியாக கவனித்து அவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குமாறு சிறைச் சாலை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்து ள்ளார். (செ-9)

## ஆலய மரத்தில்...

மரத்தில் கண் போன்ற உருவம் தோன் றிய தையடுத்து அங்கு பெருமளவான பக் தர்கள் கூடி வழிபாடாற்றுகின்றனர்.

அல்வாய் வடக்கில் உள்ள காவோணை காளி கோயிலின் உட்புறத்தில் உள்ள மரத்தி லேயே இக் கண் உருவம் தோன்றியதாக தெரி விக்கப்படுகிறது.

இரவு 7.00 மணியளவில் பிரகாசமான வெளிச்சத்துடன் கண் தோன்றியதையடுத்து அப் பகுதியில் உள்ள பெருமளவானோர் பக் திப் பரவசத்துடன் இதைப் பார்வையிட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (செ-60)

## கைக்குண்டு...

உள்வீதி மருங்கில் கைவிடப்பட்ட நிலை யில் கைக்குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட் டுள்ளது.

நேற்று மாலை அப்பகுதியால் சென்ற பொது மக்கள் வழங்கிய தகவலை அடுத்து அவ்விடத்திற்கு வந்த மானிப்பாய் பொலிஸார் குண்டு காணப்பட்ட இடத்தை அடையாளம் கண்டு பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

குறித்த குண்டு இராணுவத்தினர் பாவி க்கும் வர்க்கத்தை உடையது எனவும் கடந்த காலங்களில் இப்பகுதியில் நிலை கொண்டி ருந்த இராணுவத்தினர் இதனை கைவிட்டு சென்றிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை இக்குண்டு செயலிழக்கப் பட செய்வதற்காக நீதவானின் கவனத்திற் கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதனை செயலிழப்பதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் பண்ணைப் பகுதியில நிலை கொண்டுள்ள விசேட அதிரடிப்படையி னர் வந்து குண்டினை செயலிழக்கச் செய்வா ர்கள் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட் டது. (செ-4)

## ஐ.நா ஆணையாளர்...

மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 31 ஆவது அமர்வில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இன்று வியாழக்கிழமை விசேட உரையாற்றவுள்ளதாக அமைச்சரும், ஐ.நாவுக்கான முன்னாள் சிறப்புத் தூதுவருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 31ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகி இருந்த போதிலும், இலங்கை மனிதவுரிமைகள் தொடர்பாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

இந்நிலையில், இலங்கை தொடர்பில் அவர் வியாழக்கிழமை விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிடவுள்ளார். இந்த அறிவிப்பு கடந்த மாதம் அவர் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தை அடிப்படையாக கொண்டதாக இருக்கலாம். இலங்கையின் மனிதவுரிமை தொடர்பிலான வாய்மொழி அறிக்கை எதிர்வரும் யூன் மாதம் சமர்ப்பிக்கப்படும் என்று அவர மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## மாணவியை கட...

வெட்டித்துறையில் மாணவி ஒருவரை அதிகாலை 3 மணிக்கு கடத்திச் சென்று முல்லைத்தீவில் வைத்து பாலியல் வல்லுறவு குற்றம் புரிந்ததாக மார்க்கண்டு செல்வகிருஸ்ணன் (செல்லப்பா) என்ற 3 குழந்தைகளின் தந்தையான 35 வயது நிரம்பிய எதிரிக்கு எதிராக ஆட்கட்த்தல் மற்றும் பாலியல் வல்லுறவு குற்றம் புரிந்தார் என்ற அடிப்படையில் சட்டமா அதிபரினால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

எதிரி பிணையில் விடப்பட்ட நிலையில் இந்தியாவுக்குத் தப்பியோடி அங்கு ஒளித்து வாழ்கின்றார். இதனால் எதிரியின்றி வழக்கு விசாரணை நடைபெற்றது.

கடத்தல் சம்பவம் நடைபெற்றபோது, அந்த மாணவி 15 வருடங்கள் ஒருமாத வயதுடையவராக இருந்தார். பாதிக்கப்பட்ட இந்த மாணவி தனக்கு நேர்ந்தது என்ன என்பதைத் தனது சாட்சியத்தில் நீதிமன்றத்திற்கு விளக்கிக் கூறினார்.

சம்பவம் நடைபெற்ற அந்த இரவு தமது சகோதரியாகிய அந்த மாணவி தங்களுடன் நித்திரை கொண்டதாகவும் மறுநாள் காலை அவரைப் படுக்கையில் காணவில்லை என்றும் அவர் கடத்திச் செல்லப்பட்டதைப் பின்னர அறிந்ததாகவும் பாதிக்கப்பட்ட மாணவியின் சகோதர சகோதரிகள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

விசாரணையின் முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது:

பதினாறு வயதுக்குக் குறைந்த பெண் பிள்ளையைப் பாதுகாவலரின் அனுமதயின்றி அழைத்துச் செல்வது ஆட்கடத்தல் குற்றமாகும். அதேநேரம்,16 வயதுக்குக் குறைந்த சிறுமியை அவருடைய சம்மதத்துடனோ அல்லது சம்மதம் இல்லாமலோ பாலுறவு கொள்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என தண்டனைச் சட்டக் கோவை கூறுகின்றது.

இந்த வழக்கில் சம்பவ தினத்தன்று அதிகாலை 3 மணிக்கு 16 வயதுக்குக் குறைந்த பாடசாலை மாணவியை கடத்தி எதிரி ஆட்கடத்தல் குற்றம் புரிந்துள்ளாார். அத்துடன் 16 வயதுக்குக் குறைந்த அந்த சிறுமியுடன் பாலுறவு கொண்டதன் மூலம் பாலியல் வல்லுறவு குற்றத்தையும் புரிந்துள்ளார். விசாரணையின போது சாட்சியங்களின் மூலம் ஆட்கடத்தல் மற்றும் பாலியல் வல்லுறவு ஆகிய இரண்டு குற்றங்களையும் எதிரி புரிந்தார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

எதிரியைக் குற்றவாளியாகக் கண்டுள்ள இந்த நீதிமன்றம் ஆட்கடத்தல் குற்றத்திற்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபாய் தண்டமும் கட்டத் தவறினால ஓர் ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

பதினாறு வயதுக்குக் குறைந்த சிறுமியுடன் பாலுறவு கொண்டதன் மூலம் பாலியல் வல்லுறவு கொண்ட குற்றத்திற்கு10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் கட்டத் தவறினால் 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 2 லட்சம் ரூபாய் நட்டஈடு செலுத்த வேண்டும். தவறினால் 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேணடும் என தீர்ப்பளித்தார்.

குற்றம் சாட்டப்பட்ட எதிரி இந்தியாவில் இருப்பதாக மன்றில் சாட்சியமளிக்கப்பட்டிருப்பதனால், சர்வதேச பொலிஸாரின் ஊடாக அவரைக் கைது செய்யுமாறு பகிரங்கப் பிடியாணை பிறப்பித்து பொலிஸ் மா அதிபருக்கு கட்டளையிடப்படுகின்றது.

அதேபோன்று சார்க் நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கையைப் பாவித்து, இந்தியாவில் உள்ள எதிரியை நாடு கடத்துமாறு இந்திய வெளியுறவு அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்து எதிரியை இலங்கைக்கு நாடு கடத்தி அவரை நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (செ-9)

## நியமனம் பெறு...

செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

எனவே தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் குறித்த திகதியில் தவறாது வட மாகாண கல்வி அமைச்சிற்கு சமுகமளித்து தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (பெயர் விபரங்கள் 23-ம் பக்கத்தில்) (செ)

## தம்மாலோக தேர...

புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அவர் நேற்று மாலை கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட தையடுத்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (செ-12)

## அஸ்கிரிய பீட...

பீட மகாநாயக்க தேரர் கலகம ஸ்ரீ அத்ததஸ்ஸி தேரர் காலமாகியுள்ளார்.

கலகம ஸ்ரீ அத்ததஸ்ஸி தேரர் கீழே விழுந்ததன் காரணமாக சுயநினைவு அற்ற நிலையில் நேற்று கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த 2015-ம் ஆண்டு மே மாதம் கலகம அத்ததஸ்ஸி தேரர் அஸ்கிரி பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

உடுகம சிறி புத்தரக்கித்த தேரர் காலமானதன் பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அத்ததஸ்ஸி தேரர் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## நாமல் ராஜ...

துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ 15 கோடி ரூபாய்க்கும் அதிக பணத்தைக் கொடுத்து நிறுவனம் ஒன்றை கொள்வனவு செய்துள்ளமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டை விசாரணை செய்துள்ள பொலிஸார், அவர் மீது கறுப்புப் பண மோசடிக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

இதனையடுத்து, நாமல் ராஜபக்ஷவுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்றின் 4 வங்கிக் கணக்குகளை முடக்குமாறு உத்தரவிட்டுள்ள கொழும்பு மேலதிக மாஜிஸ்ட்ரேட் நிஷாந்த பீரிஸ், நாமல் ராஜபக்ஷ தவிர்ந்த அவரது நிறுவனத்துடன் தொடர்புடைய 7 பேரை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக் கூடாது என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் முயற்சியில் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு பற்றி நாமல் ராஜபக்ஷவிடம் வினவிய போது, நாமல் கூறுகையில்,

கடந்த ஆண்டு ஜனவரி 8-ம் திகதியிலிருந்து எங்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. தொடங்கும் போது 18 பில்லியன் டொலர் அளவுக்கு குற்றச்சாட்டை முன்வைத்தார்கள். ஆனால் இன்று சில மில்லியன் ரூபாய்கள் அளவுக்கு குற்றச்சாட்டை சுருக்கிக்கொண்டுள்ளார்கள் என்றார் நாமல் ராஜபக்ஷ.

கவர்ஸ் லிமிட்டட் என்ற நிறுவனத்தில் நீங்கள் உரிமையாளர் என்றும், 15 கோடி ரூபாய் செலவிட்டு இன்னொரு நிறுவனத்தை கொள்வனவு செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினரான உங்களிடம் எப்படி இந்தளவு பணம் வந்தது என்று நாமல் ராஜபக்ஷவிடம் கேட்ட போது,

நான் 2010-ம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும்போது தேர்தல் ஆணையாளருக்கும், தெரிவான பின்னர் நாடாளுமன்ற சபாநாயகருக்கும் எனது சட்ட பூர்வமான சொத்து விபரங்களை நாடாளுமன்றத்திடம் முன்வைத்து வந்துள்ளேன் என்றார் நாமல் ராஜபக்ஷ.

23 வயதில் நான் நாடாளுமன்றத்துக்கு தெரிவானேன். எனது இளமைக்காலத்தில் எனது உறவினர்களிடமிருந்தும் பெற்றோர், குடும்பத்தினரிடமிருந்தும் எனக்குக் கிடைத்த சொத்துக்களின் விபரங்களை உரிய காலத்தில் சபாநாயகரிடம் சமர்ப்பித்திருக்கிறேன். நாங்கள் திருடர்கள் என்று உலகத்துக்கு காட்ட வேண்டும் என்பது தான் இந்த அரசாங்கத்தின் தேவை என்றார் நாமல்.

மக்களின் பிரச்சினைகளை மறக்கடிப்பதற்காக, எங்களின் மீது வழக்குப்போட்டு, ஓரிரு மாதங்கள் சிறையில் அடைக்கப்பார்க்கிறார்கள். பொருள் விலை அதிகரிப்பை மறைப்பதற்காக, என் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்று கூறினார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

மகிந்த ராஜபக்ஷவின் இன்னொரு மகனான கடற்படை அதிகாரியாக நியமனம் பெற்றிருந்த யோஷித ராஜபக்ஷவும் நிதி மோசடி குற்றச்சாட்டில் கொழும்பு வெலிக்கட சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)








**வீட்டுப் பணிப் பெண் தேவை**

இலவச உணவு, இலவச
தங்குமிடம் சம்பளம் நேரில் பேசித்
தீர்க்கலாம்.
இடம் : வல்வெட்டித்துறை

தொடர்புகளுக்கு
077 599 5659
(3818)





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.